# பொருளடக்கம்


## 1 - 20 வரலாறு

▪முக்கிய தினங்கள் ▪உலக அமைப்புகள் – உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்கள் ▪பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம் ▪சிறந்த நபர்கள் ▪விளையாட்டு ▪புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள் ▪விருதுகள் மற்றும் கௌரவங்கள் ▪கலாச்சாரம் ▪சமீபத்திய வரலாற்று நகழ்வு ▪இந்தியா மற்றும் அண்டை நாடுகள் ▪நியமனங்கள்




## 21- 25 அரசியல் அறிவியல்

▪இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை ▪சமீபத்திய நீதிமன்ற தீர்ப்புகள் ▪பொதுத் தேர்தலில் நடக்கும் பிரச்சனைகள் ▪அரசியல் கட்சிகள் மற்றும் இந்திய அரசியல் அமைப்புகள் ▪மத்திய அரசாங்கம் – பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்




## 26- 27 புவியியல்

▪சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை




## 28 - 31 பொருளாதாரம்

▪புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசுத்துறை




32 - 41 **அறிவியல்**

- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்
- ஊடகம் மற்றும் தொலைத்தொடர்பு







42 **தினசரி தேசிய நிகழ்வு**




60 **சர்வதேச நிகழ்வு**




65 **தமிழ்நாடு**

# 1. வரலாறு





## 1.1 முக்கிய தினங்கள்

| | | |
|---|---|---|
| | தேசிய ஊட்டச்சத்து மாதம் | ▪ ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் தேசிய ஊட்டச்சத்து மாதம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.<br>▪ உகந்த ஊட்டச்சத்தின் முக்கியத்துவத்தை அனைவருக்கும் கற்பிப்பதற்காக இந்தியா முழுவதும் இந்த மாதம் கொண்டாடப்படும்.<br>▪ ஊட்டச்சத்து மாதம் முன்னதாக செப்டம்பர் 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் கொண்டாடப்பட்டது.<br>**இந்தியாவின் விவசாய நிதி**<br>▪ ஒவ்வொரு மாவட்டத்தின் பயிர்கள் மற்றும் அவற்றின் ஊட்டச்சத்து மதிப்பு பற்றிய தகவல்கள் தயாரிக்கப்படுகின்றன. |
| **செப்டம்பர் 1 முதல் 15ம் தேதி** | ”ஸ்வச்த்தா பக்வாடா” | ▪ மத்திய உரங்கள் துறை அமைச்சகம் செப்டம்பர் 1 முதல் 15ம் தேதி வரை ஸ்வச்த்தா பக்வாடா அபியான் கடைப்பிடிக்க உள்ளதாக அறிவித்துள்ளது.<br>▪ உரங்கள் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள அனைத்து பொதுத்துறை நிறுவனங்கள் இந்த ஸ்வச்த்தா பக்வாடா அபியான் கடைப்பிடிக்க உள்ளது.<br>▪ ஸ்வச்த்தா பக்வாடா கடைபிடிக்கும் துறைகள் அனைத்தும் ஸ்வச்த்தா சமிக்ஷா என்ற இணையவழி கண்காணிப்பு மூலம் கவனிக்கப்படும். |
| **செப்டம்பர் 2** | உலக தேங்காய் தினம் | ▪ மையக்கருத்து - *“Invest in Coconut to save the world”.* |

| | | |
|---|---|---|
| **செப்டம்பர் 8** | சர்வதேச எழுத்தறிவு தினம் | ▪ மையக்கருத்து - *Literacy teaching and learning in the COVID-19 crisis and beyond.* |
| **செப்டம்பர் 9** | ஹிமாலயன் திவாஸ் | ▪ உத்தரகாண்ட் மாநில அரசு ஹிமாலய திவாஸ் செப்டம்பர் 9 அன்று கொண்டாடியது. மையக்கருத்து - *"Himalayas and Nature".* |
| **செப்டம்பர் 11** | 15வது தேசிய காடுகள் தியாகி தினம் | ▪ பதினைந்தாவது தேசிய வன தியாகிகள் தினத்தன்று, நெருப்பு, கடத்தல்காரார்கள் மற்றும் சட்ட விரோத கும்பல்களில் இருந்து நமது இயற்கை வளங்களை காக்கும் பணியில் தமது இன்னுயிரை ஈந்தவர்களுக்கு மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சர் திரு. பிரகாஷ் ஜவடேகர் அஞ்சலி செலுத்தினார். |
| **செப்டம்பர் 12** | உலக முதல் உதவி தினம் | ▪ மையக்கருத்து - *"First Aid Saves Lives".* |
| **செப்டம்பர் 14** | இந்தி தினம் | ▪ செப்டம்பர் மாதம் 14ஆம் தேதியன்று இந்தி நாள் கொண்டாடப்படுகிறது. கடந்த 1949ஆம் ஆண்டு செப்டம்பர் 14ஆம் தேதி சுதந்திர இந்தியாவின் அலுவல் மொழி என்ற அந்தஸ்தை இந்தி பெற்றது. இதனை நினைவு கூறும் வகையில் இந்தி நாள் கொண்டாடப்படுகிறது. |
| **செப்டம்பர் 16** | உலக ஓசோன் தினம் | ▪ மையக்கருத்து - *"Ozone for life: 35 years of ozone layer protection".* |
| **செப்டம்பர் 18** | உலக நீர் கண்காணிப்பு தினம் | ▪ மையக்கருத்து - *'Solve Water.'* |
| **செப்டம்பர் 25** | தேசிய அந்தோதயா தினம் | ▪ பண்டித் தீனதயாள் உபாத்யாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் செப்டம்பர் 25 தேசிய அந்தோதயா தினமாக கொண்டாடப்படுகிறது.<br>▪ மத்திய அரசு கடந்த 2014 செப்டம்பர் 25 முதல் இத்தினம் கொண்டாடப்படுகிறது. |
| **செப்டம்பர் 26** | உலக சுற்றுச்சூழல் சுகாதார தினம் | ▪ மையக்கருத்து - *Environmental health, a key public health intervention in disease pandemic prevention.* |
| **செப்டம்பர் 29** | உலக இதய தினம் | ▪ மையக்கருத்து - *"Use Heart To Beat Cardiovascular Disease".* |

# 1.2 பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்

### "பினாகா" ராக்கெட் வெடிகுண்டு ஏவுகளம்

- 'பினாகா' ராக்கெட் வெடிகுண்டு ஏவுகளங்களை உருவாக்க ரூ.2,580 கோடியிலான ஒப்பந்தத்தை உள்நாட்டு தனியார் நிறுவனங்களுடன் பாதுகாப்புத் துறை அமைச்சகம் மேற்கொண்டுள்ளது.
- பல்முனை தாக்குதல் நடத்தும் 'பினாகா' ஏவுகள தொழில்நுட்பத்தை இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) வடிவமைத்துள்ளது.
- உள்நாட்டிலேயே தயாரிக்கப்படும் இந்த ஏவுகளங்களை சீனா, பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் நிறுத்தப்படும் 6 பினாகா படைப் பிரிவினருக்கு வழங்கும்.
- 2024-ஆம் ஆண்டு இந்த ராக்கெட் வெடிகுண்டு ஏவுதளங்களை பயன்பாட்டுக்கு கொண்டு வரவும் திட்டமிடப்பட்டுள்ளது.
- இதற்காக சுயசார்பு இந்தியா திட்டத்தின் கீழ் டாடா மின் நிறுவனம், லார்ஸன் & டியூப்ரோ நிறுவனம் ஆகியவற்றுடன் பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

### சர்வதேச இராணுவ தொழில்நுட்ப மன்றம்

- ஆறாவது சர்வதேச இராணுவ தொழில்நுட்ப மன்றம் 2020 ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் நடைபெற்றது.
- ரஷ்ய பாதுகாப்பு இராணுவம் மற்றும் சர்வதேச காங்கிரஸ் மற்றும் கண்காட்சி லிமிடட் "இராணுவம் 2020"-க்கு ஏற்பாடு செய்தது.
- இம்மன்றத்தில் உலகளவில் உள்ள ராணுவ தலைவர்கள் முப்பரிமாண தொழில்நுட்பம் (3D) பயன்படுத்தி ராணுவ பொருட்களை உற்பத்தி செய்வது பற்றிய விவாதம் மேற்கொள்ளப்பட்டது. 2015ஆம் ஆண்டு முதல் இம்மன்றம் நடைபெற்று வருகிறது.

### இந்திரா நேவி-20

- இந்திய மற்றும் ரஷ்ய கடற்படைகளுக்கிடையே இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் இருதரப்பு கடல் பயிற்சியான இந்திரா நேவியின் 11வது பதிப்பு, 4 முதல் 5 செப்டம்பர், 2020 வரை வங்கக் கடலில் நடைபெற்றது.
- 2003-இல் தொடங்கப்பட்ட இந்திரா நேவி, இரு கடற்படைகளுக்கிடையேயான நீண்டகால உறவை வெளிப்படுத்துகிறது.
- இரண்டாம் உலகப் போரின் 75வது ஆண்டைக் குறிக்கும் விதமாகவும், இருதரப்பு ஒத்துழைப்பு சார்ந்த விஷயங்கள் குறித்து விவாதிப்பதற்காகவும் பாதுகாப்பு அமைச்சரின் இந்தப் பயணம் அமைந்துள்ளது.

### இந்தியா மற்றும் ஜப்பான் இடையே பாதுகாப்பு ஒப்பந்தம்

- கூட்டு பயிற்சியில், பொருட்கள் மற்றும் சேவைகளை இரு நாட்டு படைகள் பரஸ்பரம் வழங்குவது தொடர்பாக இந்தியா மற்றும் ஜப்பான் ஆகியவை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- இருதரப்பு கூட்டு பயிற்சி நடவடிக்கைகள், ஐ.நா அமைதிப் பணி நடவடிக்கைகள், சர்வதேச நிவாரண நடவடிக்கைகள் போன்றவற்றில் ஈடுபடும்போது, பொருட்கள் மற்றும் சேவைகளை இருநாட்டு ராணுவப் படைகள் பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதில் ஒத்துழைப்புடன் செயல்பட இந்த ஒப்பந்தம் வழிவகுக்கிறது.

### கடல்சார் பிரச்சனைகளை எளிதில் தீர்க்கும் 'சரோத்-துறைமுகங்கள்' அமைப்பு

- கடல்சார் பிரச்சனைகளை எளிதில் தீர்க்கும் 'சரோத் -துறைமுகங்கள் அமைப்பை மத்திய கப்பல்போக்குவரத்துதுறை இணைஅமைச்சர் திரு.மன்சுக் மாண்டவியா காணொலி காட்சி மூலம் தில்லியில் தொடங்கி வைத்தார்.

**இந்திய விமான படையில் ரஃபேல் போர் விமானம் இணைப்பு**

- செப்டம்பர் 10ஆம் தேதி ரபேல் விமானம் ஐந்து இந்திய விமான படையில் முறையாக இணைக்கப்பட்டது. இதுவரை 10 ரஃபேல் ஜெட் விமானங்கள் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளன.
- அம்பாலா விமான தளத்தில் 5 ரஃபேல் போர் விமானங்கள் இந்திய விமானப்படையில் முறையாக சேர்க்கப்பட்டது.

**டி.ஆர்.டி.ஓ.வின் பாதுகாப்பு ஆய்வகம் தொடக்கம்**

- மத்திய பிரதேச மாநிலத்தின் மோரேனா மாவட்டத்தில் கைலராஸ்-ஜவுரா பகுதியில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் புதிய ஆய்வகம் தொடங்கி உள்ளது.
- முதலமைச்சர் சிவராஜ் சிங் சௌஹான் 350 ஹெக்டேர் பரப்பளவில் இதை தொடங்கி வைத்தார். மேலும் மோரேனா மாவட்டத்தில் 257 கோடியில் மருத்துவ கல்லூரியும் தொடங்கி வைக்கப்பட்டது.

**'பாதுகாப்பு தொழில்நுட்பம் மற்றும் வணிக முயற்சி கூட்டம்**

- இந்தியா-அமெரிக்கா பாதுகாப்பு கூட்டமைப்பு சார்பாக 10வது பாதுகாப்பு தொழில்நுட்ப மற்றும் வணிக முயற்சி கூட்டம் மெய்நிகர் காட்சி மூலம் நடைபெற்றது.
- இக்கூட்டத்தின் முக்கிய நோக்கம் பாதுகாப்பு உபகரணங்களில் இணைந்து உற்பத்தி மற்றும் மேம்பாடு, பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் ஆகியற்றில் கவனம் செலுத்துதல் ஆகும்.
- பாதுகாப்பு அமைச்சகத்தின் செயலாளர் ராஜ்குமார் மற்றும் அமெரிக்கா பாதுகாப்பு துறை சேர்ந்த எம்.லார்ட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**இந்திய போர்க் கப்பல்களில் பணிபுரிவதற்கு முதல்முறையாக பெண்கள் தேர்வு**

- இந்திய கடற்படையில் முதல்முறையாக போர்க் கப்பல்களில் இருந்து ஹெலிகாப்டர்களை இயக்கும் குழுவில் பெண்கள் இருவர் இணைக்கப்பட்டுள்ளனர்.
- கேரள மாநிலம் கொச்சியில் இந்திய கடற்படையின் தென்மண்டல தலைமையகம் உள்ளது.
- இதில் ரித்தி சிங், குமுதினி தியாகி ஆகிய இருவர் போர்க் கப்பல்களில் இருந்து ஹெலிகாப்டர்களை இயக்கும் குழுவில் இணைக்கப்பட்டனர்.
- போர்க் கப்பல்களில் இருந்து ஹெலிகாப்டர்களை இயக்கும் குழுவில் பெண்கள் இருவர் இணைக்கப்படுவது இதுவே முதல்முறை என்று தெரிவிக்கப்பட்டது.

**இந்திய பெருங்கடலில் இந்தியா-ஆஸ்திரேலியா கடற்படைகளின் கூட்டுப்பயிற்சி**

- அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ரஷியா ஆகிய நாடுகளின் கடற்படைகளுடன் இந்திய கடற்படை கூட்டுப் பயிற்சியை மேற்கொண்டுள்ளது. அந்த வரிசையில் தற்போது இந்தியா-ஆஸ்திரேலியா கடற்படைகளின் 2 நாள் கூட்டு பயிற்சி Passage Exercise (PASSEX) தொடங்கியது.
- இந்திய பெருங்கடலின் கிழக்கு பகுதியில் நடைபெறும் இந்த பயிற்சியில், இந்திய போர்கப்பல்களான ஐ.என்.எஸ் சயாத்ரி, கர்முக், ஆஸ்திரேலிய போர் கப்பலான ஹோபர்ட் மற்றும் இரு நாடுகளின் ஹெலிகாப்டர்கள் பங்கேற்றுள்ளன.

**வானில் இலக்குகளை தாக்கி அழிக்கும் அபியாஸ் ஏவுகணை சோதனை வெற்றி**

- வானில் உள்ள இலக்குகளை அதிவேகத்தில் சென்று தாக்கக்கூடிய அபியாஸ் ஏவுகணை வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.

- ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு முற்றிலும் உள்நாட்டு தொழில்நுட்பங்களை பயன்படுத்தி ஏவுகணைகளை தயார் செய்து அவற்றை வெற்றிகரமாக சோதித்து வருகிறது.
- அந்த வகையில் வானில் உள்ள இலக்குகளை அதிவேகத்தில் சென்று தாக்கக்கூடிய அபியாஸ் ஏவுகணை வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது. ஒடிசா மாநிலம் பாலசோரில் உள்ள ஏவுதளத்தில் இருந்து இந்த சோதனை நடத்தப்பட்டது. ஏவு வாகனத்தில் இருந்து சீறிப்பாய்ந்த அபியாஸ் ஏவுகணை நிர்ணயிக்கப்பட்ட இலக்கை துல்லியமாக தாக்கி அழித்தது.

### ரபேல் விமானத்தின் முதல் பெண் பைலட்

- இந்திய விமானப்படையில் முறையாக சேர்க்கப்பட்ட சிவாங்கி சிங், இந்தியாவின் முதல் பெண் ரஃபேல் விமான ஓட்டியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- வாரணாசியை சேர்ந்த சிவாங்கி சிங், தற்போது அம்பாலாவை தளமாகக் கொண்ட IAF இன் புதிய போர் விமானத்தில் பறக்க பயிற்சி பெறுகிறார். அவர் மிக்-21 பைசன் விமானத்தை இயக்கி வந்தார்.

### பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங் ‘பாதுகாப்பு இந்தியா ஸ்டார்ட் அப் சவால்-4’ ஐத் தொடங்கி வைக்கிறார்

- பாதுகாப்பு அமைச்சர் திரு.நாஜ்நாத் சிங் புதுதில்லியில் பாதுகாப்புத் துறையில் புதுமைகளைப் புகுத்தி, அது தொடர்பான சூழலை விரிவுப்படுத்தும் வகையில், டிஸ்க் 4 எனப்படும் “பாதுகாப்பு இந்தியா ஸ்டார்ட் அப் சவால் 4“ஐ, iDEX நிகழ்ச்சியின் போது தொடங்கி வைத்தார்.
- iDEX முன் முயற்சியை பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஏப்ரல் 18-ம் தேதி தொடங்கி வைத்தார். பாதுகாப்புத் துறையை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இது தொடங்கப்பட்டது.

# 1.3 உலக அமைப்புகள் - உடன்படிக்கைகள் மற்றும் மாநாடுகள்

### ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு

- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டில் பங்கேற்பதற்காக பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ரஷியாவுக்கு பயணம் மேற்கொண்டார்.
- சீனா, ரஷியா, இந்தியா, பாகிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான் ஆகிய நாடுகள் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் உள்ளன.

### கரோனாவால் உலகில் பெண்கள், பெண் குழந்தைகள் மோசமான வறுமைக்குள் தள்ளப்படுவார்கள் ஐ.நா. ஆய்வில் எச்சரிக்கை

- 2021-ம் ஆண்டுக்குள் கரோனாவில் உலகில் 4.70 கோடி பெண்கள், பெண் குழந்தைகள் மிகமோசமான வறுமைக்குள் தள்ளப்படுவார்கள். கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக பெண்கள் அடைந்த முன்னேற்றம் அனைத்தும் பின்னோக்கி நகர்த்தப்படும் என்று ஐநா நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.
- ஐக்கிய நாடுகள் சபையின் பெண்கள் மற்றும் மேம்பாட்டுத் திட்டம் சார்பில் நடத்தப்பட்ட ஆய்வு அறிக்கை வெளியிட்டப்பட்டது.
- இதன் மூலம் மோசமான வறுமையில் வாடும் பெண்கள், பெண் குழந்தைகள் எண்ணிக்கை 43.50 கோடியாக அதிகரிக்கும்.
- 2030-ம் ஆண்டுக்குள் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையிலான வேறுபாடு 100-118 என்ற நிலையிலிருந்து 100-121 ஆக அதிகரிக்கும்.
- மத்திய, தெற்காசியா, மற்றும் சஹாரா ஆப்பிரிக்கா ஆகிய பகுதிகளில்தான் மோசமான வறுமைநிலை அதிகரிக்கக்கூடும்.

## உலக சுகாதார நிறுவனத்தின் தென்கிழக்கு ஆசிய மண்டலத்தின் 73வது கூட்டம்

- உலக சுகாதார நிறுவனத்தின் தென் கிழக்கு ஆசிய மண்டலத்தின் 73வது கூட்டத்தில் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர். ஹர்ஷ் வர்தன் பங்கேற்றார்.
- 73வது கூட்டம் தாய்லாந்து, பாங்காக்கில் நடைபெற்றது.
- சுகாதார இலக்குகளை அடைய , தேசிய சுகாதார திட்டம், ஆயஷ்மான் பாரத் திட்டம் ஆகியவை கொண்டுவரப்பட்டதையும் இந்த கூட்டத்தில் டாக்டர் ஹர்ஷ் வர்தன் விளக்கினார்.
- மக்களுக்கு அத்தியாவசிய மருந்துகளை மலிவு விலையில் வழங்க, ஜன் அசுவாதி மையங்கள் திறக்கப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.
- போலியோ, டெட்டனஸ், தாய், சேய் இறப்பு குறைந்துள்ளதையும் மத்திய அமைச்சர் திரு.ஹர்ஸ்வர்தன் சுட்டிக் காட்டினார். காசநோயை 2025-ம் ஆண்டுக்குள் ஒழிக்க இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளதாகவும், நிணநீர் ஃபைலேரியாஸிஸ் மற்றும் கலா-அசார் போன்ற நோய்களை ஒழிக்க உறுதி பூண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

## இந்தியாவில் குழந்தைகள் இறப்பு விகிதம் குறைந்துள்ளது: ஐ.நா. அறிக்கையில் தகவல்

- இந்தியாவில் கடந்த 1990-ஆம் ஆண்டு முதல் 2019-ஆம் ஆண்டு வரை குழந்தைகள் இறப்பு விகிதம் பெருமளவில் குறைந்துள்ளதாக ஐ.நா. ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- உலக நாடுகளில் குழந்தைகளின் இறப்பு விகிதம் குறித்து ஐ.நா.வின் துணை அமைப்பான யுனிசெஃப், உலக சுகாதார அமைப்புடன் இணைந்து ஆய்வு நடத்தியது.
- உலக நாடுகளில் கடந்த 1990-ஆம் ஆண்டில் 1.25 கோடி 5 வயதுக்குள்பட்ட குழந்தைகள் இறந்தனர். இந்த எண்ணிக்கை கடந்த 2019-ஆம் ஆண்டில் 52 லட்சமாக குறைந்துள்ளது.

## 2023ஆம் ஆண்டுக்குள் தொழிற்சாலைகள் கொழுப்புச் சத்து உணவுகள் குறைக்க இலக்கு

- உலக சுகாதார அமைப்பு “Countdown to 2023: WHO report on global trans-fat elimination 2020” என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 2021ஆம் ஆண்டின் இறுதிக்குள் 58 நாடுகள் 3.2 பில்லியன் மக்களை தீங்கு விளைவிக்கும் பொருட்களிலிருந்து பாதுகாக்க சட்டங்களை இயற்ற வேண்டும் என தெரிவித்துள்ளது.
- இந்தியா போன்ற 100க்கும் மேற்பட்ட நாடுகள் இந்த தீங்கு விளைவிக்கும் பொருட்களையும் அவற்றின் உணவு விநியோகத்திலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.
- மேலும் 2023ஆம் ஆண்டுக்குள் கொழுப்பு சத்து நிறைந்த உணவுகள் தொழிற்சாலைகள் உற்பத்தி நிறுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- தொழில்துறை ரீதியாக உற்பத்தி செய்யப்படும் கொழுப்பு உணவுகளில் 2% எண்ணெய்கள் குறைத்து கொள்ளவும் அல்லது ஹைட்ரஜனேற்றப்பட்ட எண்ணெய்களை தடை செய்யவும் உலக சுகாதார அமைப்பு பரிந்துரை செய்து உள்ளது.
- தினசரி 1 சதவீதம் கொழுப்பு சத்து உணவுகளை உட்கொள்வது குறைத்து கொள்வது மூலம் ஒரு நாளைக்கான 2000 கலோரி உணவில் 2.2 கிராம் கொழுப்புசத்து சேர்வது குறையும் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

## ஐக்கிய நாடுகள் சபையின் 74வது கலாச்சார அமைதி அமர்வு

- ஐக்கிய நாடுகள் சபையின் 74வது கலாச்சார அமைதி அமர்வு ஐ.நா.சபையின் தலைவரான அன்டோனியா குட்ரஸ் தலைமையில் நடைபெற்றது.
- “The Culture of Peace: Change our World for the better in the age of Covid-19” என்பது இதன் மையக்கருத்தாகும்.

- இந்தியாவில் இருந்து ஆலோசகரான பௌவோமி திரிபாதி என்பவர் கலந்து கொண்டார்.
- "Education, Covid-19 and the Culture of Peace" என்ற தலைப்பில் ஒரு அமர்வும் நடைபெற்றது. அமெரிக்காவின் சிந்தனையாளர் குழுவான சர்வதேச அமைதி நிறுவனம் ஏற்பாடு செய்தது.

### 27வது ஆசியான் பிராந்திய மன்றம்

- 27வது ஆசியான் பிராந்திய மன்ற கூட்டத்தில் இந்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் வி.முர்லேதரன் கலந்து கொண்டார்.
- இக்கூட்டத்தில் இந்தியாவின் சார்பாக கோவிட்-19, தீவிரவாதம், கடல் பாதுகாப்பு ஆகியவை குறித்து எடுத்துரைக்கப்பட்டது.
- 2020-2025 உட்பட்ட வருடங்களில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் "ஹா நோய்" செயல் திட்டம் II (HPOA) 27 ஆவது ஆசியான் பிராந்திய மன்றம் ஏற்றுக்கொண்டது.

**ஆசியன் பிராந்திய மன்ற நாடுகள்**

| | |
|---|---|
| இந்தோனேஷியா | மலேசியா |
| பிலிப்பைன்ஸ் | சிங்கப்பூர் |
| தாய்லாந்து | புருனே |
| வியட்நாம் | லாவோஸ் |
| கம்போடியா | மியான்மர் |

- பொதுவான நலன்களைக்கொண்ட அரசியல் மற்றும் பாதுகாப்பு பிரச்சனைகள் குறித்த ஆலோசனைகளை வழங்குவதற்கான ஒரு முக்கியமான தளமாகும்.

### பிரிக்ஸ் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கூட்டம்

- 10வது பிரிக்ஸ் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கூட்டம் காணொலி வாயிலாக நடைபெற்றது.
- இந்நிகழ்ச்சியை தற்போது தலைமை நாடான ரஷ்யா நடத்தியது.
- உலகளவில் பயங்கரவாதம், தீவிரவாதத்தையும் எதிர்த்தும் பாதுகாப்பு பிரச்சனைகள் பற்றியும் விவாதிக்கப்பட்டது.

### சிறார் திருமணம் தடுப்பதில் இந்தியா சிறப்பு:ஐ.நா பாராட்டு

- சிறார் திருமணங்களைத் தடுப்பதற்கான திட்டங்களைச் செயல்படுத்தியதில் இந்தியா சிறப்பாகப் பணியாற்றியதாக ஐ.நா. பாராட்டு தெரிவித்துள்ளது.
- 'சிறார், கட்டாய திருமணங்கள் விவகாரம்' என்ற அறிக்கை வெளியிடப்பட்டது. கடந்த 2018-ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் கடந்த மே மாதம் வரை உலக நாடுகளில் சிறார் திருமணங்கள் நடைபெற்றது தொடர்பாகவும் அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.
- இந்தியாவில் யுனிசெஃப் அமைப்புடன் இணைந்து ஐ.நா. செயல்பட்டு வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில் 2.5 கோடி சிறார் திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக யுனிசெஃப் தெரிவித்துள்ளது.
- பெண்களுக்குக் கல்வி அளிப்பதும் சிறார் திருமணங்களின் விளைவுகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியதுமே அதற்குக் காரணம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 'சுயசார்பு இந்தியா' திட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது : ஐஎம்எஃப்

- பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசின் சுயசார்பு இந்தியா திட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக பன்னாட்டு நிதியம் (ஐஎம்எஃப்) தெரிவித்துள்ளது.
- சுகாதாரம் தொடர்பான ஐ.நா.வின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைவதற்கு நீதி ஆயோக் அமைப்பு, நிதியமைச்சகம் ஆகியவற்றுடன் இணைந்து பன்னாட்டு நிதியம் செயல்பட்டு வருகிறது.

# 1.4 சிறந்த நபர்கள்

### பிரணாப் முகர்ஜி காலமானார்



- முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி காலமானார்.
- நாட்டின் 13-வது குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி
- பிரணாப் முகர்ஜி, மேற்கு வங்கத்தில் உள்ள மிரடி எனும் சிறு கிராமத்தில் 1935-ஆம் ஆண்டு டிசம்பர் 11-ம் தேதி பிறந்தார்
- 5 முறை மாநிலங்களவை எம்பியாக தேர்வு செய்யப்பட்டவர்.
- ஆசிரியர், பத்திரிகையாளர், சமூக சேவகர், அரசியல்வாதி என பன்முகத் திறன் கொண்டவர்.
- 1982-ஆம் ஆண்டு இந்திரா காந்தி தலைமையிலான மத்திய அரசில் நிதியமைச்சராக பதவி வகித்தவர்.
- 47 வயதில் மத்திய நிதியமைச்சர் பொறுப்பை பிரணாப் ஏற்ற போது, நாட்டின் மிக இளம் வயது நிதியமைச்சர் என்ற பெருமையும் பிரணாப்புக்குக் கிடைத்தது.
- 2008-ஆம் ஆண்டு பத்ம விபூஷண் விருது வழங்கப்பட்டது.
- 2019-ஆம் ஆண்டு பிரணாப் முகர்ஜிக்கு நாட்டின் மிக உயரிய விருதான பாரத ரத்னா விருது வழங்கி மோடி தலைமையிலான மத்திய அரசு கௌரவித்தது.

### இந்தியாவின் முதல் பெண் இதய நோய் நிபுணர் பத்மாவதி காலமானார்

- இந்தியாவின் முதல் பெண் இருதயநோய் நிபுணர் பத்மாவதி (வயது 103) கரோனா பாதிப்பால் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.



- 1917ம் ஆண்டு ஒருங்கிணைந்த இந்தியாவில் உள்ள பர்மாவில் பிறந்த பத்மாவதி, இந்தியாவின் முதல் பெண் இருதய நோய் நிபுணர் என்ற சாதனையை படைத்தார். ”காட் மதர் ஆப் கார்டியாலஜி” என புகழப்பட்டவர்.
- இவரது மருத்துவ சேவையை பாராட்டி, இந்திய அரசு, கடந்த 1967ம் ஆண்டு பத்ம பூஷன் விருதும் 1992ம் ஆண்டு பத்ம விபூஷன் விருதும் வழங்கி கவுரவித்தது.

### கேசவானந்த பாரதி காலமானார்

- அடிப்படைஉரிமைகள்தொடர்பானவழக்கில் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் இருக்கிறதா என்பது குறித்த வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்தி வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பைப் பெற்றுக்கொடுத்த கேசவானந்த பாரதி காலமானார்.
- அரசியலமைப்புச் சட்டத்தை திருத்தும் உரிமை, அடிப்படை உரிமைகளைத் திருத்தும் உரிமை நாடாளுமன்றத்துக்கு இருக்கிறதா இல்லையா என்று கேரளாவின் எதனீர் மடத்தின் பீடாதிபதி கேசவானந்த பாரதி தொடர்ந்த வழக்கில் கடந்த 1973-ம் ஆண்டு வரலாற்றுச் சிறப்பு மிகுந்த தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கியது.

### விஞ்ஞானி கோவிந்த் ஸ்வரூப் மறைவு

- ரேடியோ வானியலாளர் கோவிந்த் ஸ்வருப் மறைந்தார்.
- மகாராஷ்டிரத்தில் மிகப்பெரிய மீட்டர்வேவ் ரேடியோதொலைநோக்கி, உதகமண்டலத்தில் உள்ள ரேடியோ தொலைநோக்கிகளை அமைத்து இந்திய வானியல் துறைக்கு பெரும்பங்காற்றியுள்ளார்.

- ரேடியோ வானியலில் உலகில் முன்னணி நாடுகள் வரிசையில் இந்தியாவை இடம் பெறச் செய்தவர் இவர் என்பது குறிப்பிடத் தக்கது.
- அவரது பங்களிப்புகளைப் பாராட்டி பத்மஸ்ரீ உள்ளிட்ட பல வெகுமதிகளைப் பெற்றார்.

### சூரிய சக்தியில் இயங்கும் விமானத்தில் இருந்து தாவிய முதல் நபர்



- சூரிய சக்தியால் இயங்கும் விமானத்திலிருந்து தாவிய உலகின் முதல் நபர் ரபேர் டோம்கான் என்பவர் ஆவார்.
- சுவிட்சர்லாந்தின் 1520 மீட்டரில் உயரத்தில் இருந்து மணிக்கு 150 கிலோ மீட்டர் வேகத்தில் தரையை எட்டினார்.

### சமூக ஆர்வலர் சுவாமி அக்னிவேஷ் காலமானார்

- சமூக ஆர்வலர் சுவாமி அக்னிவேஷ் காலமானார்.
- ஆந்திர மாநிலத்தில் பிறந்த சுவாமி அக்னிவேஷ் பெண் சிசுக்கொலை, கொத்தடிமை தொழிலாளர் முறையை எதிர்த்து போராடியது மற்றும் பெண்களின் முன்னேற்றத்துக்காக குரல் எழுப்பியதன் மூலம் நன்கு அறியப்பட்டவர்.
- கடந்த 2010ஆம் ஆண்டு மாவோயிஸ்ட் அமைப்பினருடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த மத்திய அரசால் பணிக்கப்பட்டார்.
- காஷ்மீரில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தார்.

### மூத்த பத்திரிகையாளர் ம.வீரபாகு காலமானார்

- திருநெல்வேலியைச் சேர்ந்த வீரபாகு, விஜயபாரதம் தேசிய வார இதழின் ஆசிரியராக 10 ஆண்டுகளாக பதவி வகித்தார்.
- இவர், 1972-ஆம் ஆண்டு, ஆர்எஸ்எஸ் அமைப்பின் முழுநேர ஊழியராக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.
- 1981-ஆம் ஆண்டு, மார்ச் 16-ஆம் தேதி நடைபெற்ற இந்த மிகப் பெரிய மக்கள் எழுச்சிக்கு, மூல காரணமாக இருந்தவர் வீரபாகு.

### உலகின் டாப் 50 சிந்தனையாளர்கள் பட்டியல் முதலிடத்தில் கேரள சுகாதார அமைச்சர் ஷைலஜா

- கேரள மாநிலத்தில் கரோனா தடுப்புப் பணிகளில் முன்மாதிரியாகச் செயல்பட்டு, தொற்றைக் கட்டுக்குள் வைத்த மாநில சுகாதார அமைச்சர் கே.கே.ஷைலஜா, உலகின் 50 சிந்தனையாளர்களில் முதலிடத்தைப் பிடித்திருக்கிறார்.
- இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பிராஸ்பெக்ட் என்ற பத்திரிகை வெளியிட்டுள்ளது. இந்த சாதனையாளர்கள் பட்டியலை நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டன் இரண்டாவது இடத்தில் உள்ளார்.


### கலைத்துறை அறிஞர் கபிலா வாத்ஸ்யாயன் காலமானார்



- கலைத்துறை அறிஞரும், கல்வியாளருமான கபிலா வாத்ஸ்யாயன் தில்லியில் காலமானார்.
- இந்திரா காந்தி தேசிய கலை மையத்தின் நிறுவன இயக்குநரான அவர், கடந்த 2011-ஆம் ஆண்டு பத்ம விபூஷண் விருது அளித்து கௌரவிக்கப்பட்டார்.
- மாநிலங்களவை நியமன எம்.பி.யாகவும் பணியாற்றியுள்ளார்.

- கலைகள் மற்றும் அதன் வரலாறு தொடர்பாக 20 புத்தகங்கள் வரை எழுதியுள்ளார்.

### கோவை ஆர்ய வைத்திய சாலை பார்மஸி தலைவர் கிருஷ்ணகுமார் காலமானார்



- பத்மஸ்ரீ விருது வென்ற கோவை ஆர்ய வைத்திய சாலை பார்மஸியின் தலைவர் கிருஷ்ணகுமார் காலமானார்.
- இவர் கேரள சொர்னூர் ஆயுர்வேத கல்லூரியில் ஆயுர்வேதம் பயின்றவர். இந்திய அளவில் ஆயுர்வேத மருந்துகள், ஆயுர்வேத ஆராய்ச்சிகள், ஆயுர்வேத படிப்புகள் உள்ளிட்டவற்றில் சிறந்து விளங்கினார்.
- ஆயுர்வேத சிகிச்சையில் சிறந்து விளங்கியதற்காக, கடந்த 2009ம் ஆண்டு மத்திய அரசின் உயரிய விருதான பத்மஸ்ரீ விருது வழங்கி கவுரவிக்கப்பட்டார்.

### முன்னாள் ரிசர்வ் வங்கியின் ஆளுநர் அமிதாப் கோஷ் காலமானார்

- மிகக்குறைந்த காலமே ரிசர்வ் வங்கியின் ஆளுநராக இருந்த அமிதாப் கோஷ் காலமானார்.
- 16வது இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநராகவும், 1985 ஜனவரி 15 முதல் 1985 பிப்ரவரி 4 வரையில் 21 நாள்கள் மட்டுமே பதவி வகித்தவர் ஆவார்.
- இவருக்கு அடுத்து 17வது ஆளுநராக RN மல்கோத்ரா பதவி வகித்தார்.

### ஐ.நா. இலக்குகளுக்கான இளம் தலைவராக இந்தியர் தேர்வு

- ஐ.நா.வின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளுக்கான இளம் தலைவர்களில் ஒருவராக 18 வயதே நிரம்பிய இந்தியரான உதித் சிங்கால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- சர்வதேச அளவில் நீடித்த வளர்ச்சியை அடைவதற்காக 17 இலக்குகளை ஐ.நா. நிர்ணயித்துள்ளது. அந்த இலக்குகளை ஊக்குவிக்கும் வகையில் செயல்படும் இளைஞர்களை ஆண்டுதோறும் இளம் தலைவர்களாகத் தேர்ந்தெடுப்பதை ஐ.நா. வழக்கமாகக் கொண்டுள்ளது.
- கண்ணாடிப் பொருள்கள் மக்குவதற்கு பல ஆண்டுகள் ஆகும் என்பதால், அப்பொருள்கள் நிலத்தில் சேகரமாவதைத் தடுக்கும் நோக்கில் "கிளாஸ்2சேண்ட்" என்ற திட்டத்தை உதித் சிங்கால் தொடக்கினார்.
- அதன்படி, கண்ணாடிப் பொருள்களை சிறிய துகள்களாக நொறுக்கி மணலாகப் பயன்படுத்துவதை அவர் ஊக்குவித்தார். இத்திட்டத்தை செயல்படுத்தியதற்காக ஐ.நா. வால் இளம் தலைவராக உதித் சிங்கால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

### 'டைம்' இதழின் 100 செல்வாக்குமிக்க நபர்கள் பட்டியலில் பிரதமர் மோடி

- இந்த ஆண்டின் செல்வாக்குமிக்க 100 நபர்களின் பட்டியலை அமெரிக்காவின் பிரபல "டைம்' வார இதழ் வெளியிட்டுள்ளது. இதில் பிரதமர் மோடியின் பெயரும் இடம்பெற்றுள்ளது.
- தில்லி ஷாஹின் பாக் பகுதியில் குடியரிமை திருத்தச் சட்டத்துக்கு (சிஏஏ) எதிராக நடைபெற்ற போராட்டத்தை வழிநடத்திச் சென்ற பில்கிஸ் என்ற 82 வயது மூதாட்டியின் பெயரும் அந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.
- இதுதவிர ஹிந்தி திரைப்பட நடிகர் ஆயுஷ்மான் குரானா, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கூகுள் நிறுவன தலைமைச் செயல் அதிகாரி சுந்தர் பிச்சை, பிரிட்டனில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் நுண்ணுயிரியல் பேராசிரியராகப் பணிபுரிந்து வரும் ரவீந்திர குப்தா ஆகியோரின் பெயரும் இடம்பெற்றுள்ளன.

### விஞ்ஞானி சேகர் பாசு காலமானார்

- மூத்த அணு விஞ்ஞானியும், அணுசக்தி ஆணைய முன்னாள் தலைவருமான சேகர் பாசு கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார்.
- மேற்கு வங்கத் தலைநகர் கொல்கத்தாவை சேர்ந்தவர். அணுசக்தி மூலம் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட ஐஎன்எஸ் அரிஹந்த் நீர்மூழ்கிக் கப்பலுக்கு அணு உலையை உருவாக்கியதில் வழிகாட்டியாக திகழ்ந்தவர்.
- கடந்த 2014-ஆம் ஆண்டு அவருக்கு மத்திய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவித்தது.
- அணு அறிவியல் ஆராய்ச்சியில் வல்லவராக திகழ்ந்தார்.

### பிரபல பொருளாதார நிபுணர் ஐஷர் ஜட்ஜ் அலுவாலியா காலமானார்

- பிரபல பொருளாதார நிபுணரும், சர்வதேச பொருளாதார உறவுகள் குறித்த இந்திய ஆராய்ச்சி கவுன்சிலின் (ஐசிஆர்ஐஇஆர்) முன்னாள் தலைவருமான ஐஷர் ஜட்ஜ் அலுவாலியா உடல்நலக்குறைவால் காலமானார்.
- ஐஷர் ஜட்ஜ் அலுவாலியா நகர்ப்புற வளர்ச்சி, பெரும் பொருளாதார சீர்திருத்தங்கள், தொழில்துறை வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டு விவகாரங்கள் குறித்து ஆராய்ச்சி செய்துள்ளார். இந்தியாவில் தொழில்துறை வளர்ச்சி உள்ளிட்ட புத்தகங்களை எழுதியுள்ளார். துறை சார்ந்த சிறந்த சேவைக்காக இவருக்கு மத்திய அரசு பத்ம பூஷண் விருது வழங்கி கௌரவித்துள்ளது.

### முன்னாள் மத்திய அமைச்சர் ஜஸ்வந்த் சிங் காலமானார்


- “திட்டக் குழுவின் துணைத் தலைவராகவும் இருந்துள்ளார். கடந்த, 2004 முதல் 2009 வரை, ராஜ்யசபா எதிர்க்கட்சித் தலைவராக இருந்துள்ளார்.
- லோக்சபா மற்றும் ராஜ்யசபா என, பார்லிமென்ட் உறுப்பினராக நீண்ட காலம் பணியாற்றி உள்ளார்.
- கடந்த 1999ல் காத்மாண்டுவில் இருந்து காந்தஹாருக்கு கடத்தப்பட்ட இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தை மீட்க, மூன்று பயங்கரவாதிகள் ஒப்படைக்கப்பட்டனர். வாஜ்பாயிக்கு மிகவும் நெருக்கமானவராக கருதப்படும் ஜஸ்வந்த் சிங், அப்போது வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்தார்.

# 1.5 விளையாட்டு

### செஸ் ஒலிம்பியாட் போட்டியில் இந்தியா மற்றும் ரஷ்யா கூட்டு வெற்றியாளர்கள்

- செஸ் ஒலிம்பியாட் போட்டியில் இந்தியாவும் ரஷ்யாவும் கூட்டாக வெற்றியாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- கரோனா தொற்றுநோயைக் கருத்தில் கொண்டு, சர்வதேச செஸ் கூட்டமைப்பு முதல் ஆன்லைன் செஸ் ஒலிம்பியாட் நடத்தியது.
- சர்வதேச செஸ் கூட்டமைப்பின் (FIDE) தலைவர் ஆர்கடி டுவோர்கோவிச் இரு அணிகளுக்கும் தங்கப் பதக்கங்களை வழங்க முடிவு செய்தார்.

### “வோர்ல்டு ஓபன்-2020” சதுரங்கப் போட்டி



- அமெரிக்காவின் ‘வோர்ல்டு ஓபன் -2020’ பட்டத்திற்காக, இணையதளம் வாயிலாக நடந்த சதுரங்கப் போட்டியில், ஈரோட்டைச் சேர்ந்த இந்திய கிராண்ட் மாஸ்டர் பி.இனியன் முதலிடம் பெற்றார்.
- அமெரிக்காவின் பிலடெல்பியா நகரில் 1973-ம் ஆண்டு முதல், ‘வோர்ல்டு ஓபன்’ சதுரங்கப் போட்டிகள் நடந்து வருகின்றன. இந்த ஆண்டு கரோனா

*பாதிப்பு காரணமாக, இணையதளம் வாயிலாக, 'வோர்ல்டு ஓபன் - 2020' சதுரங்கப் போட்டிகள் ஆகஸ்ட் 7 முதல் 9-ம் தேதி வரை நடந்தது.*

### உலக ஷீவு சாம்பியன்ஷிப் போட்டி

- *இந்திய காவல்துறை அலுவலரான பூனம் கத்ரி கடந்த ஆண்டு நடைபெற்ற உலக ஷீவு சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளி பதக்கம் வென்றிருந்தார்.*
- *இப்போட்டியில் ஈரான் சேர்ந்த மரியம் 75கி எடைபிரிவில் தங்கம் வென்றார். இதையடுத்து போதை பொருள் பயன்பாடு குறித்த பரிசோதனையில் மரியம் தோல்வி யடைந்ததையடுத்து அவரின் பதக்கம் பறிக்கப்பட்டது. இந்தியாவை சேர்ந்த பூனம் கத்ரிக்கு தங்கப்பதக்கம் தற்போது வழங்கப்பட்டது.*

### வயதுக்கு உகந்த உடல்தகுதி பயிற்சிகள் திட்டம்

- *உடல்தகுதி மிக்க இந்தியா இயக்கத்தின் செப்டம்பர் 24, 2019 முதலாவது ஆண்டு நிறைவை ஒட்டி காணொலிக் காட்சி மூலம் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரதமர் திரு. நரேந்திர மோடி வயதுக்கு உகந்த உடல்தகுதி பயிற்சிகள் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.*

### 'மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு மையத்திற்கு' அடிக்கல் நாட்டப்பட்டது


- *மத்திய பிரதேச மாநிலம் குவாலியரில் உலகத்தரம் வாய்ந்த 'மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு மையத்திற்கு' அடிக்கல் நாட்டப்பட்டது. மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் கீழ் உள்ள மாற்றுத்திறனாளிகளிக்கு அதிகாரமளித்தல் துறை இந்த நிகழ்ச்சியினை காணொளிப்பதிவு மூலம் ஏற்பாடு செய்திருந்தது.*
- *ரூ.170.99 கோடி செலவில் கட்டப்பட உள்ள இந்த விளையாட்டு மையத்திற்கு மத்திய அமைச்சரவை பிப்ரவரி 28, 2019 அன்று ஒப்புதல் அளித்தது.*

### ஆடவர் கால்பந்து விருது

- *அனைத்திந்திய கால்பந்து கூட்டமைப்பு 2019-2020ஆம் ஆண்டுக்கான ஆடவர் கால்பந்து விருது வழங்கி உள்ளது.*
- *இந்தியாவின் சண்டீகர் சேர்ந்த குர்பீத் சிங் கந்த் மற்றும் இந்திய தேசிய ஆடவர் கால்பந்து அணியின் கோல்கீப்பரான சஞ்சீவ் யாதவ் ஆகியோருக்கு இவ்விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.*

## 1.6 புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள்

### *'The Commonwealth of Cricket"*




- *'The Commonwealth of Cricket: A Lifelong Love Affair with the Most Subtle and Sophisticated Game Known to Humankind'* *இந்திய எழுத்தாளரான ராமசந்திரகுஹா இப்புத்தகம் எழுதியுள்ளார். இந்திய கிரிக்கெட் மற்றும் வீரர்கள் பற்றிய ராமந்திரா குஹா விவரித்துள்ளார்.*


### *"The Little Book of Green Nudges"*

- *ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் "The Little Book of Green Nudges" என்ற புதிய புத்தகத்தை வெளியிட்டது. உலகெங்கிலும் சுமார் 200 மில்லியன் மாணவர்களை சுற்றுச்சூழல் நட்பு பழக்கவழக்கங்களையும் பசுமையான வாழ்க்கை முறைகளையும் பின்பற்ற உதவும்.*

### *'Invertonomics'*

- இப்புத்தகம் சவன்மித் சிங் சவுகான் என்பவர் எழுதியுள்ளார். பொருளாதாரத்தில் உள்ள சிக்கல்களை, வலுவான பொருளாதாரம் வாய்ப்பாக மாற்றுவது பற்றிய வழிமுறைகள் பற்றி விவரித்துள்ளார்.

### *'End of an Era, India Exits Tibet'*





- இப்புத்தகம் *Claude Arpi* என்பவரால் எழுதப்பட்டது. 1947-1962 ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் திபெத்துக்கும் இடையேயான உறவு பற்றி விவரிக்கிறது. இந்தியா-சீனா விவாதங்கள் பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது.

### *'My Life in Design'*

- உள்கட்டமைப்பு வடிவமைப்பாளாரான கௌரிகான் *'My Life in Design'* என்ற முதல் புத்தகத்தை எழுதியுள்ளார்.
- தனது வடிவமைப்பு சிந்தனைகளைப் இப்புத்தகத்தில் விவரித்துள்ளார். கலை வடிவமைப்பு தத்துவங்கள் பற்றியும் கூறியுள்ளார்.

### *"Azadi: Freedom. Fascism. Fiction"*




- இப்புத்தகத்தை எழுத்தாளர் அருந்ததி ராய் எழுதியுள்ளார். உருது தொழியில் *Azadi* என்றால் சுதந்திரம் என்பதாகும். இப்புத்தகத்தில் சுதந்திரம் பற்றி விவரித்துள்ளார்.
- காஷ்மீர் சுதந்திரம் பெற உண்டான துயரங்கள் பற்றியும், இந்தியா இந்துத்துவத்தை அடைய மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பது பற்றியும் விவரித்துள்ளார்.

### *"Kitchens of Gratitude"*

- புகழ்பெற்ற சமையல் வல்லுநரான விகாஷ் கிருஷ்ணன் *"Feed India initiative"* ஒரு பகுதியாக தனது அடுத்த புத்தகமான *"Kitchens of Gratitude"* 2021ஆம் ஆண்டு அறிமுகம் செய்ய உள்ளார்.

### *"Voices of Dissent"*

- இப்புத்தகம் வரலாற்று ஆசிரியர் ரோமிலா தாபர் என்பவர் எழுதியுள்ளார். இதில் கட்டிடக்கலை மற்றும் பொதுமக்களின் பொறுப்புகள் சமீபத்திய இந்தியாவின் எதிர்ப்புகளான குடியுரிமை சட்டம் மற்றும் தேசிய குடிமக்கள் பதிவு பற்றி விவரித்துள்ளார்.

### *'A Bouquet of Flowers'*




- பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், டாக்டர் கிருஷ்ணா சக்சேனா என்பவர் எழுதிய *'A Bouquet of Flowers'* என்ற புத்தகத்தை வெளியிட்டார்.
- தத்துவத்தில் முனைவர் பட்டம் பெற்ற முதல் பெண் இவர் ஆவார்.

# 1.7 விருதுகள் மற்றும் கௌரவங்கள்


### தேசிய எரிசக்தி தலைவர் விருது

- ஹைதராபாத்தில் உள்ள ராஜிவ்காந்தி சர்வதேச விமான நிலையம் 21வது "சிறந்த எரிசக்தி நிர்வாகத்தின்" தேசிய விருதுகளின் "தேசிய எரிசக்தி தலைவர்" மற்றும் "சிறந்த எரிசக்தி திறன் பிரிவு" ஆகிய பிரிவின் கீழ் விருதுகளை வென்று உள்ளது.
- இவ்விருது நிகழ்வை இந்திய தொழிற்த்துறை கூட்டமைப்பு மற்றும் கோட்ரோஜ் பசுமை தொழில் மையம் ஏற்பாடு செய்தது.
- 19வது ஆற்றல் திறன் மாநாட்டில் வழங்கப்பட்டது.

**இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு**

- தலைவர் – உதய் கோடக்
- தலைமையிடம் - டெல்லி

### இந்திராகாந்தி அமைதி விருது



- சர் டேவிட் அட்டன் போரோ அவர்களுக்கு 2019ம் ஆண்டின் இந்திரா காந்தி அமைதி விருது வழங்கப் பட்டுள்ளது.
- எந்த ஒரு தனிநபரைக் காட்டிலும் அதிக அளவிலான இயற்கை ரகசியங்களை வெளிக் கொனர்ந்தமைக்காக இந்த விருது அளிக்கப்பட்டுள்ளது.

### எழுத்தாளர் கண்மணி குணசேகரனுக்கு கி.ரா. விருது

- கோவை விஜயா வாசகர் வட்டம் சார்பில் எழுத்தாளர் கண்மணி குணசேகரனுக்கு எழுத்தாளர் கி.ராஜநாராயணன் பெயரால் "கி. ரா.' விருது வழங்கப்பட உள்ளது.

### ஆசிய சிறந்த களத்தை மாற்றியவர்கள் விருது 2020

- முதன்மை சமையல் வல்லுனரான விகாஷ் கண்ணன் அவர்கள் ஆசிய களத்தை மாற்றியவர்கள் விருது 2020 வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- கோவிட்-19 வைரஸ் தொற்று காலத்தில் இந்தியாவில் மில்லியன் கணக்கான மக்களுக்கு 'FeedIndia' என்ற முயற்சி கீழ் உணவு வழங்கினர்.
- இந்த முயற்சிக்காக இவ்விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இம்முயற்சி இவர் அமெரிக்காவில் இருந்தபடியே பாரம்பரிய உணவு விநியோகம் இயக்கத்தை ஒருங்கிணைத்தார்.

### ஓமந்தூரார் அரசு மருத்துவமனைக்கு விருது

- கரோனா சிகிச்சையில் சிறப்பாக செயல்பட்டமைக்காக வழங்கப்படும் விருதுக்கு சென்னை, ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தேர்வாகியுள்ளது. உலகம் முழுவதும் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவமனைகள் அதற்கு விண்ணப்பித்திருந்த நிலையில், ஓமந்தூரார் மருத்துவமனை முதலிடம் பிடித்து விருதுக்கு தகுதி பெற்றுள்ளது.
- ஓமந்தூரார் மருத்துவமனைக்கு அடுத்தபடியாக, பஞ்சாப் 'ஃ'போர்டீஸ் மருத்துவமனை இரண்டாம் இடத்துக்கு தேர்வாகியுள்ளது.

### ஒடிசா அரசு கட்டிடத்துக்கு சர்வதேச விருது

- ஒடிசா தலைநகர் புவனேஸ்வரில் வேளாண் துறை தொடர்பான 'கிருஷி பவன்' என்ற கட்டிடத்தை முதல்வர் நவீன் பட்நாயக் கடந்த 2018 செப்டம்பரில் திறந்து வைத்தார்.
- மூன்று மாடிகளுடன் சுமார் 80 ஆயிரம் சதுர அடியில் மிகவும் கலைநயத்துடன் இந்தக் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.
- இந்தக் கட்டிடம் கவுரவமிக்க சர்வதேச விருதான 'ஏஇசட்' விருத்துக்கு (AZ Award)

தேர்வு செய்யப்பட்டுள்ளது. 2020-ம் ஆண்டுக்கான ஏஇசட் விருதுகளில் சமூகப் பயன்பாடு கட்டிடப் பிரிவில் மக்களின் விருப்பத் தேர்வாக இந்தக் கட்டிடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- கட்டிடக் கலை தொடர்பான புகழ்பெற்ற சர்வதேச இதழான 'டெசீன்' இதழில் இடம்பெற்ற இந்தியாவின் முதல் அரசுக் கட்டிடம் மற்றும் ஒடிசாவின் முதல் கட்டிடம் என்ற பெருமையை இதற்கு முன் 'கிருஷி பவன்' பெற்றது.

### தொற்றில்லாத நோய்கள் தடுப்பு நடவடிக்கை: கேரள மாநிலத்துக்கு ஐ.நா. விருது

- தொற்றில்லாத நோய்களைத் தடுக்க மிகச்சிறந்த நடவடிக்கை எடுத்ததற்காக கேரள மாநில அரசுக்கு ஐ.நா. விருது வழங்கி கௌரவித்துள்ளது.
- தொற்றில்லாத நோய்கள் தடுப்பு நடவடிக்கையை மிகச்சிறந்த முறையில் கையாண்டு நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைந்தமைக்காக, ஐ.நா. விருதினை உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் அறிவித்துள்ளார்.
- கேரள அரசு ஐ.நா. விருதை பெறுவது இதுவே முதல்முறையாகும்.
- 2019-ஆம் ஆண்டு மேற்கொண்ட தடுப்பு நடவடிக்கைக்காகவும், நோய்களைக் கட்டுப்படுத்தியதற்காகவும் மற்றும் நோய் தடுப்பு தொடர்பான நிலையான வளர்ச்சி இலக்குகளை நிர்ணயித்தற்காகவும் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.


### ஐஜி நோபல் பரிசு 2020

- இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு மருத்துவக் கல்விக்கான ஐஜி நோபல் பரிசு 2020 வழங்கப்பட்டுள்ளது.




- இந் நோபல் பரிசு பெற்ற இரண்டாவது இந்திய பிரதமர் மோடி ஆவார். இதற்கு முன்பு அடல் பிஹாரி வாஜ்பாய்க்கு 1998 இல் வழங்கப்பட்டது.
- வாஜ்பாய்க்கு அணுகுண்டுகளை அமைதியாக வெடித்தற்காக, பாகிஸ்தானில் பிரதமர் நவாஸ் ஷெரிப்புடன் இணைந்து இந் நோபல் அமைதி பரிசு வென்றார்.
- விஞ்ஞானிகள் மற்றும் மருத்துவர்களை விட அரசியல்வாதிகள் உடனடி விளைவை ஏற்படுத்த முடியும் என்பதை உலகுக்கு உணர்த்த கோவிட்-19 தொற்றுநோயைப் பயன்படுத்தியதற்காக அவருக்கு மதிப்புமிக்க விருது வழங்கப்பட்டுள்ளது.

### யாமின் ஹாசாரிகா விருது



- வரலாற்று ஆசிரியரான ராணே சப்வி (Rana Safvi) அவர்களுக்கு யாமின் ஹாசாரிகா விருது வழங்கப்பட்டது. வரலாறு, கலாச்சாரம், இந்தியாவின் நினைவு சின்னங்கள் பற்றி பல புத்தகங்களை வெளியிட்டுள்ளார்.
- 'contribution to the syncretic culture of India' என்ற பங்களிப்புக்காக இவ்விருது வழங்கப்பட்டது.

### யாமின் ஹாசாரிகா விருது

- கடந்த 2015ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது. யாமின் ஹாசாரிகா என்பவர் வடகிழக்கு மாநிலத்தில் இருந்து மத்திய காவல் படையில் இணைந்த முதல் பெண் ஆவார். அவரின் நினைவாக இவ்விருது வழங்கப்படுகிறது.

### ராணா சஃபின் புகழ்பெற்ற புத்தகம்

- *The Forgotten Cities of Delhi: book two of the Where Stones Speak trilogy.*
- *Where Stones Speak: Historical Trains in Mehrauli, the First City of Delhi.*

### நாட்டு நலப்பணித் திட்ட விருதுகளை வழங்கிய குடியரசுத் தலைவர்

- 2018-19-ஆம் ஆண்டுக்கான நாட்டு நலப்பணித் திட்ட விருதுகளை மெய்நிகர் முறையில் குடியரசுத் தலைவர் திரு ராம் நாத் கோவிந்த் 2020 செப்டம்பர் 24 அன்று வழங்கினார்.
- புது தில்லியில் உள்ள விக்யான் பவனில் இருந்து மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சர் திரு கிரண் ரிஜுஜு இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.
- பல்கலைக்கழகம்/+2 குழு, நாட்டு நலப்பணித் திட்ட பிரிவுகள் மற்றும் அதன் திட்ட அலுவலர்கள் மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்கள் என்று மூன்று பிரிவுகளில் இந்த விருதுகள் வழங்கப்பட்டன.
- குடியரசுத் தலைவர், மகாத்மா காந்தியின் 100-வது பிறந்தநாளில் 1969-ஆம் ஆண்டில் நாட்டு நலப்பணித் திட்டம் தொடங்கப்பட்டதாகக் கூறினார்.

### லதா மங்கேஷ்கர் விருது உஷா மங்கேஷ்கருக்கு வழங்கப்படுகிறது மராட்டிய அரசு அறிவிப்பு

- மராட்டிய அரசு சார்பில் பாரத ரத்னா விருது பெற்ற பழம்பெரும் பாடகி லதா மங்கேஷ்கர் பெயரில் கடந்த 1992-ம் ஆண்டு முதல் விருது வழங்கப்பட்டு வருகிறது. லதா மங்கேஷ்கர் விருது பெறுபவர்களுக்கு ரூ.5 லட்சம் பணப்பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகிறது.
- இந்தநிலையில் 2020-21 ஆம் ஆண்டுக்கான லதா மங்கேஷ்கர் விருது அவரது சகோதஹரி உஷா மங்கேஷ்கருக்கு வழங்கப்பட உள்ளது. மேலும் லதா மங்கேஷ்கரின் 91-வது பிறந்தநாளில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

### பட்டா தங்க விருது 2020

- பசிபிக் ஆசிய பயணம் சங்கம் (Pacific Asoa Travel Association) பட்டா தங்க விருது (PATA Grand Award 2020) அறிவித்துள்ளது.
- கேரள அரசின் சுற்றுலா 'Human by Nature Print Campaign' என்ற முகாமை நடத்தியது. இதற்காக பட்டா தங்க விருது கேரள அரசிற்கு வழங்கப்பட்டது.
- பெய்ஜிங்கில் செப்டம்பர் 23-27 வரை காணொலி காட்சி மூலம் நடைபெற்ற நிகழ்ச்சியில் இவ்விருது வழங்கப்பட்டது.
- இந்நிகழ்ச்சி Macao Government Tourist Office ஏற்பாடு செய்தது.

## 1.8 கலாச்சாரம்

### மதுரை கிண்ணிமங்கலத்தில் முதல் பள்ளிப்படை கோவில்

- "தமிழகத்தின் முதல் பள்ளிப்படை கோவில் எழுப்பப்பட்டது. கிண்ணிமங்கலத்தில் தான்" என தொல்லியல் துறை தெரிவித்துள்ளது.
- தமிழக வரலாற்றின் முக்கிய தடயங்களை, மதுரை மாவட்டம், கிண்ணிமங்கலம் கோவிலில் கண்டறிந்தனர். அவை, தமிழ் மற்றும் வட்டெழுத்துக் கல்வெட்டுகள். அதாவது, எட்டுப்பட்டை வடிவ தூண் கல்வெட்டில் "எகன் அதன் கோட்டம்" என, தமிழில் எழுதப்பட்டிருந்தது. வட்டெழுத்துக் கல்வெட்டில், "இறையிலி ஏகநாதன் பள்ளிப்படை மண்டளியிந்தார்" என எழுதப்பட்டுள்ளது.
- 43 வரிகள் : வட்டெழுத்துக் கல்வெட்டில் உள்ள எழுத்து வகையை வைத்து அவை கி.பி.7-8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கும் என முடிவு செய்யப்பட்டுள்ளது.
- இக்கல்வெட்டில் பள்ளிப்படை என்ற சொல். முதன் முதலாக வந்துள்ளதால், மதுரை மாவட்டம் கிண்ணிமங்கலம் பள்ளிப்படையே தமிழகத்தின் முதல் பள்ளிப்படை என முடிவு செய்யப்பட்டு உள்ளது.

### அகரம் அகழாய்வில் 20 அடுக்கு உறை கிணறு கண்டுபிடிப்பு

- சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே அகரத்தில் நடைபெற்று வரும் அகழாய்வில் 20 அடுக்குகள் கொண்ட உறைகிணறு கண்டுபிடிக்கப்பட்டது.
- அகரம், கொந்தகை, மணலூர் உள்ளிட்ட இடங்களிலும்அகழாய்வுவிரிவுபடுத்தப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன.
- இதுவரை 6ஆம் கட்ட அகழாய்வில் கிடைத்த உறைகிணறுகளின் உயரத்தை விட தற்போது இங்குக் கிடைத்துள்ள உறைகிணறு அதிக உயரம் கொண்டதாக உள்ளது.

### 'இலக்கு வடகிழக்கு 2020'

- மத்திய உள்துறை அமைச்சரும் வடகிழக்கு குழுவின் தலைவருமான திரு அமித் ஷா, 'இலக்கு வடகிழக்கு 2020'-ஐ மெய்நிகர் முறையில் வைக்கிறார்.
- வடகிழக்கு பிராந்திய வளர்ச்சி அமைச்சகத்தின் வருடாந்திர நிகழ்ச்சியான இலக்கு வடகிழக்கு, இந்த பிராந்தியத்தை பற்றிய தகவல்களை நாட்டின் இதர பகுதிகளுக்கு எடுத்துச் செல்லவும், தேசிய ஒருமைப்பாட்டை வலுப்படுத்தவும் நடத்தப்படுகிறது.
- வளர்ந்து வரும் மகிழ்ச்சியூட்டும் இலக்குகள் என்பது 'இலக்கு வடகிழக்கு 2020' நிகழ்ச்சியின் மையக்கருவாகும்.

### டி.கல்லுப்பட்டி அருகே 13 ஆம் நூற்றாண்டு கல்வெட்டு கண்டெடுப்பு

- மதுரை மாவட்டம் டி.கல்லுப்பட்டி அருகே கி.பி.13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- 'ஸ்வஸ்திஸ்ரீ' எனத்தொடங்கும் இக்கல்வெட்டு பாடல் போன்ற வடிவில் அமைந்துள்ளது.
- 'கலிங்கத்தரையர் பெயர் கொண்ட பெருங்குன்றைப் பெரியகுளம்' என கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- கலிங்கத்தரையர் என்பவர்கள் பிற்காலப் பாண்டியர் ஆட்சிக்காலத்தில் கி.பி.12, 13 ஆம் நூற்றாண்டுகளில் இருந்த குறுநிலத் தலைவர்கள் ஆவர்.

### அகரம் அகழாய்வில் 20 அடுக்கு உறை கிணறு கண்டுபிடிப்பு

- சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே அகரத்தில் நடைபெற்று வரும் அகழாய்வில் 20 அடுக்குகள் கொண்ட உறைகிணறு கண்டுபிடிக்கப்பட்டது.
- அகரம், கொந்தகை, மணலூர் உள்ளிட்ட இடங்களிலும்அகழாய்வுவிரிவுபடுத்தப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன.
- இதுவரை 6ஆம் கட்ட அகழாய்வில் கிடைத்த உறைகிணறுகளின் உயரத்தை விட தற்போது இங்குக் கிடைத்துள்ள உறைகிணறு அதிக உயரம் கொண்டதாக உள்ளது.

### 'இலக்கு வடகிழக்கு 2020'

- மத்திய உள்துறை அமைச்சரும் வடகிழக்கு குழுவின் தலைவருமான திரு அமித் ஷா, 'இலக்கு வடகிழக்கு 2020'-ஐ மெய்நிகர் முறையில் வைக்கிறார்.
- வடகிழக்கு பிராந்திய வளர்ச்சி அமைச்சகத்தின் வருடாந்திர நிகழ்ச்சியான இலக்கு வடகிழக்கு, இந்த பிராந்தியத்தை பற்றிய தகவல்களை நாட்டின் இதர பகுதிகளுக்கு எடுத்துச் செல்லவும், தேசிய ஒருமைப்பாட்டை வலுப்படுத்தவும் நடத்தப்படுகிறது.
- வளர்ந்து வரும் மகிழ்ச்சியூட்டும் இலக்குகள் என்பது 'இலக்கு வடகிழக்கு 2020' நிகழ்ச்சியின் மையக்கருவாகும்.

### டி.கல்லுப்பட்டி அருகே 13 ஆம் நூற்றாண்டு கல்வெட்டு கண்டெடுப்பு

- மதுரை மாவட்டம் டி.கல்லுப்பட்டி அருகே கி.பி.13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

- 'ஸ்வஸ்திஸ்ரீ' எனத்தொடங்கும் இக்கல்வெட்டு பாடல் போன்ற வடிவில் அமைந்துள்ளது.
- 'கலிங்கத்தரையர் பெயர் கொண்ட பெருங்குன்றைப் பெரியகுளம்' என கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- கலிங்கத்தரையர் என்பவர்கள் பிற்காலப் பாண்டியர் ஆட்சிக்காலத்தில் கி.பி.12, 13 ஆம் நூற்றாண்டுகளில் இருந்த குறுநிலத் தலைவர்கள் ஆவர்.

# 1.9 நியமனங்கள்

### ஸ்ரீநகர் பகுதி சி.ஆர்.பி.எப் படைக்கு முதல் முறையாக பெண் ஐ.பி.எஸ் அதிகாரி நியமனம்



- ஜம்மு மாநிலத்தின் ஸ்ரீநகர் பகுதி சி.ஆர்.பி. எப்., படைக்கான ஐ.ஜி., யாக பெண் ஐ.பி.எஸ் அதிகாரி சாருசின்ஹா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- பெண் ஐ.பி.எஸ்., அதிகாரியான சாரு சின்ஹா 1996 ம் ஆண்டுக்கான தெலுங்கானா மாநில கேடரை சேர்ந்தவராவார்.
- ஸ்ரீநகர் துறை பிரிவின் கீழ் ஜம்முகாஷ்மீர் பட்காம், கந்தர்பால் மற்றும் ஸ்ரீநகர் யூனியன் பிரதேசமான லடாக் ஆகிய பகுதிகள் அடங்கி உள்ளன. இத்துறையில் சம்பந்தப்பட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் சாரு சின்ஹா தலைமை தாங்குவார்.

### புதிய தேர்தல் ஆணையராக ராஜிவ் குமார் பொறுப்பேற்றார்

- இந்தியாவின் புதிய தேர்தல் ஆணையராக திரு. ராஜிவ் குமார் பொறுப்பேற்றார். தலைமை தேர்தல் ஆணையர் திரு சுனில் அரோரா மற்றும் தேர்தல் ஆணையர் திரு சுஷில் சந்திரா ஆகியோருடன் இந்திய தேர்தல் ஆணையத்தில் திரு. ராஜிவ்குமார் இணைந்தார்.

### யுனிசெபின் குழந்தைகள் வன்முறை எதிர்ப்பு பிரச்சார குரலாக ஆயுஷ்மான் தேர்வு

- பாலிவுட் நடிகர் ஆயுஷ்மான் குர்ரானாவை யுனிசெப் இந்தியா குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளை எதிர்த்துப் போராட ஒரு நட்சத்திர வழக்கறிஞராக நியமித்துள்ளது. #ForEveryChild என்ற இயக்கத்தை ஆயுஷ்மான் ஊக்குவிப்பார்.
- பிரபல கால்பந்து வீரர் டேவிட் பெக்கம் யுனிசெப்புடன் இணைந்து உலகளவில் குழந்தை வன்முறை எதிர்ப்பு பிரச்சாரத்தில் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார்.

### இந்திய விமானப்படை பாதுகாப்பின் முதல் பெண் பொது இயக்குநர் நியமனம்



- இந்திய ஆட்சியரான உஷா பதீ (Usha Padhee) இந்திய விமானப்படை பாதுகாப்பின் முதல் பெண் பொது இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். இப்பதவி 16 ஜூலை 2022ஆம் ஆண்டு நிறைவடையும்.
- இவர் தற்போது இந்திய விமானப்படை அமைச்சகத்தின் இணை செயலாளராக பணியமர்த்தப்படவுள்ளார்.
- இந்திய விமானப்படை அமைச்சகத்தின் பிராந்தியங்கள் இணைப்பு திட்டமான உதான் திட்டத்திலும் பணியாற்றி உள்ளார்.

### மாநிலங்களவை துணைத் தலைவராக ஹரிவன்ஷ் நாராயண்சிங் மீண்டும் தேர்வு

- மாநிலங்களவை துணைத் தலைவராக ஹரிவன்ஷ் நாராயண் சிங் இரண்டாவது முறையாக தேர்வு செய்யப்பட்டார்.

- இவர் கடந்த 2018-ஆம் ஆண்டு மாநிலங்களவை துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இந்நிலையில் பிகார் மாநிலத்தில் இருந்து ஹரிவன்ஷ் நாராயண் சிங் மீண்டும் மாநிலங்களவை எம்.பியாக தேர்வு செய்யப்பட்டார்.

### உலக வங்கியின் நிர்வாக இயக்குனராக ராஜேஷ் குல்லர் நியமனம்



- உலக வங்கியின் நிர்வாக இயக்குனராக அரியானா மாநிலத்தைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி ராஜேஷ் குல்லர் நியமிக்கப்பட்டுள்ளதாக மத்திய பணியாளர் அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- தற்போது அரியானா மாநில முதல் மந்திரி மனோகர் லால் கட்டரின் முதன்மை செயலாளராக பணியாற்றி வரும் ராஜேஷ் குல்லர் அடுத்த 3 ஆண்டுகளுக்கு உலக வங்கியின் நிர்வாக இயக்குனராக பதவி வகிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இந்திய பெண்கள் அணிக்கு புதிய தேர்வு குழு தலைவர் நியமனம்



- புதிய தேர்வு குழு தலைவராக இந்திய முன்னாள் இடக்கை சுழற்பந்து வீச்சாளரான 43 வயதான நீது டேவிட் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் 10 டெஸ்ட் மற்றும் 97 ஒரு நாள் போட்டிகளில் விளையாடிய அனுபவம் வாய்ந்தவர்.
- முன்னாள் வீராங்கனைகளான மிது முகர்ஜி, ரேணு மார்க்ரெட், ஆர்த்தி வைத்யா, கல்பனா ஆகியோர் தேர்வு குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்களது பதவி காலம் 4 ஆண்டுகள் ஆகும்.

### ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் தூதுவராக இந்தியர் நியமனம்

- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் Tunza Eco-Generationன் தூதுவராக இந்தியாவின் 17வயது பெண்ணான குஷி சின்தால்யா (Khushi Chindaliya) நியமிக்கப்பட்டு உள்ளார்.
- காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு மேற்கொண்டவர்களில் முக்கியமானவர்.
- Tunza Eco-Generation பிரிவில் தூதுவராக வரும் பிப்ரவரி 2021 வரை இருப்பார். சுற்றுச்சூழல் விழிப்புணர்வு திட்டங்கள் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொள்வார்.

### டிராய் தலைவராக பி.டி.வாகேலா நியமனம்



- இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்காற்று ஆணைய (டிராய்) தலைவராக மூத்த அதிகாரி பி.டி.வாகேலா நியமிக்கப்பட்டுள்ளார்.
- பதவியில் அவர் 3 ஆண்டுகள் வரையோ அல்லது அவர் 65 வயதை எட்டும் வரையோ நீடிப்பார்.
- தற்போது டிராய் தலைவராக உள்ள ஆர்.எஸ். சர்மா ஓய்வுபெற உள்ளார்.

# 1.10 இந்தியா மற்றும் அண்டை நாடுகள்

### எல்லை பிரச்சனையைத் தீர்க்க 5 அம்சத் திட்டம்

- கிழக்கு லடாக் எல்லைப் பகுதியில் நிலவி வரும் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்காக 5 அம்ச திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு இந்தியாவும் சீனாவும் ஒப்புக்கொண்டுள்ளன.
- அதில், எல்லைப் பகுதியில் குவிக்கப்பட்டுள்ள இருதரப்புப் படைகளை திரும்பப் பெறுவது, பதற்றத்தை ஏற்படுத்தும் வகையிலான நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருப்பது உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன.

### நேபாளத்திற்கு இரு ரயில்கள் ஒப்படைத்த இந்தியா

- நேபாள நாட்டிற்கு, இரு அதிநவீன ரயில்களை, இந்தியா வழங்கியுள்ளது.
- சென்னை, பெரம்பூர் ரயில் பெட்டி தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட இந்த நவீன "மீட்டர் கேஜ்" இரு ரயில்களை, கொங்கன் ரயில்வே, நேபாள ரயில்வேயிடம் ஒப்படைத்தது.

# 1.11 சமீபத்திய வரலாற்று நிகழ்வு

### சிந்து சமவெளி நாகரிகம் அழிந்ததற்கு பருவநிலை மாற்றம் காரணமாக இருக்கலாம்: ஆய்வில் தகவல்

- பருவநிலை மாற்றத்துடன் தொடர்புடைய தட்பவெப்ப மாற்றங்கள் பண்டைய சிந்து சமவெளி நாகரிகம் அழிவதற்குக் காரணமாக இருந்திருக்கலாம் என்று இந்திய வம்சாவளி அறிவியல் ஆய்வாளர் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்த ஆய்வை நடத்திய இந்திய வசம்சாவளி அறிவியல் ஆய்வாளர் நிஷாந்த் மாலிக் என்பவர் ஆவார்.
- கடந்த 5,700 ஆண்டுகளின் வட இந்தியாவின் பருவநிலை, தட்பவெப்ப நிலை மாற்றங்களை அவர் புதிய கணித மாதிரி ஆய்வில் கணித்துள்ளார்.
- தெற்காசிய குகைகளின் பொங்கூசிப் பாறைக் கனிமப் படிவுகளில் ஒரு குறிப்பிட்ட வகை ரசாயான இருப்பின் அளவை ஆய்வாளர்கள் கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளனர்.
- இதன் மூலம் கடந்த 5,700 ஆண்டுகளில் அப்பகுதியில் பருவமழையின் அளவு பற்றிய தொகுதியை உருவாக்க முடிந்துள்ளது.

### பண்டையகால இந்திய கலாச்சாரம் பற்றி ஆய்வு செய்ய 16 பேர் கொண்ட குழு

- பண்டையகால இந்திய கலாச்சாரம் பற்றி ஆய்வு செய்ய 16 பேர் கொண்ட குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது. இக்குழுவை மத்திய கலாச்சார மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரகஹலாத் சிங் படேல் அமைத்து உள்ளார்.
- இந்தக் குழு 12,000 வருட இந்திய கலாச்சாரங்கள் பற்றி ஆய்வு செய்ய உள்ளது.

### சென்னிமலை:அகழாய்வு

- சென்னிமலை அருகே நடைபெற்று வரும் அகழாய்வு பணியில் பெரிய அளவிலான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டது.
- கொடுமணல் கிராமத்தில் 2,300 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் இருந்ததால் பல்வேறு கட்ட அகழாய்வு பணிகள் நடைபெற்று வருகிறது.



# 2. அரசியல் அறிவியல்

## 2.1 மத்திய அரசாங்கம் - பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

### ஒரே நாடு, நாடு கார்டு திட்டத்தில் லடாக் மற்றும் லட்சத்தீவு ஒருங்கிணைப்பு

- ஒரே நாடு, ஒரே கார்டு திட்டத்தை அமல்படுத்தும் பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து மத்திய நுகர்வோர் நலத்துறை அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான் சமீபத்தில் ஆய்வு செய்தார். இத்திட்டத்தில் லடாக் மற்றும் லட்சத்தீவு ஆகியவற்றை இணைக்க அமைச்சர் ராம் விலாஸ் பஸ்வான் ஒப்புதல் அளித்தார்.
- இந்த 2 யூனியன் பிரதேசங்களும், ஒரே நாடு, ஒரே கார்டு திட்டத்தில் இணையும் பரிசோதனைகளை நிறைவு செய்துவிட்டன. இத்துடன் மொத்தம் 26 மாநிலங்கள்/ யூனியன் பிரதேசங்கள் ஒரே நாடு, ஒரே கார்டு திட்டத்தில் இணைந்துள்ளன.

### ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தை சிறு நகரங்களுக்கும் நீட்டிக்க முடிவு

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தின் (எம்ஜிஎன்ஆர்இஜிஏ) கீழ் கிராமப்புறங்களில் உள்ள வேலை இல்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டம் கடந்த 2005 முதல் மத்திய அரசு செய்து வருகிறது.
- இந்த திட்டத்துக்கு மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் என்று பெயரிடப்பட்டது.
- மத்திய அரசால் இந்தத் திட்டம் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் என்று அழைக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை சிறு நகரங்களுக்கும் நீட்டிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- இந்தத் திட்டத்தை அமல்படுத்த முடிவு செய்துள்ளதாக மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- இந்தத் திட்டத்தில் பயன்பெறும் நபர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு ரூ.202 ஊதியமாகக் கிடைக்கும். ஆண்டுக்கு 100 நாட்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும்".

### மிஷன் கர்மயோகி திட்டம்

- மத்திய அரசு அதிகாரிகளின் திறனை மேம்படுத்துவதற்காக, 'மிஷன் கர்மயோகி' என்ற திட்டத்தை செயல்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- அரசு அதிகாரிகளை தொழில்நுட்பம், புத்தாக்கம், ஆக்கப்பூர்வமாக சிந்தித்தல், தொழில் திறன் ஆகியவற்றில் நிபுணத்துவம் நிறைந்தவர்களாக மாற்றுவதற்கு பயிற்சி அளிப்பதற்காக, மிஷன் கர்மயோகி திட்டம் செயல்படுத்தப்படும்.
- இந்தத் திட்டத்தின் கீழ் 46 லட்சம் மத்திய அரசு ஊழியர்களுக்கு மனித வள மேம்பாட்டுத் துறையின் கீழ் பயிற்சி அளிக்கப்படும். இதற்காக, 2020-21-ஆம் ஆண்டில் இருந்து 2024-25-ஆம் ஆண்டு வரை 5 ஆண்டுகளுக்கு ரூ.510.86 கோடி செலவிடப்படும்.
- இந்தத் திட்டத்தை நிறைவேற்ற பிரதமர்

நரேந்திர மோடி தலைமையில் மனிதவள கவுன்சில் அமைக்கப்படும். அதில், சில மத்திய அமைச்சர்கள், சில மாநில முதல்வர்கள், மனிதவள பயிற்சியாளர்கள், சிந்தனையாளர்கள், அரசு அதிகாரிகள் ஆகியோர் இடம்பெறுவர்.

### காஷ்மீரி, டோக்ரி, ஹிந்தி அலுவல் மொழி

- ஜம்மு-காஷ்மீரில் ஆங்கிலமும் உருதும் தற்போது அலுவல் மொழிகளாக உள்ளன. அவற்றுடன் காஷ்மீரி, டோக்ரி, ஹிந்தி ஆகியவற்றையும் அலுவல் மொழிகளாக அங்கீகரிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

### ஆபரேஷன் கிரீன்: ஜம்மு காஷ்மீர்




- நாடு முழுவதும் தேவையான இடங்களில் பற்றாக்குறையை சமாளிக்க முக்கியமாக வெங்காயம், தக்காளி, உருளைக்கிழங்கு (TOP) போன்ற காய்கறிகளின் சப்ளை சீராக நடைபெற ஆபரேஷன் கிரீன் துவங்கப்பட்டது.
- தற்போது இந்த திட்டம் அனைத்து காய்கறிகள் பழங்களுக்காக (TOTAL) என்ற பெயரில் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.
- தற்போது இந்த திட்டம் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திலும் செயல்படுத்தப்பட திட்டமிடப்பட்டு உள்ளது.

### பிரதமரின் மீனவர் அபிவிருத்தித் திட்டம்

- மீனவர்கள் மற்றும் பண்ணைக் குட்டை மூலம் மீன் வளர்ப்பில் ஈடுபட்டு வரும் விவசாயிகளுக்காக பிரதமரின் மீனவர் அபிவிருத்தித் திட்டத்தை (பிஎம்எம்எஸ்ஒய்) பிரதமர் நரேந்திர மோடி இணைய வழியில் தொடக்கி வைத்தார்.
- மேலும், மீனவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக "இ-கோபாலா' என்ற புதிய செயலியையும் அவர் தொடக்கி வைக்க உள்ளார்.
- பிரதம மந்திரியின் மத்ஸ்ய சம்பத யோஜனா (பிஎம்எம்எஸ்ஒய்) திட்டம், நாடு முழுவதும் மீன்வளத் துறை வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள பிரதானத் திட்டமாகும். "சுயசார்பு பாரதம்' திட்டத்தின் ஒரு பகுதியாக 2020-21 முதல் 2024-25-ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் ரூ. 20,250 கோடி மதிப்பீட்டில் மீன்வளத் துறை மேம்பாட்டுத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.
- இதன்மூலம் அந்த மாநிலத்தில் கூடுதலாக 3 லட்சம் டன் மீன் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- மேலும், சீதாமாரி பகுதியில் மீன் குஞ்சுகள் அடைகாக்கும் வங்கி அமைப்பது குறித்தும், கிஷன்கஞ்சில் நீர்வாழ் உயிரினங்களின் நோய் ஆராய்ச்சிக்கான ஆய்வகத்தை அமைப்பது குறித்தும் பிரதமர் மோடி அறிவித்தார். இவை பிஎம்எம்எஸ்ஒய் திட்டத்தில் செயல்பட உள்ளன.

### 5 நட்சத்திர கிராமங்கள் - தபால் திட்டங்கள் ஊரகப் பகுதிகளை முழுமையாக சென்றடைய புதிய திட்டம்

- தபால் திட்டங்கள் ஊரகப் பகுதிகளை 100% சென்றடைய ஐந்து நட்சத்திர கிராமங்கள் திட்டத்தை இந்திய தபால் துறை தொடங்கியது.
- நாட்டின் ஊரகப் பகுதிகளை தபால் துறையின் முக்கிய திட்டங்கள் முழுவதும் சென்றடைய, ஐந்து நட்சத்திர கிராமங்கள் என்னும் திட்டத்தை இந்திய தபால் துறை தொடங்கியுள்ளது.
- ஐந்து நட்சத்திர திட்டத்தின் கீழ், அனைத்து தபால் பொருட்கள் மற்றும் சேவைகள் சந்தைப்படுத்தப்பட்டு விளம்பரப்படுத்தப்படும்.

***ஐந்து நட்சத்திர திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சேவைகளில் சில வருமாறு:***

- *சேமிப்பு வங்கி கணக்குகள்,*
- *தங்க மகள் திட்டம்,*
- *இந்திய தபால் கட்டண வங்கி கணக்குகள்,*
- *தபால் ஆயுள் காப்பீடு,*
- *பிரதமரின் காப்பீட்டு திட்டம்*

## தகவல் சங்கம் குறித்த உலக உச்சி மாநாடு விருது 2020

- *மேற்கு வங்கத்தில் அரசு உயர்நிலை பள்ளி மாணவர்களுக்கு "சபுஜ் சத்தி" திட்டத்தின் கீழ் இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தை தொடங்கியது.*
- *இதையடுத்து தகவல் சங்கம் குறித்த உலக உச்சி மாநாடு விருது 2020 மேற்கு வங்க அரசு வென்றது.*

## பிரகதி மற்றும் ஷாக்ஷம் திட்டம்

- *பிரகதி திட்டம் என்பது மத்திய கல்வி அமைச்சகத்தால் மேற்கொள்ளப்படும் திட்டமாகும். இது பெண், குழந்தைகள் தங்கள் மேற்படிப்பு தொடங்குவதற்காக மத்திய அரசு உதவித்தொகை வழங்கும் திட்டமாகும்.*
- *ஷாக்ஷம் திட்டம் என்பது ஒவ்வொரு இளம் மாணவர்கள் அல்லது மாற்றுதிறனாளிகள் தங்கள் மேற்படிப்பு தொடங்குவதற்காக மத்திய அரசு நிதி உதவி வழங்கும் திட்டமாகும்.*
- *தற்போது மத்திய அரசு ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேச மாணவர்களுக்காக இந்த நிதியுதவி திட்டத்தை விரிவுபடுத்த உள்ளது.*
- *வரும் 2020-21 கல்வி நிதி ஆண்டிற்கு நிதியுதவி ஆண்டுக்கு ரூ.5000 இருந்து ரூ.50,000ஆக உயர்த்தி உள்ளது.*
- *தொழில்நுட்ப கல்வியை தொடரும் மாணவர்கள் முன்னேற்றத்திற்கான உதவிகளை வழங்குதலை AICTE கவனம் செலுத்தும்.*

## 'ஆர்திகா ஸ்பந்தனா' திட்டம்

- *கர்நாடக மாநிலத்தில் பல்வேறு கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் 39,300 கோடி ரூபாய் கடன்களை வழங்கும் "ஆர்திகா ஸ்பந்தனா" திட்டத்தை எடியூரப்பா தொடங்கினார்.*
- *இந்தத் திட்டத்தின் கீழ் 15,300 கோடி விவசாயத் துறைக்கு வழங்கப்படும். அதே சமயம், 24,000 கோடி வேளாண்மை அல்லாத துறைக்கு ஒதுக்கப்படும்.*

## பிரதமர் கிஷான் திட்டத்தில் 11 கோடி பேர் பதிவு

- *இந்தியா முழுவதும் பிரதமரின் கிஷான் திட்டத்தில் செப்டம்பர் 17 வரை 11 கோடி பேர் பதிவு செய்துள்ளதாக மத்திய வேளாண் மற்றும் விவசாய அமைச்சகம் அறிவித்துள்ளது.*
- *பிரதமரின் கிஷான் உதவித் திட்டத்தின் கீழ் விவசாய நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு நாடு முழுவதும் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது.*
- *இதில், அதிகபட்சமாக உத்தர பிரதேசத்தில் 2,59,52,664 பேர், மகாராஷ்டிரத்தில் 1,10,14,738 பேர் பயனடைந்துள்ளனர். மேலும், தமிழகம் முழுவதும் 48,63,193 பேர் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர் என தெரவித்துள்ளனர்.*

### *பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி*

- *பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதி (Pradhan Mantri Kisan Samman Nidhi) என்பது இந்திய அரசாங்கத்தின் ஒரு திட்டமாகும். இதில் அனைத்து சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் குறைந்தபட்ச வருமான ஆதரவாக ஆண்டுக்கு, ₹6,000 (US$78.66) நிதி உதவி அளிக்கப்படும். இந்த திட்டத்தை 2019 பிப்ரவரி முதல் நாள் இந்தியாவின் இடைக்கால இடைக்கால நிதியறிக்கையின் போது பியுஷ் கோயல் அறிவித்தார்.*

## முதல்வர் மஹிலா உத்கர்ஷ் யோஜனா

- *குஜராத் மாநிலத்தின் பெண்கள், குழுக்களுக்கு வட்டி இல்லாத கடன்களை வழங்கும் திட்டமான முதல்வர் மஹிலா உத்கர்ஷ்*

யோஜனா (Mukhyamantri Mahila Utkarsh Yojana) முதலமைச்சர் விஜய் ரூபானி அறிவித்தார்.

- நகர்ப்புறங்களில் 50,000 கூட்டு பொறுப்பு மற்றும் வருவாய் குழு (JLEG) உருவாக்கப்படும். இதேபோல், கிராமப்புறங்களில் 50,000 குழுக்கள் உருவாக்கப்படும்.

### ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாடு திட்டம்



- ஊட்டச்சத்து குறைபாட்டை கட்டுப்படுத்துவதில் இணைந்து செயல்பட, ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாடு திட்டத்தின் (ICDS) கீழ் மேற்கொள்ளப்படும் ஊட்டச்சத்து திட்டங்களுடன், ஆயுஷ் முறைகளையும் இணைக்க, ஆயுஷ் அமைச்சகத்துடன் குழந்தைகள் மற்றும் பெண்கள் மேம்பாட்டுத்துறை புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

### நாஷா முக்த் பாரத்

- "நாஷா முக்த் பாரத்: போதைப்பொருள் துஷ்பிரயோகம் மற்றும் சட்டவிரோதக் கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினத்தை முன்னிட்டு மிகவும் பாதிக்கப்பட்ட 272 மாவட்டங்களுக்கான வருடாந்திர செயல் திட்டம் (2020-21)" சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சரால் தொடங்கப்பட்டது.
- இந்த நிகழ்வில், தேசிய போதைப்பொருள் பயன்பாடு குறைப்பு செயல் திட்டத்திற்கான சின்னம், முழக்கம், போதைப்பொருள் தடுப்புக்காக தயாரிக்கப்பட்ட 9 வீடியோக்கள் ஆகியவற்றையும் அவர் வெளியிட்டார்.
- 2020-21 ஆம் ஆண்டிற்கான நாஷா முக்த் பாரத் வருடாந்திர செயல் திட்டம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள 272 மாவட்டங்களை மையமாகக் கொண்டு, போதைப்பொருள் பணியகம், சமூக நீதி மூலம் அவுட்ரீச் / விழிப்புணர்வு மற்றும் சுகாதாரத் துறை மூலம் சிகிச்சையின் முயற்சிகளை இணைத்து மும்முனை தாக்குதலைத் தொடங்கும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

### கர் தக் ஃபைபர்

- பிரதமர் நரேந்திர மோடி 2020 செப்டம்பர் 21ஆம் தேதி பிகாரில் ஒன்பது நெடுஞ்சாலைத் திட்டங்களையும் (கர்தக் ஃபைபர்) திட்டத்தையும் தொடங்கினார்.
- கர் தக் ஃபைபர் திட்டத்தின் கீழ், வீடுகளுக்கு ஆப்டிகல் ஃபைபர் சேவைகள் வழங்கப்படும்.

**நெடுஞ்சாலைத் திட்டங்கள்**

- நெடுஞ்சாலைத் திட்டங்கள் 350 கி.மீ. சாலையை ரூ.14,250 கோடி செலவில் கட்டப்படும். இந்த சாலைகள் பிகார், ஜார்கண்ட் மற்றும் உத்திரபிரதேச மக்களிடையே இணைப்பை மேம்படுத்தும்.

**பிகாரில் ஆப்டிகல் ஃபைபர் சேவைகள்:**

- இந்த கர்தக் ஃபைபர் திட்டத்தின் கீழ் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் செயல்படுத்த உள்ளது. இது மாநிலத்தின் 45,945 கிராமங்களை இணைக்கும்.

**கர் தக் ஃபைபர் திட்டம்**

- கிராமம் மற்றும் நாட்டின் ஒவ்வொரு வீட்டிற்கும் ஆப்டிகல் ஃபைபர் செயல்படுத்தப்பட்ட இணைய இணைப்புகளை வழங்குவதற்காக இந்த திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தை பிரதமர் மோடி தனது 74வது சுதந்திர தின உரையில் அறிவித்தார்.

### ஆரோக்கிய மந்தன் 2.0

- மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷ்வர்தன் தலைமையில் ஆரோக்கிய மந்தன் 2.0 இரண்டாம் ஆண்டு நிறைவு தொடங்கி வைத்தார்.




- பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா திட்டம் தொடங்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் நிறைவு முன்னிட்டு "ஆரோக்கிய மந்தன்" 2.0ஐ சுகாதாரத்துறை அமைச்சகம் கடைப்பிடித்தது.
- இதை முன்னிட்டு சிறப்பாக செயல்பட்ட வர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.
- இதில் மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் "AB-PMJAY" என்ற கூட்டு சான்றிதழ் திட்டத்தை தொடங்கியது.
- இதன் மூலம் மருத்துவ விற்பனை மற்றும் சுகாதார காப்பீட்டில் தொடர்புடையவர்களின் திறன்களை அறியவும் போலிகளை கண்டறியவும் உதவும்.
- "AB PMJAY Anti-Fraud Framework: Practitioners' Guidebook" என்ற வழிகாட்டுதல் கையேட்டையும் அமைச்சகம் வெளியிட்டது.
- இந்த கையேடுகள் சுகாதார ஆலோசனைகள், வழிகாட்டுதல்கள், சுகாதாரம் தொடர்பான சட்டங்கள் ஆகியவை உள்ளடக்கியது.

**இ-சஞ்சீவனி மருத்துவ ஆலோசனைகள்: தமிழகம் முதலிடம்**

- மத்திய சுகாதாரத்துறையின் வெளி நோயாளிகள் பிரிவான இ-சஞ்சீவனி தளம் 3 லட்சம் தொலை தூர மருத்துவ ஆலோசனைகளை நிறைவு செய்துள்ளது. இத்திட்டம் தொடங்கிய 6 மாதத்துக்குள் இந்த சாதனை படைக்கப்பட்டுள்ளது.
- இ சஞ்சீவனி திட்டத்தை நாட்டிலேயே அதிகம் பயன்படுத்திய மாநிலம் தமிழ்நாடு. தமிழகத்தில் இருந்து இதுவரை 1,29,801 மருத்துவ ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளன.
- தமிழகத்துக்கு அடுத்தபடியாக உத்தரப் பிரதேசம் மாநிலத்திலிருந்து 96,151 ஆலோசனைகளும், கேரளாவில் இருந்து 32,921 ஆலோசனைகளும், உத்தரகாண்டில் இருந்து 10,391 ஆலோசனைகளும் பெறப்பட்டுள்ளன.
- இது மொத்த ஆலோசனையில் 89.75% ஆகும்.

## 2.2 சமீபத்திய நீதிமன்ற தீர்ப்புகள்

**அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு அடிப்படையில் பதவி உயர்வு வழங்க கூடாது - உச்சநீதிமன்றம்**

- சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டு மனுவில், இட ஒதுக்கீடு அடிப்படையில் பதவி உயர்வு வழங்கக் கோரும் தமிழக அரசின் சீராய்வு மனுவை தள்ளுபடி செய்த உச்ச நீதிமன்றம், பணியிடங்களில், இட ஒதுக்கீடு அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்படக் கூடாது என்றும் தகுதி மற்றும் பணிமூப்பு அடிப்படையில்தான் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

# 3. புவியியல்



## 3.1 சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை

### இமயமலையில் அதிக நிலச்சரிவு ஏற்படக்கூடிய பகுதி முசோரி



- முசோரியிலும் இமயமலையை ஒட்டியுள்ள பகுதிகளிலும் நிலச்சரிவு ஏற்படக்கூடிய இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறையின் கீழ் செயல்படும் தன்னாட்சி அமைப்பான வாடியா இன்ஸ்டிட்யூட் ஆப் ஹிமாலயன் ஜியாலஜி (Wadia Institute of Himalayan Geology - WIHG) அமைப்பின் விஞ்ஞானிகள் முசோரி நகர்ப்புறத்திலும் அதை ஒட்டியுள்ள இமயமலைஅடிவாரத்தில்உள்ள84சதுரகிலோ மீட்டர் பரப்பளவில் உள்ள பகுதிகளிலும் ஆய்வு நடத்தினார்கள்.
- இந்தப் பகுதிகளில் அதிக அளவில், மிக அதிக அளவில் நிலச்சரிவு ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உள்ள பகுதிகளாக படாகட், ஜார்ஜ் எவரெஸ்ட், கெம்ப்ட்ய் ஃபால், கட்டா பானி, லைப்ரரி சாலை, கலோகிதர் ஆகியவை கண்டறியப்பட்டுள்ளன.

### இந்திய வேளாண் தொழில்நுட்பத்துறை ஐந்து ஆண்டுகளில் 24.1 பில்லியன் டாலராக அதிகரிக்கும்

- எர்னஸ்ட் மற்றும் யங்க் நிறுவனம் இந்தியா வேளாண் தொழில்நுட்பத்துறை அடுத்து ஐந்து ஆண்டுகளில் $24.1 பில்லியன் டாலராக அதிகரிக்கும் என தெரிவித்துள்ளது.
- வேளாண்மை துறையில் அனைத்து நிதிசேவையும் அதிகவேக இணையத்தள மூலம் வரும் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும் என தெரிவித்துள்ளது.
- 2025ஆம் ஆண்டுக்குள் இந்தியா வேளாண்மை துறையில் $12 பில்லியன் டாலர் மதிப்பு அளவிலான வேளாண்மை சந்தைமயமாக உருவாகும் என தெரிவித்துள்ளது.

### 1970 முதல் 68% வன இனங்கள் அழிப்பு

- உலக வனவிலங்கு நிதி "வாழும் தாவர அறிக்கை 2020" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது. கடந்த 1970 முதல் 2016 வரையிலான காலகட்டத்தில் சுமார் 68% வன இனங்கள் அழிந்து உள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.
- காலநிலை மாற்றங்களாலும் சுற்றுச்சூழல் மாசுபாடு, நிலம் மற்றும் கடல் மக்கள் பயன்பாடு, காடுகள் அழிப்பு போன்ற காரணங்களால் வன இனங்கள் அழிந்ததற்கு காரணங்கள் என அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.
- உலகளாவிய நன்னீர் வாழ் இனங்கள் 84% குறைந்த உள்ளது எனவும், கடந்த 1982 மற்றும் 2015 காலகட்டத்தில் நீர் வழி

மாற்றம் காரணமாக புகழ்பெற்ற யாங்சே ஆற்றில் காணப்படும் சீன ஸ்டர்ஜன் 97% குறைந்துள்ளதாக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

**உலகளாவிய வெப்பநிலை 1.5 டிகிரி செல்சியஸ் உயரும் ஐ.நா. அறிக்கை**




- ஐக்கிய நாடுகள் "அறிவியல் 2020" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது. இதில் உலகளாவிய வெப்பநிலை அடுத்த ஐந்து ஆண்டுகளில் தொழிற்கால வெப்பநிலை 2.7 டிகிரி (1.5°C) விட அதிகரிக்க உள்ளதாக தெரிவித்துள்ளது.
- 2015ம் ஆண்டு நடைபெற்ற பாரிஸ் காலநிலை மாற்ற மாநாட்டில் உலகளாவிய வெப்பநிலை குறைக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது.

**பனிக்கட்டிகள் உருகுவதால் 2100ம் ஆண்டுக்குள் உலக கடல் மட்டம் 38 செ.மீ உயரும் - நாசா தகவல்**

- காலநிலை மாற்றத்திற்கான இடை-அரசு குழுவில் (ஐபிசிசி) 2019ம் ஆண்டு, பெருங்கடல்கள் மற்றும் கிரையோஸ்பியர் பற்றிய சிறப்பு அறிக்கை அல்லது நீர் திட வடிவத்தில் இருக்கும் பூமியின் மேற்பரப்பு பகுதிகள் ஆகியவற்றுடன் தொடர்புடையவை என்று நாசா தெரிவித்துள்ளது.
- இது நாசாவின் கோடார்ட் விண்வெளி விமான மையத்தின் தலைமையிலான 'ஐஸ் ஷீட் மாடல் இன்டர்கம்பரிசன் ப்ராஜெக்ட்' (ஐ.எஸ்.எம்.ஐ.பி 6) இன் கண்டுபிடிப்பு என்று 'தி கிரையோஸ்பியர்' இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**நீடித்த வளர்ச்சி விளைவு மாநாடு**

- உலக பொருளாதார மன்றம் நான்காவது நீடித்த வளர்ச்சி விளைவு மாநாட்டை முதல் முறையாக காணொலி காட்சி மூலம் செப்டம்பர் 21 முதல் 24 ஆம் தேதி வரை நடைபெற்றது.
- "Realizing a Great Reset for Sustainable Development" என்ற தலைப்பில் இம்மாநாடு நடைபெற்றது.
- உலகளவில் இருந்து 2100 தலைவர்கள், தொழிலதிபர்கள், சர்வதேச அமைப்புகள் மற்றும் சிவில் சமூகம், கண்டுபிடிப்பாளர்கள் போன்றோர் கலந்து கொண்டனர்.
- மையக்கருத்து என்ற அடிப்படையில் இம்மாநாடு நடைபெற்றது.
    1. Shared Prosperity,
    2. Catalysing cooperation,
    3. Better business,
    4. Harnessing technology,
    5. Liveable planet




- மேலும் உலக பொருளாதார மன்றம் 'EarthTime Visualisation' என்ற அறிக்கை வெளியிட்டது. இதில் 2100 டெல்லியின் வெப்பநிலை 32°C இருக்கும் என தெரிவித்துள்ளது.



# 4. பொருளாதாரம்

## 4.1 புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசுத்துறை

### இந்திய பொருளாதாரம் 2021ம் நிதியாண்டில் 10.9% குறையும்

- இந்திய மொத்த உள்நாட்டு உற்பத்தி வரும் 2021ம் நிதியாண்டில் 10.9% குறையும் என ஸ்டேட் ஃபேங்க் ஆஃப் இந்தியா அறிக்கையைில் தெரிவித்து உள்ளது. முந்தைய 6.8% கணிப்பை விட அதிமாகும்.
- மேலும் நடப்பு நிதியாண்டில் முதல் காலாண்டிற்கான (ஏப்ரல், மே, ஜுன்) இந்தியாவின் உள்நாட்டு உற்த்தி 24% குறைந்து உள்ளதாக புள்ளி விவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் தரவுகள் வெளியிட்டுள்ளது.

### பசுமைமயமாகும் இந்தியாவின் மின்சக்தி சந்தை

- இந்திய மின்சக்தி சந்தையை பசுமைமயமானதாக ஆக்கும் திட்டத்தின் முதற்கட்டமாக, மத்திய மின்சக்தி, புதிய மற்றும் புதுப்பிக்கப்படக் கூடிய எரிசக்தித் துறை இணையமைச்சர்(தனிப்பொறுப்பு) திரு. ஆர்.கே.சிங், கிரீன் டர்ம் அகெட் மார்க்கெட் (ஜிடாம்) திட்டத்தை புதுதில்லியில் இருந்து காணொலிக் காட்சி வாயிலாக துவக்கி வைத்தார்.
- புதுப்பிக்கக் கூடிய எரிசக்தி வளங்கள் நிறைந்த மாநிலங்களின் சுமையை ஜிடாம் தளம் குறைக்கும் என்று தெரிவித்தார்.

### வர்த்தக சீர்திருத்த செயல்திட்ட தரவரிசை: முதல் இடத்தில் ஆந்திர மாநிலம்

- இந்தியாவில் எளிதாக தொழில் தொடங்க ஏற்ற மாநிலங்கள் தொடர்பான, 'மாநில வர்த்தக சீர்திருத்த செயல் திட்டம்-2019' தரவரிசைப் பட்டியலை மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் வெளியிட்டார்.
- மாநிலங்களின் தொழில் சீர்திருத்த செயல் திட்டங்கள் மற்றும் திட்ட அமலாக்கத்தின் அடிப்படையில் மாநிலங்கள் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.
- இந்த தரவரிசையில் ஆந்திர பிரதேசம் மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளது. உத்தர பிரதேச மாநிலம் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது. தெலுங்கானா மாநிலம் மூன்றாவது இடத்திற்கு பின்தங்கியது. தொடர்ந்து 4வது இடத்தில் மத்திய பிரதேசம், 5வது இடத்தில் ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்கள் உள்ளன.

### 26 துறைகளில் கடன் மறுசீரமைப்பு



- கட்டுமானம், மனை வணிகம், சுரங்கம், வாகனத் துறை உள்ளிட்ட 26 துறைகளில்

கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை செயல்படுத்தலாம் என்ற கே.வி.காமத் குழுவின் பரிந்துரையை இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) ஏற்றுக்கொண்டுள்ளது.

- கடன் மறுசீரமைப்பு உள்பட, அந்தக் குழு வழங்கிய பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

### இந்தியாவின் பொருளாதார சரிவு

- 2020-21ம் நிதி ஆண்டில் இந்தியாவில் கோவிட்-19ஆல் ஏற்படுத்தப்பட்ட ஊரடங்கால் 10.5%க்கும் அதிகமான உற்பத்தி குறையும் என பிட்ச் நிறுவனம் கணித்துள்ளது.
- முன்னர் 5% இருக்கும் என தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது 10.5%க்கும் அதிகமாக குறையலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இந்திய பொருளாதாரம் - இந்-ரா

- 2020-21ம் நிதி ஆண்டில் இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தியில் 11.8% இழப்பு ஏற்படும் என இந்-ரா நிறுவனத்தின் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- சென்ற காலாண்டில் 23.9% இழப்பு ஏற்பட்டுள்ள போதிலும் ஒட்டு மொத்த அளவில் 11.8%இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பொருளாதார சுதந்திரக் குறியீடு

- கனடாவின் ஃபிரேசர் இன்ஸ்டிடியூட் சார்பாக 2020ஆம் ஆண்டுக்கான சர்வதேசப் பொருளாதாரச்சுதந்திரம் குறித்த ஆய்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- ஒரு நாட்டின் அரசியலமைப்புச் சட்டம், கொள்கைகள், சந்தையில் நுழையும் திறன், தனியார் சொத்துகள் மீதான பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களைக் கொண்டு இந்தப் பொருளாதாரச் சுதந்திரக் குறியீடு கணக்கிடப்படுகிறது.
- மொத்தம் 162 நாடுகளிடையே நடத்தப்பட்ட இந்த ஆய்வில் இந்தியா 105ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. சென்ற ஆண்டை விட இந்த ஆண்டில் இந்தியா 26 இடங்கள் சரிவைச் சந்தித்துள்ளது.

**முதல் 10 நாடுகள்**

- இந்த ஆண்டுக்கான பட்டியலில் நியூசிலாந்து, சுவிட்சர்லாந்து, அமெரிக்கா, மொரீஷியஸ், ஜார்ஜியா, கனடா, அயர்லாந்து

**மிகவும் பின்தங்கிய நாடுகள்**

- ஆப்ரிக்கன் ரிபப்ளிக், டெமாக்ரட்டிங் ரிபப்ளிக் ஆஃப் கோங்கோ, ஜிம்பாப்வே, அல்கேரியா, ஈரான், அங்கோலா, லிபியா, சூடான்.

### 21ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 11.5% ஆக குறையும்

- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 21ஆம் நிதியாண்டில் 1.5% ஆக சுருங்கக்கூடும் என்று மூடிஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.
- 2021-22க்கு மூடிஸ் இந்தியாவின் பொருளாதாரம் 10.6 சதவீதமாக வளரும் என்று கணித்துள்ளது.

### உலகில் வேகமாக வளர்ந்து வரும் இரண்டாவது சந்தை இந்தியா

- 'Freelancing in 2020: An Abundance of Opportunities' என்ற அறிக்கையில் உலகில் இந்தியா வேகமாக வளரந்து வரும் சந்தைகளில் இரண்டாவது இடத்தில் உள்ளதாக தெரிவித்துள்ளது.
- முதல், இரண்டாவது காலாண்டில் இந்தியா 46% அதிகரித்து உள்ளதாக தெரிவித்துள்ளது.
- இந்தியாவை தவிரகிக் தொழிலாளர்களுக்கான (Gig Workers) பிற நாடு சந்தைகளில் அமெரிக்கா, பாகிஸ்தான், உக்ரைன் ஆகியவை அடங்கும்.

**நடப்பு நிதியாண்டில் இந்திய பொருளாதாரம் 9 சதவீதம் சரியும்**



- நடப்பு நிதியாண்டில், இந்திய பொருளாதாரம் 4 சதவீதம் வீழ்ச்சி அடையும் என்று ஆசிய வளர்ச்சி வங்கி கடந்த ஜூன் மாதம் கணித்து இருந்தது. இந்நிலையில், 9 சதவீதம் வீழ்ச்சி அடையும் என்று தற்போது கணித்தது.
- அதே சமயத்தில், வர்த்தக நடவடிக்கைகள் வேகம் எடுத்துள்ளதால், அடுத்த நிதியாண்டில் இந்திய பொருளாதாரம் 8 சதவீதம் வளர்ச்சி அடையும் என்றும் ஆசிய வளர்ச்சி வங்கி கணித்துள்ளது.

**இந்தியாவில் முதன் முதலில் தொடர்பு இல்லாத கட்டண அம்சத்துடன் வரவிருக்கும் கைக்கடிகாரம்**

- Titan Pay என்ற தொடர்பு இல்லாத கட்டண வசதியை டைட்டன் அறிமுகம் செய்துள்ளது.
- இதற்காக இந்நிறுவனம் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவுடன் கூட்டு சேர்ந்துள்ளது.
- டைட்டன் எஸ்பிஐ வங்கி உடன் பிணைக்கப்பட்டுள்ளதால், இது எஸ்பிஐ வங்கி கார்டு வைத்திருப்பவர்களுக்கு மட்டுமே செயல்படும்.

**ஆர்பிஐ நுகர்வோர் விழிப்புணர்வு விளம்பரத்தில் அமிதாப் பச்சன்**

- இந்திய ரிசர்வ் வங்கியின் (ஆர்பிஐ) விழிப்புணர்வு விளம்பரங்களில் பிரபல பாலிவுட் நடிகர் அமிதாப் பச்சன் தோன்ற இருக்கிறார்.
- தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால் மின்னணுப் பரிமாற்றம் அதிகரித்து வரும் நிலையில், அதனைப் பயன்படுத்தி நடைபெறும் முறைகேடுகளும் அதிகரித்துவிட்டன. எனவே, இது தொடர்பாக வாடிக்கையாளர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த ஆர்பிஐ பல்வேறு வழிகளில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 19%ஆக உயரும்**

- வரும் 2022 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 19% ஆக உயரக்கூடும் என்று நிதி அமைச்சகத்தின் தலைமை பொருளாதார ஆலோசகர் கிருஷ்ணமூர்த்தி சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.
- நிபுணர்களிடமிருந்து பெற்றுள்ள சில மதிப்பீடுகளுடன் ஒப்பிடும்போது, இவ்வளர்ச்சி எளிமையாக மாறும் என பதினைந்தாம் நிதி ஆணையம் தலைவர் என்.கே.சிங் தெரிவித்துள்ளார்.

**இந்திய பொருளாதார வளர்ச்சி (-)5.9 சதவீதமாக இருக்கும்: ஐ.நா**

- கரோனா தொற்று எதிரொலியால் நெருக்கடியில் உள்ள இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சி நிகழாண்டில் (-) 5.9 சதவீதமாக இருக்கும் என்றும், அடுத்த ஆண்டு இது உயரும் என்றும் ஐ.நா. தெரிவித்துள்ளது.
- சுமார் 300 மில்லியின் மக்கள் உணவு தட்டுப்பாட்டால் பாதிக்கப்படுவர் என்றும் ஐ.நா. எச்சரித்துள்ளது.
- இதுதொடர்பான தகவலை ஐ.நா.வின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அமைப்பு தாக்கல் செய்துள்ள அறிக்கையில் வெளியிட்டுள்ளது.
- உலக பொருளாதார வளர்ச்சி நிகழாண்டில் (-) 4.3 சதவீதமாக இருக்கும். இதனால் உலக அளவில் ரூ.441 லட்சம் கோடி அளவுக்கு இழப்பு ஏற்படும் என கரோனா பரவலுக்கு முன்பே பொருளாதார நிபுணர்கள் கணித்தனர்.
- இந்தியா: இந்திய பொருளாதார வளர்ச்சி நிகழாண்டில் (-) 5.9 சதவீதமாக இருக்கும். அடுத்த ஆண்டு 3.9 சதவீதம் வளர்ச்சி பெற வாய்ப்புள்ளது.

- இந்தியாவில் அமல்படுத்தப்பட்ட தீவிர பொதுமுடக்கத்தால் நாடு முழுவதும் உற்பத்தி நிறுத்தப்பட்டதன் காரணமாக ஏற்பட்ட பொருளாதார நஷ்டம் என்பது நிரந்தர வருவாய் இழப்பாகும். 2021-ஆம் ஆண்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும்.

**2020-21 நிதியாண்டின் இந்தியாவின் பொருளாதாரம் 11% வீழ்ச்சி அடையும்**

- முதலீடு தகவல் மற்றும் கடன் தரவரிசை முகமை (Investment Information and Credit Rating Agency) என்ற அமைப்பு இந்தியாவின் 2020-21ம் நிதியாண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 11% குறையக் கூடும் என்று தெரிவித்துள்ளது.
- இதற்கு முன்பு 9.5% குறையும் என கணித்து இருந்தது. 2020-21ம் நிதியாண்டின் இரண்டாவது காலாண்டு பகுதியில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 12.4% வீழ்ச்சி அடையும் என தெரிவித்துள்ளது.
- மேலும் மூன்றாம், நான்காம் காலாண்டில் 5.4% மற்றும் 2.5% வீழ்ச்சி அடையும் என தெரிவித்துள்ளது.

# 5. அறிவியல்



## 5.1 அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள்

### மருத்துவ நகரும் வண்டி *"MEDBOT"*

- *இந்திய ரயில்வேத்துறை "MEDBOT" என்ற மருத்துவ நகரும் வண்டியை உருவாக்கி உள்ளது.*
- *கோவிட்-19 வைரஸ் தொற்றால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உணவு மற்றும் மருந்துகள் இதன் மூலம் வழங்கப்படுகிறது.*
- *இந்திய ரயில்வேயின் மத்திய டீசல் ரயில் என்ஜின் தொழில்சாலை மருத்துவமனையில் சேவையை வழங்கி வருகிறது.*

### பிரபஞ்சத்தில் உள்ள மிகவும் தொலைவான நட்சத்திர பால்வெளிகளில் ஒன்றை இந்திய வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்

- *விண்வெளி ஆராய்ச்சியில் பிரபஞ்சத்தில் உள்ள மிகவும் தொலைவான நட்சத்திர பால்வெளிகளில் ஒன்றை இந்திய வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.*
- *பூமியில் இருந்து 9.3 பில்லியன் ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள பால்வெளி ஒன்றில் இருந்து அதிக அளவிலான புற ஊதா கதிர்களை இந்தியாவின் முதல் பல்நோக்கு அலைநீள விண்வெளி ஆராய்ச்சி நிலையான "அஸ்ட்ரோ சாட்" கண்டறிந்துள்ளது.*

### ஏஐஆர் ஸ்கேனர்

- *இந்திய தொழில்நுட்ப நிறுவனம் – பாம்பே சேர்ந்த மாணவர்கள் செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் இயங்கும் மொபைல் ஸ்கேன் "AIR ஸ்கேனர்" அறிமுகப்படுத்தி உள்ளனர்.*

### அதானி பசுமை சூரிய நிறுவனம் முதல் இடம்



- *அதானி பசுமை சூரிய நிறுவனம் உலகின் சூரிய ஆற்றல் நிறுவனங்களில் முதல் இடத்தை பெற்றுள்ளது.*
- *அதானி நிறுவனம் 2.0 ஜிகாவாட்டிற்கும் அதிகமான செயல்பாட்டு திட்டங்களை கொண்டுள்ளது. இந்நிறுவனத்திடம் மொத்தம் 12.3 ஜிகாவாட் வரை கொள்ளவு கொண்டுள்ளது.*

### உலக பல்கலைக்கழக தரவரிசை

**உலக பல்கலைக்கழக தரவரிசை**

- *லண்டனில் டைம்ஸ் உயர்நிலை கல்வி உலக பல்கலைக்கழக தரவரிசையை பட்டியலிட்டுள்ளது.*
- *இந்த தரவரிசை 13 செயல்பாடுகளை அடிப்படையாக கொண்டு வெளியிடப்பட்டது. 93 நாடுகளில் இருந்து 1500 பல்கலைக்கழகங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.*
- *வரும் 2021ஆம் ஆண்டில் உலகளவில் 80 மில்லியன் மக்களில் 13 மில்லியன் ஆராய்ச்சிகள் வெளியீடு, 22000 அறிஞர்கள் வெளிவருவார்கள் என தெரிவித்துள்ளது.*

| Rank | Institute |
|---|---|
| 1 | University of Oxford , England ,UK |
| 2 | Stanford University , California,UK |
| 3 | Harvard University , Massachusetts,US |

| Rank | Institute |
|---|---|
| 301-350 | Indian Institute of Science (IISc), Bengaluru |
| 351-400 | Indian Institute of Technology (IIT), Ropar |
| 401-500 | Indian Institute of Technology (IIT), Indore |

### மருத்துவ பூங்கா அமைக்க ஆந்திரா அரசு ஒப்பந்தம்

- ஆந்திரா தொழில்துறை உள்கட்டமைப்பு நிறுவனம் மாநிலத்தில் மொத்த மருந்துவ பூங்கா அமைப்பதற்காக அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில் – இந்திய வேதியியல் தொழில்நுட்ப நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ரூ.6,940 கோடியில் ஆந்திராவின் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் 2000 ஏக்கரில் இந்த பூங்கா அமைய உள்ளது.

### N95 முகக்கவசம் தூய்மை செய்ய 'Chakr DeCoV' அறிமுகம்

- ஆத்ம நிர்பர் பாரத் கீழ் ஐஐடி – டெல்லி N95 முகக்கவசத்தை தூய்மை செய்ய 'Chakr DeCoV' இயந்திரம் என்ற புதிய கண்டுபிடிப்பை உருவாக்கி உள்ளது.
- N95 முகக்கவசத்தை மீது 'Chakr DeCoV' இயந்திரத்தில் பயன்படுத்துவதன் மூலம் 99.9% சதவீதம் SARS CoV-2 வைரஸை செயலிழக்க செய்து மீண்டும் பயன்படுத்த முடியும்.

### பூமியின் சுற்றுப்பாதையை கடக்க இருக்கும் விண்கல்

- கிசா பிரமிட்டை விட இரண்டு மடங்கு பெரிய விண்கல்லான 465824 2010 FR செப்டம்பர் 6 ஆம் தேதி பூமியின் சுற்றுப்பாதையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 465824 2010 FR என்ற விண்கல்லை நாசா கண்காணித்து வருகிறது. இது எர்த் நியர் ஆப்ஜெக்ட் என்றும் (என்இஓ) மற்றும் அபாயகரமான சிறுகோள் (potentially hazardous asteroid (PHA)) என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- நீர் பனி மற்றும் தூசித்துகள்களால் இவை உருவாக்கப்பட்டிருக்கும். சிறுகோள் 465824 2010 FR மார்ச் 18, 2010 அன்று கேடலினா ஸ்கை சர்வே (சிஎஸ்எஸ்) மூலம் கண்டுபிடிக்கப்பட்டது.

### ஒரே நேரத்தில் 60 செயற்கைக்கோள்களுடன் "பால்கன் - 9" ராக்கெட் விண்ணில் பாய்ந்தது

- உலகம் முழுவதும் சீரான மற்றும் அதிவேக இணைய சேவை வழங்குவதற்காக 'ஸ்டார் லிங்க்' என்ற திட்டத்தை செயல்படுத்த 'ஸ்பேஸ் எக்ஸ்' நிறுவனம் முடிவு செய்தது.
- புளோரிடா மாகாணம் ஸ்பேக்ஸ்எக்ஸ் கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து ஏவப்பட்டது. ஸ்பேஸ் எக்ஸ் 12வது ஸ்டார்லிங்க் ராக்கெட் வெற்றிகரமாக ஏவியது.
- இது பூமியின் சுற்றுப்பாதையில் மேலும் 60 செயற்கைக்கோள்களைச் சேர்த்தது. இந்த செயற்கைக்கோளிகளின் உதவியுடன் 100Mbpsக்கும் அதிகமான பதிவிறக்க வேகத்தை பதிவு செய்ய முடியும்.

### ஹைபர்சோனிக் ஏவுகணை செலுத்தும் வாகனம் வெற்றிகரமாக சோதனை

- ஒலியின் வேகத்தைவிட சுமார் 6 மடங்கு வேகத்தில் ஏவுகணையை ஏவும் திறன் கொண்ட வாகனம் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.
- ஹைபர்சோனிக் தொழில்நுட்பத்திலான ஏவுகணை செலுத்து வாகனத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) உருவாக்கியுள்ளது.
- 'ஹைபர்சோனிக் தொழில்நுட்பத்துடன் கூடிய ஏவும் வாகனமானது ஒடிஸா கடற்பகுதியின் வீலர் தீவில் அமைந்துள்ள ஏபிஜே அப்துல்

கலாம் ஏவுதளத்திலிருந்து வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

- இத்தகைய தொழில்நுட்பமானது ரஷியா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளிடம் மட்டுமே உள்ளது. தற்போது அந்தப் பட்டியலில் இந்தியாவும் இணைந்துள்ளது‘.

### விண்கலத்திற்கு கல்பனா சாவ்லாவின் பெயர்

- கொலம்பியா விண்வெளி விண்கல பேரழிவில் இறந்த ஏழு பயனாளர்களில் ஒருவரான கல்பனா சாவ்லாவின் நினைவாக நாஸாவின் விண்கலம் என்ஜி-14க்கு கல்பனா சாவ்லா பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- விண்வெளிக்குச் சென்ற இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முதல் பெண் கல்பனா சாவ்லா ஆவார்.
- கடந்த 1997 ஆண்டு நவம்பர் 19 முதல் டிசம்பர் எஸ்.டி.எஸ்.87-மற்ற ஆறு நபர்களுடன் 80க்கும் மேற்பட்ட சோதனை மேற்கொண்டார்.
- கல்பனா சாவ்லா என்ஜி-14 விண்கலம் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு முக்கியமான சரக்குகளை ஏற்றி செல்லும்.

### 5ஜி தொழில்நுட்பம்: இந்தியா-அமெரிக்கா இஸ்ரேல் கூட்டணி

- ஐந்தாம் தலைமுறை (5ஜி) அலைக்கற்றை உள்ளிட்ட அதிநவீன தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்கு இந்தியா-அமெரிக்கா-இஸ்ரேல் நாடுகள் முத்தரப்பு கூட்டணியை அமைத்துள்ளன.
- இந்த முத்தரப்பு கூட்டணியானது உலக நாடுகள் சந்தித்து வரும் சவால் நிறைந்த பிரச்னைகளுக்குத் தீர்வு காண முயற்சிக்கும்.
- அமெரிக்காவில் உள்ள சிலிகான் பள்ளத்தாக்கு, இந்தியாவின் பெங்களூரு, இஸ்ரேலின் டெல் அவிவ் ஆகியவை தொழில்நுட்ப நிறுவனங்களுக்கான முக்கிய மையங்களாக விளங்கி வருகின்றன.

### சூப்பர் நோவா *LSQ14fmg*

- சர்வதேச ஆராய்ச்சி குழுவான புளோரிடா மாநில பல்கலைக்கழக சேர்ந்த 37 பேர் கொண்ட குழு சூப்பர் நோவா LSQ14fmg கண்டறிந்துள்ளனர்.
- இது பூமியிலிருந்து நூறு மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்து உள்ளது.
- இதன் தரவுகள் சிலியில் உள்ள தொலைநோக்கி மற்றும் ஸ்பெயின்ஸ் உள்ள Nordic Optical Telescope மூலம் சேகரிக்கப்பட்டன.
- ”சூப்பர்-சந்திசேகர்” குழுவின் உறுப்பினர்கள் வெடிக்கும் நட்சத்திரங்களில் ஐஏ வகை சேர்ந்த சூப்பர்நோவா என அழைக்கின்றனர்.

### கிருஷ்ணா-கோதாவரி நதி படுகை எரிபொருள் மீத்தேன் உற்பத்திக்கு ஒரு சிறந்த வளமாகும்




- உலகில் புதைபடிவ எரிபொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் கோதாவரி (கேஜி) படுகையில் உள்ள மீத்தேன் ஹைட்ரேட் படிவங்கள் ஒரு வளமான ஆதாரமாகும்.
- மீத்தேன் இயற்கை வாயுவை போதுமான அளவில் விநியோகம் செய்வதை இது உறுதி செய்யும்.
- மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின் தன்னாட்சி நிறுவனமான அகர்கர் ஆராய்ச்சி நிறுவனத்தின் (ஏஆர்ஐ) ஆராய்ச்சியாளர்கள் அண்மையில் நடத்திய ஆய்வில், மீத்தேன் ஹைட்ரேட் படிவங்கள் கிருஷ்ணா-கோதாவரி (கேஜி) படுகையில் அமைந்துள்ளது என்றும் இவை உயிரி பாரம்பரியத்தின் தொடக்கத்தை சார்ந்தது என்றும் கண்டுப்பிடித்துள்ளனர்.

### நரம்புகளின் ஆழத்தில் ரத்தம் உறைதலை தடுக்கும் கருவி

- இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கும் தன்னாட்சி பெற்ற அமைப்பான திருவனந்தபுரத்தில் உள்ள ஸ்ரீ சித்திர திருநாள் மருத்துவ அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் குழு ஒன்று நரம்புகளின் ஆழத்தில் ரத்தம் உறைதலை தடுக்கும் கருவியை உள்நாட்டிலேயே உருவாக்கியுள்ளது.
- நீண்ட நாட்களாக நடக்க முடியாமல் இருக்கும் நோயாளிகள், படுக்கையிலேயே இருப்பவர்கள், அறுவை சிகிச்சைக்கு பின் நடக்க முடியாமல் இருப்பவர்கள், கால் முடக்கத்தால் அவதிப்படுபவர்கள், வலி, வீக்கம் மற்றும் இதர பாதிப்புகளை உடையவர்களுக்கு இந்த கருவி நிவாரணமளிக்கும்.

### ஒரே ராக்கெட், 9 செயற்கைக்கோள்கள்: கடல் ஏவுதளத்தில் இருந்து விண்வெளிக்கு அனுப்பிய சீனா

- சீனாவின் ஜிலின் மாகாணம் சாங்சுன் நகரில் மஞ்சள் கடல் பகுதியில் சீனா தனது 2-வது கடல் ஏவுதளத்தை அமைத்துள்ளது. இந்த ஏவுதளத்தில் நிலை நிறுத்தப்பட்டிருக்கும் கப்பலில் இருந்து ராக்கெட் ஒன்றை சீனா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.
- இந்த ராக்கெட்டில் 9 செயற்கைக்கோள்கள் விண்ணுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.
- லாங் மார்ச் 11 கேரியர் ராக்கெட், 3 வீடியோ செயற்கைக்கோள்கள், 6 புஷ்புரூம் செயற்கைக்கோள்களுடன் விண்ணில் பாய்ந்தது. தலா 42 கிலோ எடையுள்ள இந்த செயற்கைக்கோள்கள் வேளாண்மை, வனவியல் நில வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற துறைகளில் தொலைநிலை உணர்திறன் சேவைகளை வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஏ-சாட் ஏவுகணை சோதனை வெற்றி: சிறப்பு அஞ்சல் தலை வெளியீடு



- செயற்கைக்கோள்களை தாக்கி அழிக்கும் ஏவுகணை (ஏ-சாட்) சோதனை வெற்றியடைந்ததன் நினைவாக சிறப்பு அஞ்சல் தலை வெளியிடப்பட்டுள்ளது.
- செயற்கைக்கோளைத் தாக்கி அழிக்கும் ஏவுகணை சோதனையை, ஒடிஸாவில் உள்ள டாக்டர் அப்துல் கலாம் தீவில் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) கடந்த ஆண்டு மார்ச் 27-ஆம் தேதி வெற்றிகரமாக நடத்தியது. இந்த பரிசோதனைக்கு மிஷன் சக்தி என்று பெயரிடப்பட்டிருந்தது.

### இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட சிக்னல் தொழில்நுட்பம்

- டெல்லி மெட்ரோ ரயில் நிறுவனம் i-ATS (தானியங்கி ரயில் மேற்பாவை – (Automatic Train Supervision) அறிமுகம் செய்துள்ளது.
- இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. இது சிக்னல் வெளியிடும் அமைப்பின் முக்கிய துணை அமைப்பாகும்.
- இந்த சிக்னல் தகவல் தொடர்பு ரயில் கட்டுப்பாட்டு அமைப்பு - Communication Based Train Control என்ற தொழில்நுட்பம் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது.
- தேசிய பொறியாளர் தினமான செப்டம்பர் 15 அன்று சிக்னல் அறிமுகம் செய்யப்பட்டது.

### பூமியின் சுற்றுவட்ட பாதையில் 32 புவி கண்காணிப்பு சென்சார் கருவிகள்

- புவி கண்காணிப்பு செயற்கை கோள்கள், 5 தகவல் தொடர்பு செயற்கைகோள்கள் கடந்த 2018ம் ஆண்டு ஜனவரி முதல் செயல்பாட்டில் உள்ளன. இதில் உள்ள 32 அதிநவீன புவி

கண்காணிப்பு சென்சார் கருவிகள் நமக்கு தேவையான தகவல்களை அளித்து வருகின்றன.

- விண்வெளித்துறையின் கீழ் இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அதிகார மையத்தை (INSPACe) மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது. விண்வெளித் துறையில் தனியார் துறையின் பங்களிப்பை மேம்படுத்துவதற்காக இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- விண்வெளி நடவடிக்கைகளை மேற்கொள்ள 500-க்கும் மேற்பட்ட கம்பெனிகள் இஸ்ரோவுடன் இணைந்துள்ளன.
- மத்தியப் பணியாளர் மற்றும் விண்வெளித்துறை இணையமைச்சர் டாக்டர். ஜித்தேந்திர சிங் மாநிலங்களவையில் எழுத்துபூர்வமாக தாக்கல் செய்தார்.

### *'WD 18566 b'* என்ற வெள்ளை குள்ள கோள் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்

- சர்வதேச விஞ்ஞானிகள் குழு WD 18566 என்ற வெள்ளை குள்ள கோளை கண்டறிந்துள்ளனர். இது இறந்த நட்சத்திரம் என்றும் அழைக்கப்படுகிறது.
- இக்கோள் 80 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ளன. 1.4 நாள்கள் மட்டுமே வாழ்ந்து உள்ளது. வியாழன் கோள் அளவை கொண்டது.
- நாஸா விஞ்ஞானிகள் ஸ்பெட்ஸகர் விண்வெளி தொலைநோக்கி மற்றும் டெஸ் தொலைநோக்கி மூலம் கண்டறிந்துள்ளனர். WD 18566 குள்ள கோள் WD 1856+534 என்ற கோளை விட 7 மடங்கு பெரியது.

### உலகின் மிகச்சிறிய அல்ட்ராசௌண்ட் கண்டறியும் கருவி



- ஹெல்ம் ஹோல்ட்ஸ் ஜென்ட்ரம் மன்ச்சென் மற்றும் மியூனிக் தொழில்நுட்ப பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் உலகின் மிகச்சிறிய அல்ட்ராசௌன்ட் கண்டறியும் கருவி உருவாக்கி உள்ளனர்.
- போட்டோனியம், சிலிக்கான் சிப் கொண்டும் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- மனித தலைமுடியை விட ஒரு மடங்கு சிறியது. இது சூப்பர் ரெசல்யூஷன் இமேஜிங் என அழைக்கப்படுகிறது.

### 'கரோனாவிற்கான கண்டறியப்படும் நவீன கருவிகள்'

- ஒரு மணி நேரத்திற்குள் கரோனா தொற்றை கண்டறியும் வகையில் நவீன துரித பரிசோதனைக் கருவியை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- அமெரிக்காவில் செயல்பட்டு வரும் மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இதற்கு ஸ்டாப் கோவிட் (STOPCovid) என்று பெயரிட்டுள்ளனர்.
- இந்த ஸ்டாப் கோவிட் பரிசோதனை முறையில் ஆர்.என்.ஏவை ஈர்க்கும் காந்த மணிகளை ஆராய்ச்சியாளர்கள் சேர்த்துள்ளனர். இதன் மூலம் நோய்த்தொற்றுக்கு காரணமாக வைரஸ் கிருமிகளை ஒரு சேர குவிக்க முடியும் என்று தெரிவித்துள்ளனர்.

### குறைந்த விலையில் காற்றோட்ட சாதனம் உருவாக்கம்

- ஐஐடி புவனேஸ்வர் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு மாணவர் குழு ஒரு புதிய காற்றோட்ட சாதனத்தை உருவாக்கியுள்ளது, இது லேசான சுவாசக் கோளாறால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு, குறிப்பாக COVID-19 ஆல் பாதிக்கப்பட்டவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.
- இது தலைக்கு ஒரு குமிழி உறை போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது மற்றும் ஹைபர்பேரிக் ஆக்ஸிஜன் சிகிச்சையின் கொள்கையில் செயல்படுகிறது.

- உடலின் குணப்படுத்தும் செயல்முறையை விரைவுபடுத்துவதற்கு ஒரு நபருக்கு கிட்டத்தட்ட தூய ஆக்ஸிஜனை உள்ளிழுக்கவும் இது உதவுகிறது.
- 'ஸ்வாஸ்னர்' (Swasner) என்று பெயரிடப்பட்ட இது அவசரகால சூழ்நிலையில் சுவாச நோய்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாற்று வழியாக செயல்பட முடியும்.

### கரோனாவை விரைவாக கண்டறியும் சோதனை ஃபெலுடா சோதனைக்கு ஒப்புதல்

- கரோனா பரவல் இந்தியாவில் தொடக்க நிலையில் இருந்த போது, சிஎஸ்ஐ.ஆர் நிறுவனத்தின் ஜீனோமிக்ஸ் மற்றும் ஒருங்கிணைந்த உயிரியல் கவுன்சில் எளிய சோதனை முறையை கண்டறிந்தது.
- எளிமையாக கரோனாவை உறுதி செய்யும் முறைக்கு ஃபெலுடா எனப் பெயர் சூட்டப்பட்டது.
- இந்நிலையில் இந்திய மருந்துகள் கட்டுப்பாட்டு அமைப்பு இதனை வர்த்தக ரீதியாக பயன்படுத்த அனுமதி அளித்துள்ளது.
- டாடா சி ஆர்ஜஎஸ்பி எனப்படும் இந்த சோதனை பிசிஆர் சோதனைகளின் துல்லியமான அளவை விரைவாகவும், குறைந்த செலவிலும் கண்டறிய வழி செய்கிறது.
- கேஸ் 9 புரதத்தை பயன்படுத்தி கரோனாவை கண்டறியும் முதல் சோதனை இது என்பது குறிப்பிடத்தக்கது.
- FELUDA என்பது FNCAS9 Editor Linked Uniform Detection Assay என்ற தொழில்நுட்ப பெயரின் சுருக்கமாகும்.

### மெக்னீஸியம் பயன்படுத்தி எலும்பு முறிவுக்கு சிகிச்சை

- நானோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மெக்னீஸியம் பூசப்பட்ட உலோக கலவைக் கொண்டு, எலும்பு முறிவுக்கு சிகிச்சையளிக்க சென்னை ஐஐடி ஆராய்ச்சியாளர்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.
- இந்த ஆராய்ச்சியின் மருத்துவ முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் விதமாக ஆடு அல்லது செம்மறி ஆடு போன்ற பெரிய விலங்குகளின் எலும்பு முறிவுகளைச் சரிசெய்வதில், புதிதாக உருவாக்கப்பட்ட நானோ தொழில்நுட்பத்திலான மெக்னீசியம் உலோக கலவையைப் பயன்படுத்தி பரிசோதனை செய்ய உள்ளனர்.

### இந்தியாவின் முதல் வணிக சோனார் டோம்

- இந்திய கப்பற்படைக்காக இந்தியாவின் முதல் வணிக சோனார் டோம் மும்பையில் உள்ள Kineco நிறுவனம் வடிவமைத்து உள்ளது.
- கோவாவின் மறைந்த முன்னாள் முதலமைச்சாரான மனோகர் பாரிக்கர் சோனார் டோம் வடிவமைக்க இந்நிறுவனத்திடம் ஒப்படைத்திருந்தார்.
- தற்போது பணிகள் நிறைவடைந்த நிலையில் இந்தியாவின் முதல் வணிக சோனார் டோம் P15 Alpha warship கோவா மாநிலத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### 2024 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் 5 டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்குக்கு பங்களிப்பதற்கான முக்கிய உந்துதலாக, உயிரி தொழில்நுட்ப துறை அங்கீகரிக்கப்பட்டுள்ளது

- உயிரி மருந்து பொருட்களை சந்தைக்கு கொண்டு வரும் நோக்கத்துடன், தேசிய உயிரி மருந்து திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை கடந்த 2017-ல் ஒப்புதல் அளித்தது. இத்திட்டத்தின் நோக்கம் தடுப்பூசிகள் மற்றும் மருத்துவ கருவிகளை உருவாக்குவது, பரிசோதனை மற்றும் தயாரிப்புக்கான கட்டமைப்பை உருவாக்குவது மற்றும் ஆராய்ச்சியை ஊக்குவிப்பது ஆகும்.
- தேசிய உயிரிமருந்து திட்டம், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு உயிரிமருந்து தயாரிப்பு மேம்பாட்டுக்கு ஆதரவளிக்கிறது,

**'ஆராய்ச்சிகள் வலுப்படுத்த அண்டை நாடுகளுடன் பரிசோதனை முயற்சி'**

- உயிர் தொழில்நுட்ப துறை "அண்டை நாடுகளுடன் மருத்துவ ஆராய்ச்சி சோதனை திறனை வலுப்படுத்துதல்" என்ற திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.
- கோவிட்-19 தடுப்பூசி சோதனை திறனை மேம்படுத்துவது மூலம் குறைந்த வருமான கொண்ட நாடுகளும் இந்த சோதனை முயற்சியில் பங்கு கொள்ளும்.
- இந்த சோதனை பயிற்சி மூலம் அறிவுகளை பகிர்ந்து கொள்வதையடுத்து அண்டை நாடுகளுடன் தொழில்நுட்ப திறனையும் இந்தியா பெற்றுக் கொள்ளும்.
- உயிர் தொழில்நுட்பத்துறை மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சகம் இணைந்து இத்திட்டத்தின் முதல் கட்டத்தை தொடங்கி உள்ளது.
- இந்த பயிற்சியின் நோக்கம், ஆய்வாளர்கள் மற்றும் புலனாய்வு குழுகள் அவர்களின் மருத்துவ சோதனை திறனை மேம்படுத்துவதும் பலப்படுத்துவதற்கும் உதவும்.

**பிருத்வி- *II* ஏவுகணை சோதனை வெற்றி**

***(Prithvi-II missile)***

- உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட அணுகுண்டை ஏவும் திறன் கொண்ட மேற்பரப்பில் இருந்து மேற்பரப்பில் தாங்கி அழிக்கும் திறன் கொண்ட பிருத்வி-II ஏவுகணை சோதனை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.
- ஒடிசாவின் சாண்டிப்பூரில் ஒருங்கிணைந்த சோதனை வரம்பில் இருந்து இச்சோதனை மேற்கொள்ளப்பட்டது.
- 350 கி.மீ வரை இலக்குகளை தாக்கி அழிக்கும் திறன் கொண்டது. இது 500 முதல் 1000 கிலோ வரை எடையுள்ள பொருட்களை சுமக்கும் திறன் கொண்டது.
- பிருத்வி-II ஏவுகணை இரட்டை இன்ஜின்கள் கொண்டு இயக்கப்பட்டது.
- இதற்கு முன்பு சோதனை கடந்த 2019ல் நவம்பர் 20 அன்று நடைபெற்றது.

**'MOUSHIK' என்ற நுண் செயலி**

- ஐஐடி-மெட்ராஸ் இணையம் அடிப்படையில் இயங்கும் 'MOUSHIK' என்ற நுண்செயலியை உருவாக்கி உள்ளனர்.
- 'MOUSHIK' என்பது ஒரு சிவப்பு நிறம் ஆகும். டிஜிட்டல் இந்தியாவின் ஸ்மார்ட் நகரங்களை ஒருங்கிணைப்பதற்கான ஒரு பகுதியாகும்.
- இந்த நுண்செயலி உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டது.

# 5.2 ஊடகம் மற்றும் தொலைதொடர்பு

### *"Pensioners Corner"* என்ற மொபைல் செயலி

- மத்திய தொழிற்துறை பாதுகாப்பு படை "ஓய்வூதியதாரர்கள் கார்னர்" ("Pensioners Corner") என்ற மொபைல் பயன்பாட்டை உருவாக்கி உள்ளது.
- இதன் மூலம் ஓய்வூதியம் பெறுவோரை அணுகவும், ஓய்வூதிய பிரச்சனைகளுக்கு டிஜிட்டல் தளம் மூலம் தீர்வு காணவும் சிஐஎஸ்எஃப் இச்செயலியை உருவாக்கி உள்ளது.

### ஆங்கில கற்றல் செயலி *"EnglishPro"* அறிமுகம்

- மத்திய கல்வி அமைச்சர் டாக்டர் ரமேஷ் போக்ரியால் நிஷாங்க் ஹைதராபாத்தின் ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழி பல்கலைக்கழகம் (EFLU) உருவாக்கிய மொபைல் செயலி "EnglishPro"ஐ அறிமுகப்படுத்தினார். இந்த செயலி இளைஞர் திறன்களை மேம்படுத்த உதவும்.

### பஞ்சாப் அரசு "ஐ ராக்வாலி" செயலியை அறிமுகப்படுத்தி உள்ளது

- பஞ்சாபில் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் பராமரிப்பதற்கும், மக்களை பங்குதாரர்களாக மாற்றுவதற்கும், மாநில வனத்துறை 'ஐ ரக்வாலி' செயலியை அறிமுகப்படுத்தியது.
- இந்த புதிய முயற்சியின் மூலம், பஞ்சாப் அரசு மாநில வனப்பகுதியைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேலும் அதிக மரங்களை நட செய்ய மக்களை ஊக்குவிப்பதே நோக்கம்.

### "ஆப்கா மித்ரா" சாட்போட்

- ஹரியானா மாநில முதலமைச்சர் மனோகர் லால் கத்தார் வாட்ஸ் அப் கல்வி சாட்போட் "ஆப்கா மித்ரா " தொடங்கி வைத்தார்.
- 2020-21 புதிய கல்வி கொள்கையில் அரசு உதவிபெறும் மற்றும் சுய நிதி கல்லூரிகளில் இளங்கலை படிப்புகளுக்கான (UG) இணையத்தள சேர்க்கை தளம் ஆகும்.
- "Apka Mitra" இணையதளம் மூலம் சேர்க்கை தொடர்பான சந்தேகங்களுக்கு விடையளிக்கும் முதல் கல்வி வாட்ஸ் அஃப் சாட்போடு ஆகும்.

### ஐராட் செயலி அறிமுகம்

- ஐராட் (ஒருங்கிணைந்த சாலை விபத்து தரவு திட்டம்) செயலியின் அறிமுகம் மற்றும் பயிற்சி நிகழ்ச்சியை சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் நடத்தியது.
- கர்நாடகாவில் உள்ள குறிப்பிட்ட மாவட்டங்களுக்கு 2020 செப்டம்பர் 7 மற்றும் 8ம் தேதிகளில் இந்த நிகழ்ச்சி நடந்த நிலையில், உத்திரப் பிரதேசத்தில் உள்ள சில மாவட்டங்களுக்கு செப்டம்பர் 10 மற்றும் 11-ம் தேதிகளில் இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

### 2030க்குள் கூகுள் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை கொண்டு அலுவலகங்கள் இயக்க முடிவு

- 2030க்குள் கூகுள் தனது தரவு மையங்களையும் அலுவலகங்களையும் புதுப்பிக்கதக்க ஆற்றலை கொண்டு இயக்க உள்ளதாக தெரிவித்துள்ளது.
- இதன் மூலம் இயற்கை சக்தி மற்றும் நிலக்கரி சக்தி மூலம் இயங்கும் உலகின் பெரிய நிறுவனமாக மாறும் என தெரிவித்துள்ளது. கூகுள் தலைமை நிர்வாக அதிகாரி சுந்தர் பிச்சை இதை அறிவித்தார்.

### ரயில்வேயில் சரக்கு போக்குவரத்து விவரங்களை அறிய புதிய செயலி அறிமுகம்

- ரயில்வேயில் சரக்கு போக்குவரத்து தொடர்பாக பல்வேறு தகவல்களை எளிதாக அறியும் வகையில், சரக்கு போக்குவரத்து சேவை ("ஃபிரைட் சேவா" செயலி) செயலியை சென்னை ரயில்வே கோட்டம் அறிமுகப்படுத்தியுள்ளது.

- இந்தச் செயலி மூலமாக, சரக்கு போக்குவரத்து குறித்த அனைத்து தகவல்களையும் வாடிக்கையாளர்கள் எளிதில் பெற முடியும்.

### இ-கிராம் ஸ்வராஜ் தளம்

- ஊரக இந்தியாவுக்கு அதிகாரம் அளிப்பதற்காக பஞ்சாயத்துகளை டிஜிட்டல் மயமாக்கி வலுப்படுத்தும் வகையில், இ-கிராம் ஸ்வராஜ் என்னும் ஒருங்கிணைந்த தளத்தை பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் உருவாக்கியுள்ளது.
- கிராம பஞ்சாயத்துகளில் மேற்கொள்ளப்படும் பணிகளை கண்காணிப்பதற்காகவும், மதிப்பிடுவதற்காகவும் இந்த தளம் உருவாக்கப்பட்டுள்ளது.
- 2020-21-ஆம் ஆண்டில், சுமார் 2.43 லட்சம் கிராம பஞ்சாயத்துகள் தங்களது வளர்ச்சி திட்டத்தை இ-கிராம் ஸ்வராஜ் தளத்தில் இறுதி செய்துள்ளன.

### நெசவாளர்களுக்கு மேக் இன் இந்தியா திட்டம்: மத்திய அரசு அறிவிப்பு

- 'இந்திய பட்டு தொழிலில் கோவிட்-19 பெருந்தொற்று ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள்' என்னும் தலைப்பில் ஆய்வு ஒன்றை அரசு நடத்தியுள்ளது.
- இந்தியாவின் கைத்தறி பாரம்பரியத்தை விளம்பரப்படுத்துவதற்காக #Vocal4handmade என்னும் சமூக ஊடக முன்னெடுப்பை அரசு எடுத்தது.
- இந்த சமூக ஊடக பிரச்சாரம் இந்திய கைத்தறி பொருட்களுக்கான ஆர்வத்தை அதிகப்படுத்தியது தெரியவந்துள்ளது.
- கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் துறைகளின் நலனுக்காகவும், நெசவாளர்கள், கைவினைக் கலைஞர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் ஆகியோருக்கான சந்தையை விரிவுபடுத்தவும் அரசு மின் சந்தை மூலம் அவர்களின் பொருட்களை நேரடியாக அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்களுக்கு விற்கும் வசதியை அரசு அளித்துள்ளது.

### *‘e- Peek Pahani’* செயலி

- மகாராஷ்டிரா அரசாங்கம் “இ-பிக் பஹானி மொபைல் பயன்பாட்டை“ அறிமுகம் செய்துள்ளது.
- இச்செயலி மூலம் விவசாயிகளின் விளை பொருட்களுக்கு சரியான விலையும், மற்றும் நல்ல சந்தை மதிப்பும் பெற உதவும்.
- மேலும் விவசாயிகள் தங்கள் விளைச்சல் பற்றிய பயிற்சிகளின் புகைப்படங்கள், விவரங்களை பதிவேற்றம் செய்யலாம்.

### உத்தரபிரதேச முதல்வர் ‘யு ரைஸ்’ என்ற புதிய போர்ட்டலை அறிமுகப்படுத்தினார்

- ‘யு-ரைஸ்’ – மாணவர்களின் கண்டுபிடிப்புகளுக்கு உதவ 2020 செப்டம்பர் 24 அன்று உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் அவர்களால் தொடங்கப்பட்டது.
- தேசிய கல்வி கொள்கையை (என்இபி) அறிமுகப்படுத்திய முதல் மாநிலம் உத்தரபிரதேசம்.
- இந்த கொள்கையில் கிராமப்புற மற்றும் நகர்ப்புற இந்தியாவில் தொழில் பயிற்சி அடங்கும்.
- ‘யு-ரைஸ்’ போர்ட்டல் என்பது ஒரு புதுமையான கருத்தாகும்.
- இது சேர்க்கை, கல்வி, நிறுவனம், பயிற்சி, கட்டணம், தேர்வு, பரிசோதனை மற்றும் வேலைவாய்ப்பு தகவல்கள் தொடர்பான அனைத்து தகவல்களையும் வழங்கும்.

### *“Visitassam”* என்ற செயலி

- அசாம் மாநில அரசு “Visitassam” என்ற மொபைல் செயலியை அறிமுகம் செய்துள்ளது. கோவிட்-19 பரிசோதனை மேற்கொள்ளும் செயல்முறைக்கான காலம் அதிகமாவதை தடுக்க விமான பயணிகளுக்காக இச்செயலி அறிமுகம் செய்துள்ளது.
- விமான பயணிகள் இச்செயலியை உள்ள விவரங்களை பூர்த்தி செய்வது மூலம் காலம் விரையத்தை தவிர்க்க முடியும்.

- மேலும் 24 மணி நேரத்தில் "Tatkal RT-PCR" சோதனை மூலம் கோவிட்-19 பரிசோதனை மேற்கொள்ளலாம்.

**கரோனா தடுப்பு இணைய முனையத்தை அறிமுகம் செய்த ஹர்ஷ் வர்தன்**

- கரோனா தடுப்பூசி குறித்த அனைத்து விவரங்களும் கொண்ட இணைய முனையத்தை மத்திய சுகாதார அமைச்சர் ஹர்ஷ் வர்தன் அறிமுகம் செய்துள்ளார்.
- இந்தியாவில் 3 வகை தடுப்பூசிகள் பரிசோதனையில் உள்ளன. இந்நிலையில் மத்திய சுகாதார அமைச்சர் ஹர்ஷ் வர்தன் ஒரு இணைய முனையத்தைத் ICMR's Mobile Stroke தொடங்கி வைத்துள்ளார்.
- கரோனா தடுப்பூசி குறித்து தொடங்கப்பட்ட அந்த முனையத்தில் கரோனா தடுப்பூசி குறித்த அனைத்து விவரங்களும் இடம் பெற்றுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்

# 6 தினசரி தேசிய நிகழ்வு



**வல்லபாய் படேல் சிலைக்கு செல்ல முதல் கடல் விமான சேவை**

- *அகமதாபாத்தில் உள்ள சபர்மதி ஆற்றிலிருந்து குஜராத்தின் கெவாடியாவில் உள்ள ஒற்றுமை சிலை வரை வரும் அக்டோபர் 31 2020 முதல் கடல் விமான சேவை (seaplane service) தொடங்கப்பட உள்ளது.*
- *இச்சேவையை Spicejet விமான நிறுவனம் சர்தார் வல்லபாய் படேல் பிறந்த தினம் முதல் வழங்க உள்ளது.*
- *மத்திய விமானப்படை அமைச்சகம், இந்திய விமானப்படை ஆணையம் ஆகியவற்றுடன் இச்சேவை வழங்க ஒப்பந்தம் குஜராத் அரசு மேற்கொள்ளப்பட்டு உள்ளது.*

**963 ரயில் நிலையங்கள் சோலார் மயம்**

- *நாட்டிலுள்ள 963 ரயில்நிலையங்கள் இதுவரை சோலார்மயமாக்கப்பட்டுள்ளன. 2030-ஆம் ஆண்டுக்குள் அனைத்து ரயில் நிலையங்களும் சூரிய ஒளி மின்சக்தி உற்பத்தியில் தன்னிறைவு அடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*
- *இந்திய ரயில்வேயில் சூழல் மாசு ஏற்படுத்தாத மின்சாரப் பயன்பாட்டை அதிகரிக்க சூரிய ஒளி மின்சாரத்தை (சோலார் பவர் பிளான்ட்) உற்பத்தி செய்யும் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.*
- *வரும் பத்தாண்டுகளில் 3,100 கோடி யூனிட் மின்சாரம் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய பயன்பாடு 2,000 கோடி யூனிட்களாகும்.*
- *வாராணசி, புது தில்லி, பழைய தில்லி, ஜெய்ப்பூர், செகந்தராபாத், கொல்கத்தா, கவுஹாத்தி, ஹைதராபாத், ஹௌரா உள்ளிட்ட ரயில்நிலையங்கள் சோலார் மயமாக்கப்பட்டுள்ளன.*
- *20 கிகா வாட் மின்சாரத்தை 2030-க்குள் (ஒரு கிகா வாட்: 10 லட்சம் கிலோ வாட்) உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.*

**உலகிலேயே மிகப்பெரிய சூரியசக்தி மரத்தை சிஎஸ்ஐஆர்-சிஎம்ஈஆர்ஐ உருவாக்கியுள்ளது**



- *உலகிலேயே மிகப்பெரிய சூரியசக்தி மரத்தை மத்திய அறிவியல், தொழிலக ஆராய்ச்சிக் குழுமம் – மத்திய இயந்திரப் பொறியியல் ஆராய்ச்சிக் கழகம் (Council of Science and Industrial Research – Central Mechanical Engineering Research Institute – CSIR-CMERI) உருவாக்கியுள்ளது.*
- *இது துர்காபூரில் உள்ள மத்திய அறிவியல், தொழிலக ஆராய்ச்சிக் குழுமம் – மத்திய இயந்திரப் பொறியியல் ஆராய்ச்சிக் கழகக் குடியிருப்புக் காலனியில் நிறுவப்பட்டுள்ளது.*
- *இந்த சூரிய சக்தி மரத்தின் திறன் 11.5 கேடபிள்யு பி க்கும் அதிகமாகும். தூய்மையான சுற்றுச்சூழலுக்கு இயைந்த 12,000 முதல் 15,000 யூனிட்டுகள் மின்சக்தியை இதனால் ஆண்டொன்றுக்கு தயாரிக்க முடியும்.*

### கொப்பலா பொம்மை தயாரிப்பு மண்டலம் கர்நாடகம்

- கர்நாடக முதல்வர் பி.எஸ். எடியூரப்பா, பெங்களூரிலிருந்து 351 கி.மீ தூரத்தில் உள்ள கொப்பாலாவில் பொம்மை தயாரிப்பு மண்டலம் உருவாக்கப்படும் எனவும் அதன் மூலம் 40,000 பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் எனவும் கூறியுள்ளார்.
- இந்த தொழில் மண்டலம், ரூ .5,000 கோடிக்கு மேல் முதலீடுகளை ஈர்க்கும் திறனைக் கொண்டுள்ளது என்று கர்நாடக முதல்வர் எடியூரப்பா தெரிவித்தார். இது இந்தியாவின் முதல் பொம்மை தாயரிப்பு மண்டலம் ஆகும்.
- பிரதமர் நரேந்திரமோடி மன் கி பாத் நிகழ்ச்சியில் உரையாடும் போது, இந்தியா உலகின் பொம்மை உற்பத்தி மையமாக மாற வேண்டும் என குறிப்பிட்டார்.

### அடல் குகை பாதை

- ரோதங் குகை பாதை திட்டம் இமாச்சல பிரதேசத்தையும் லடாக் பகுதியையும் இணைக்கும் இந்த பாதைக்கு, 'அடல் குகை பாதை' என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இமாச்சலப் பிரதேசத்தின் மணாலியில் இருந்து லடாக் யூனியன் பிரதேசத்தின் லே பகுதிக்கு இடையில் குகை பாதைக் கட்டப்படும் என்று கடந்த 2000-ம் ஆண்டு ஜூன் மாதம் 3-ம் தேதி அப்போதைய பிரதமர் வாஜ்பாய் அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். அத்துடன், குகை பாதை அமைக்கும் பணி, 'எல்லை சாலை மேம்பாட்டு அமைப்பிடம்' (பிஆர்ஓ) ஒப்படைக்கப்பட்டது. தற்போது பணி நிறைவடைந்து உள்ளது.

### முதல் மிதிவண்டி ஓட்டுதல் உச்சி மாநாடு

- இந்திய மிதிவண்டி கூட்டமைப்பு வரும் 2020ஆம் ஆண்டு முதல் மிதிவண்டி ஓட்டுதல் உச்சி மாநாடு நடத்த உள்ளது.
- நாட்டில் மிதிவண்டியின் கலாச்சாரத்தை மேம்படுத்துவதை இந்த மாநாட்டின் முக்கிய நோக்கம்.
- இந்த மாநாடு வரும் 2021ஆம் ஆண்டு டெல்லி, மும்பை, பெங்களூர் ஆகிய நகரங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- மிதிவண்டி கூட்டமைப்பு மாநாட்டை நடத்த Contarctica என்ற சந்தை நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

### சாலை விபத்துகள் எண்ணிக்கை டெல்லியில் அதிகம்

- இந்திய தலைநகரான டெல்லியில் அதிக அளவிலான சாலை விபத்துகள் நிகழ்ந்துள்ளதாக தேசிய குற்ற பதிவு வாரியம் அறிக்கை வெளியிட்டுள்ளது.
- கடந்த 2019 ஆம் ஆண்டு 1,39,123 பேர் தற்கொலை செய்து கொண்டனர் எனவும் 421, 104 பேர் சாலை விபத்தால் இறந்துள்ளனர் எனவும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.
- தேசிய குற்ற பதிவு வாரியம் தனது 53வது அறிக்கையை வெளியிட்டது. கடந்த 1967ஆம் ஆண்டு முதல் "Accidental Deaths and Suicides in India அறிக்கை வெளியிட்டுள்ளது.

### அசுத்தத்தை இந்தியா மத்திய பிரதேசத்தை விட்டு வெளியேறும் பிரச்சாரம்

('Gandagi Bharat Chhodo Madhya Pradesh' )

- மத்திய பிரதேச மாநில அரசு தூய்மை பிரச்சாரமான 'Gandagi Bharat Chhodo Madhya Pradesh' என்ற பிரச்சாரம் தொடங்கி உள்ளது.
- மத்திய பிரதேச நகர்ப்புற நிர்வாக மேம்பாட்டு அமைச்சர் இந்த 15 நாள் தூய்மையான பிரச்சாரம் தொடங்கி வைத்தார்.
- ஐந்து முக்கிய கருத்துகளை கொண்டுள்ளது.
  - தூய்மையாக இருக்க உறுதிமொழி
  - நகரப்புற கழிவு வெளியேறுவது குறைதல்
  - கோவிட்-19 காலங்களில் தூய்மை கடைபிடித்தல்
  - வீடுகளில் இருந்து கழிவுகளை பிரித்தல்
  - பொது இடங்களை தூய்மை கடைப்பிடித்தல்

### ரூ.208 கோடி நிதியுதவியுடன் 11 மாநிலங்களில் குளிர்பதன திட்டங்கள்

- வேளாண் பொருள்களை சேமிக்கவும், பதப்படுத்தவும் தமிழகம் உள்பட 11 மாநிலங்களில் 27 குளிர்பதன திட்டங்களை செயல்படுத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. மத்திய அரசின் ரூ.208 கோடி நிதியுதவியுடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.
- இந்தப் புதிய திட்டங்களில் 4 திட்டங்கள் தமிழகத்தில் அமையவுள்ளன.
- 7 திட்டங்கள் ஆந்திரத்திலும், ஹரியாணாவில் 4 திட்டங்களும் செயல்படுத்தப்படவுள்ளன. கர்நாடகத்தில் 3 திட்டங்களும், ராஜஸ்தான், குஜராத்தில் தலா 2 திட்டங்களும், பஞ்சாப், பிகார், கேரளம், மத்திய பிரதேசம், உத்தர பிரதேசத்தில் தலா 1 திட்டமும் செயல்படுத்தப்படவுள்ளன.
- இந்தத் திட்டங்கள் உணவுப்பொருள்களை பதப்படுத்தும் உள்கட்டமைப்பின் வளர்ச்சியை மிகப்பெரிய அளவில் உயர்த்துவது மட்டுமன்றி, வேளாண் விளைப்பொருள்கள் விநியோகத்தை சீரமைக்கவும், கிராமப்புற பகுதிகளில் நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், உழவர்கள் தங்கள் விளைபொருள்களுக்கு நல்ல விலையை பெறவும் உதவும்.

### தண்ணீர் ஹீரோ போட்டி 2.0

- ஜல்சக்தி அமைச்சகம் நீர் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை உறுதி செய்ய விழிப்புணர்வு ஏற்படுத்த *'Water Heroes – Share Your Stories's* என்ற போட்டியை அறிமுகம் செய்துள்ளது.
- இப்போட்டி செப்டம்பர் 1 தொடங்கி ஆகஸ்ட் 31, 2021ஆம் ஆண்டு வரை நடைபெற உள்ளது.
- இதில் ஒவ்வொரு மாதம் வெற்றியாளர்களை தேர்வு செய்து விருது வழங்கப்படும்.

### ஒரு பாரதம் உன்னத பாரதம்

- உத்திரகாண்ட், கர்நாடக மாநிலங்கள் ஒரு பாரதம், உன்னத பாரதம் *(Ek Bharat Shreshtha Bharat programme)* திட்டத்தின் கீழ் ஒன்றிணைந்துள்ளன.
- விளையாட்டு, வணிகம், கலாச்சாரம் போன்ற துறைகளில் ஒன்றிணைந்து செயல்பட உள்ளன.

### இளம் குழந்தைகள் மீது இந்தியா கவனம் செலுத்த வேண்டும்: குடியரசு துணைத்தலைவர்

- 'இந்தியாவில் இளம் குழந்தைகள், குறிப்பாக, ஏழைக் குழந்தைகள் மீது கவனம் செலுத்த வேண்டும்'' என்று குடியரசு துணைத் தலைவர் வெங்கய்ய நாயுடு வலியுறுத்தியுள்ளார்.
- இந்தியாவில் குழந்தை ஒன்றுக்கு ஆண்டுக்கு ரூ.1,723 செலவழிக்கப்படுகிறது. இந்த தொகையை 4 மடங்காக்கி பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- இளம் குழந்தைகள் விளைவு குறியீடு மற்றும் இளம் குழந்தைகளுக்கான சுற்றுச்சூழல் குறியீடு ஆகிய இரண்டும் அறிக்கையின் முக்கிய அம்சங்களாக இடம்பெற்றுள்ளன.
- இந்த இரண்டு குறியீடுகளிலும் கேரளா மற்றும் கோவா ஆகிய இரண்டு மாநிலங்களும் முதல் இடத்தில் உள்ளன. ஜார்க்கண்ட், உத்தரப்பிரதேசம், பிஹார், மத்தியப்பிரதேசம் ஆகியவை கடைசி 5 இடங்களில் உள்ளன.

### கர்ப்பிணி பெண்களுக்கான இரண்டு திட்டங்கள்

- ஆந்திரபிரதேச மாநில முதலமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டி புதிய இரண்டு திட்டங்கள் கர்ப்பிணி பெண்களுக்காக அறிமுகம் செய்து வைத்துள்ளார்.
- ஒய்.எஸ்.ஆர். சம்பூர்ணா, போஷ்னா மற்றும் ஒய்.எஸ்.ஆர். சம்பூர்ணா என்ற திட்டங்கள் அறிமுகம் செய்து வைத்தார். கர்ப்பிணி பெண்களுக்கு மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், குழந்தைகளுக்கும் சத்தான உணவு வழங்குவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.
- மாநிலத்தில் உள்ள 77 பழங்குடியின பகுதிகள் மற்றும் இதர நகர்ப்புற பகுதிகளுக்கு

*அங்கன்வாடி (8320) மையங்கள் மூலம் சத்தான உணவுகள் வழங்கப்படும்.*

### ஜம்மு காஷ்மீரின் அலுவல் மொழி டோக்ரி, காஷ்மீரி இந்தி-மருத்துவ அமைச்சரவை ஒப்பந்தம்

- *ஜம்மு-காஷ்மீரின் அலுவல் மொழிகள் மசோதா 2020ஐ பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. ஜம்மு காஷ்மீரின் அலுவல் மொழியாக டோக்ரி, காஷ்மீரி, உருது, இந்தி, ஆங்கிலம் ஆகியவற்றை இணைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.*

### வருடாந்திர இந்திய வாகனங்கள் உற்பத்தி சமூகம் 2020 கூட்டம்

- *இந்திய வாகனங்கள் உற்பத்தி சமூகத்தின் வருடாந்திர கூட்டம் 60வது "ASIAM Annual Convention 2020" காணொலி காட்சி வாயிலாக நடைபெற்றது.*
- *"Re-Building the Nation, Responsibly". என்ற பெயரில் நடைபெற்றது.*
- *சாலை மற்றும் நெடுஞ்சாலைத் துறையில் இந்தியா இரண்டாவது வலையமைப்பு கொண்ட நாடாக உள்ளதாக நிதின் கட்கரி தெரிவித்தார்.*

### ஸ்பேரோ திட்டம்

- *ஜம்மு – காஷ்மீர் மாநில ஆளுநர் ஸ்பேரோ திட்டத்தை (Sparrow) அறிமுகம் செய்து உள்ளது.*
- *ஸ்பேரோ திட்டம் என்பது ஜம்மு-காஷ்மீர் மாநில அரசு அலுவலர்கள் தங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்கவும், பணிகளில் வெளிப்படைத்தன்மை இருக்கவும் இத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.*
- *இந்த திட்டத்தை தேசிய தகவல் மையம் மற்றும் பொது நிர்வாகத்துறையுடன் இணைந்து தகவல் தொழில்நுட்பத்துறை, ஜம்மு-காஷ்மீர் இ-ஆளுமை முகமை வெளியிட்டுள்ளது.*

### ஜம்முவில் கஞ்சா மருந்து திட்டம்

- *ஜம்முவில் முதல் கஞ்சா மருந்து திட்டம், ஜம்முவில் உள்ள இந்திய ஒருங்கிணைந்த மருத்துவ நிறுவனம் தொடங்க உள்ளதாக மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.*
- *கனடாவின் ஒத்துழைப்புடன் இந்த திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது. இந்த ஆலையில் இருந்து தயாரிக்கப்படும் மருந்துகள் மற்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும்.*

### கிரண் ஹெல்ப் லைன்




- *மனநலப் பிரச்சனைகளால் உழன்று கொண்டிருப்பவர்களுக்கு உதவும் வகையில் மத்திய அரசு 24 மணி நேரமும் இயங்கக்கூடிய செல்போன் எண்ணை வழங்கியுள்ளது. கிரண் (1800-599-0019) என்ற பெயரில் வெளியாகியிருக்கும். இந்தத் திட்டத்தை அமைச்சர் தாவர் சந்த் ஹெலாட் அமல்படுத்தியுள்ளார்.*
- *இந்தச் சேவை ஹிந்தி, அஸாமி, மராத்தி, ஒடிசா, தெலுங்கு, தமிழ், மலையாளம், குஜராத்தி, பஞ்சாபி, கன்னடம், பெங்காலி, உருது, ஆங்கிலம் உள்ளிட்ட 13 மொழிகளில் இயங்குகிறது.*

### 10 வாரங்களில் 10 நாள்கள் 10 நிமிடங்கள் பிரச்சாரம்

*("10 Hafte 10 Baje 10 minute")*

- *டெல்லி மாநில அரசு டெங்கு நோயை ஒழிக்க "10 வாரங்கள் 10 நாள்கள் 10 நிமிடங்கள் என்ற விழிப்புணர்வு பிரச்சாரம் தொடங்கி வைத்துள்ளது. இப்பிரச்சாரம் இரண்டாவது கட்டம் ஆகும்.*

- முதல் கட்டம் கடந்த 2019ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டது. இதன் கீழ் மாநிலத்தில் உள்ள அனைத்து வீடுகளும் தங்கள் நீர் சேமிப்பு தொட்டிகளை 10 வாரங்களில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் 10 நிமிடங்களில் சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

**தேசிய மாதிரி கணக்கெடுப்பில் கல்வியறிவில் கேரளம் முதலிடம்**

- தேசிய அளவில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில், கல்வியறிவு பெற்ற மாநிலங்களின் வரிசையில் தொடர்ந்து கேரளம் முதலிடம் பிடித்துள்ளது. இப்பட்டியலில் ஆந்திரப் பிரதேசம் கடைசி இடம் பெற்றுள்ளது.
- தேசிய புள்ளியியல் அலுவலகம், கடந்த ஜூலை 2017 முதல் ஜூன் 2018 வரை, 75-வது தேசிய மாதிரிக் கணக்கெடுப்பை நடத்தியது.

**தேசிய மாதிரி கணக்கெடுப்பின்படி, நாட்டின் கல்வியறிவில்**

| நாடுகள் | கணக்கெடுப்பு |
|---|---|
| கேரளம் | 96.2 % |
| தில்லி | 88.7 % |
| உத்தரகண்ட் | 87.6 % |
| இமாச்சல் | 86.6 % |
| அசாம் | 85.9 % |
| **கடைசி 5 மாநிலங்கள்** | |
| ராஜஸ்தான் | 69.7 % |
| பிகார் | 70.9 % |
| தெலங்கானா | 72.8 % |
| உத்திரபிரதேசம் | 73 % |
| ஆந்திரப் பிரதேசம் | 66.4 % |

- நாட்டின் ஒட்டுமொத்த சராசரி கல்வியறிவு விகிதம் 77.7 %. இதில் ஊரகப்பகுதி (73.5 %), நகர்ப்புறத்தை (87.7 %) விட பின்தங்கியுள்ளது.
- ஆண்களின் கல்வியறிவு விகிதம் (84.7 %), பெண்களின் கல்வியறிவு விகிதத்தை (70.3 %) விட அதிகமாக உள்ளது.
- கேரளத்தில் ஆண்களின் கல்வியறிவு விகிதம் (97.4 %), பெண்களின் கல்வியறிவு விகிதத்தை (95.2 %) விட சற்று அதிகமாக இருந்தது. மாறாக ராஜஸ்தானில் ஆண் (80.8 %)- பெண் (57.6 %) கல்வியறிவில் பெருத்த இடைவெளி காணப்படுகிறது.

**லக்ஸம்பர்க் கவுரவ தூதராக சேதுராமன் மகாலிங்கம் நியமனம்**

- தமிழகம், கேரள மாநிலங்களை உள்ளடக்கிய சென்னையில் இயங்கும் லக்ஸம்பர்க் தூதரகத்தின் கவுரவ தூதராக சேதுராமன் மகாலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

**சர்வதேசப் பன்முக ஏழ்மை குறியீடு**

- பல்நோக்கு ஏழ்மை குறியீட்டு ஒருங்கிணைப்புக் குழுவை நிதி ஆயோக் அமைத்துள்ளது.
- திருமதி சன்யுக்தா தலைமையிலான இந்தக் குழுவில் பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் துறைகளில் இருந்து உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- ஊட்டச்சத்து, குழந்தைகள் இறப்பு விகிதம், பள்ளி செல்லும் ஆண்டுகள், பள்ளி வருகை, சமையல் எரிபொருள், சுகாதாரம், குடி தண்ணீர், மின்சாரம், வீட்டுவசதி மற்றும் வீட்டில் இருக்கும் பொருட்கள் ஆகிய 10 அம்சங்களைப் பற்றி கணக்கெடுக்கப்படும் ஒவ்வொரு வீடும் மதிப்பிடப்படுகிறது.
- 2010 இல் ஆக்ஸ்போர்டு ஏழ்மை மற்றும் மனிதவள மேம்பாட்டு முயற்சியால் (ஓபிஎச்ஐ) முதல்முறையாக உருவாக்கப்பட்ட சர்வதேசப் பன்முக ஏழ்மை குறியீடு, உலகின் 107 வளரும் நாடுகளில் உள்ள பன்முக ஏழ்மையை குறிப்பிடும் உலகளாவிய நடவடிக்கையாகும்.

**இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் சேவை - பெங்களூரு**

- நாட்டிலேயே முதல் முறையாக தனியார் துறையில் ஒருங்கிணைந்த ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் சேவை தொடங்கப்பட்டு உள்ளது. இதன் தொடக்க விழா பெங்களூரு

ஜக்கூர் விமான நிலையத்தில் நடைபெற்றது.

- இந்த ஒருங்கிணைந்த ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் சேவை அவசர நேரத்தில் நோயாளிகளுக்கு தரமான சிகிச்சை கிடைக்க உதவும். ஹெலிகாப்டரிலேயே சிகிச்சை அளிக்க தேவையான வசதிகளும் இருக்கின்றன.

### சமஸ்கிருத கிராமம்: உத்தரகண்ட் அரசு புதிய முயற்சி

- சம்ஸ்கிருதத்தை அன்றாட வாழ்விலும் பயன்படுத்தும் மொழியாக உருவாக்கும் முயற்சியாக "சம்ஸ்கிருத கிராமம்' என்ற திட்டத்தை மாநிலம் முழுவதும் செயல்படுத்த உத்தரகண்ட் அரசு முடிவெடுத்துள்ளது.
- சம்ஸ்கிருத கிராமங்களில் மக்கள் தங்கள் பேச்சு வழக்கிலும் சம்ஸ்கிருத மொழியையே பயன்படுத்துவார்கள். இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கிராமம் தேர்வு செய்யப்படும். அங்கு சம்ஸ்கிருத பள்ளியும் தொடங்கப்பட இருக்கிறது.
- உத்தரகண்டில் அலுவல் மொழியான ஹிந்திக்கு அடுத்து கூடுதல் அலுவல் மொழியாக சம்ஸ்கிருதம் உள்ளது குறிப்பிடத்தக்கது.

### தென்னிந்தியாவின் முதல் கிஸான் ரயில்

- வேளாண் பொருள்களை ஏற்றிச்செல்லும் வகையிலான கிஸான் ரயில், நாட்டில் 2-ஆவது முறையாகவும், தென்னிந்தியாவில் முதல் முறையாகவும் ஆந்திர மாநிலம் அனந்தபுரத்தில் இருந்து தில்லிக்கு தொடக்கி வைக்கப்பட்டது.
- நாட்டின் முதல் கிஸான் ரயில் ஆகஸ்ட் 7-ஆம் தேதி மகாராஷ்டிர மாநிலம் தேவலாலியில் இருந்து பிகார் மாநிலம் தானாபூருக்கு தொடக்கி வைக்கப்பட்டது.

### இயற்கை உணவு பதப்படுத்துதல் மையம்

- உத்திரப் பிரதேசத்தில் புதிய இயற்கை உணவு பதப்படுத்துதல் மையத்தை தொடங்கி வைக்கப்பட்டது. இதன் மூலம் 5 ஆயிரம் விவசாயிகள் பலன் அடைவார்கள்.
- இதற்கிடையே, உணவு பதப்படுத்துதல் துறை சார்ந்த வசதிகளுக்கு நாடு முழுவதும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும், தமிழ்நாட்டில் மட்டும் 71 மையங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

### ஏஜஎம் புது நிறுவன கண்டுபிடிப்பாளர்களுக்கு அதிகாரமளிக்க ப்ரெஷ்வொர்க்சுடன் அடல் இன்னொவெஷன் மிஷன் கூட்டு சேர்கிறது

- இந்தியாவில் உள்ள கண்டுபிடிப்பாளர் களுக்கும், தொழில்முனைவோருக்கும் வலுவான ஆதரவை அளிப்பதற்காக, நிதி ஆயோக்கின் அடல் இன்னொவெஷன் மிஷன் (ஏஜஎம்), வாடிக்கையாளர் ஈடுபாடு மென்பொருள் நிறுவனமான ப்ரெஷ்வொர்க்சுடன் கூட்டு சேர்ந்துள்ளது.
- ஏஜஎம் பட்டியலில் உள்ள நிறுவனங்கள் மற்றும் புது நிறுவனங்களின் (ஸ்டார்ட் அப்) திறனை அதிகரிப்பதையும், புதுநிறுவன கண்டுபிடிப்பாளர்களிடையே புதுமையையும், தொழில்முனைதலையும் ஊக்குவிப்பதையும், இந்தக் கூட்டு, லட்சியமாகக் கொண்டுள்ளது.

### 2020ஆம் ஆண்டுக்குள் 220 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உருவாக்க இலக்கு

- பிரதமர் நரேந்திர மோடி இந்தியா 2020ஆம் ஆண்டுக்குள் 220 ஜிகாவாட் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.
- இந்த இலக்கு 134 ஜிகாவாட் இருந்து 220 ஜிகாவாட்டாக அதிகரித்துள்ளது மத்திய அரசு.
- சர்வதேச சூரிய கூட்டமைப்பு ஏற்பாடு செய்த முதல் உலக சூரியஒளி தொழில்நுட்ப மாநாட்டில் பிரதமர் தெரிவித்தார். மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சர் R.K.சிங் கலந்து கொண்டார்.

**வீர் சவார்க்கல் பாலம்**

- கர்நாடகாமாநிலம்தலைநகரானபெங்களூரில் 400 மீட்டர் நீளமுள்ள பாலத்திற்கு இந்துத்துவ சித்தாந்தவாதி விநாயக் தாமோதர் சவார்க்கர் அவர்களின் பெயரை முதலமைச்சர் B.S.எடியூரப்பா சூட்டினார்.

**முதல் தொலைதொடர்பு மருத்துவத்தளம் நாகலாந்து**

- நாகலாந்த் மாநில அரசு தொலைத்தொடர்பு மூலம் மருத்துவ ஆலோசனை மக்கள்பெற்று கொள்ளும் வசதியாக "Naga Tele health" என்ற தளத்தை அறிமுகம் செய்துள்ளது.
- "Naga Tele health" மூலம் மக்கள் நேரடியாக மருத்துவர்களை தொடர்பு கொண்டு மருத்துவ ஆலோசனைகள் பெற்றுக்கொள்ள முடியும்.
- ஆயுஷ்மான் பாரத் – சுகாதார மற்றும் நல மையத்தின் USAID NISHTHA Jhpiego - "Naga Tele health" இந்த சேவையை நாகலாந்த் அரசிற்கு வழங்குகிறது.

**ஹப்பாளி ரயில்வே நிலையம் பெயர் மாற்றம்: மத்திய உள்துறை அமைச்சகம் ஒப்புதல்**

- கர்நாடக மாநிலத்தில் உள்ள ஹப்பாலி ரயில்வே நிலையத்தின் பெயரை மாற்றம் செய்ய மத்திய உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. ஸ்ரீ சித்தாருதா சுவாமி ரயில் நிலையம் என மாற்றம் செய்ய உள்ளது.
- மேலும் சில பெயர்கள் மாற்றம் செய்ய வேண்டும் என கர்நாடகா அரசு இதழில் முன்மொழிவு செய்துள்ளது. அவை தேவகிரி (ஹிந்தி), ரோமன் (ஆங்கிலம்) மற்றும் பிராந்திய மொழிகள்.

**பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் ஸ்மார்ட் நகரங்களை உருவாக்குவதற்கான கட்டமைப்பு**

- வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் ஸ்மார்ட் நகரங்கள் திட்டம் ஏற்பாடு செய்த காணொலி காட்சி நிகழ்ச்சியில், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் ஸ்மார்ட் நகரங்களை உருவாக்குவதற்கான கட்டமைப்பை, மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை இணையமைச்சர் ஹர்தீப் சிங் பூரி தொடங்கி வைத்தார்.
- திட்டமிடுதல், முதலீடு திட்டங்களை அமல்படுத்தும் போது, பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் வகையிலான தெளிவான கட்டமைப்பை வழங்குவதே CSCAF- Climate Smart Cities Assessm Frameworkன் நோக்கம்.

**ஸ்ரீ ஹர்மிந்தர் சாகிப்புக்கு எஃப் சி ஆர் ஏ ஒப்புதல்**

- ஸ்ரீ ஹர்மிந்தர் சாகிப்புக்கு வெளிநாட்டு பங்களிப்பு ஒழுங்குமுறை சட்டத்தின் கீழ் (எஃப் சி ஆர் ஏ) மத்திய உள்துறை ஒப்புதல் அளித்துள்ளது.
- ஸ்ரீ ஹர்மிந்தர் சாகிப்புக்கு வெளிநாட்டு பங்களிப்பு ஒழுங்குமுறை சட்டத்தின் கீழ் ஒப்புதல் அளித்ததன் மூலம் ஸ்ரீ தர்பார் சாகிப்புக்கும், உலகளாவிய சங்கத்துக்கும் இடையே உள்ள சேவை இணைப்பு வலுப்பெற்றுள்ளது.

**இந்தியாவின் மிகப்பெரிய பன்றிப் பண்ணை மேகாலாயாவில் தொடக்கம்**

- இந்தியாவின் மிகப்பெரிய பன்றி இறைச்சிப் பண்ணையை ரூ.209 கோடி மதிப்பில் மேகாலயாவில் மத்திய வேளாண் மற்றும் விவசாய நலத்துறை அமைச்சர் கைலாஷ் சௌத்ரி தொடங்கி வைத்தார்.
- தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் 'ஆத்ம நிர்பார்' திட்டத்தின் கீழ் ஒதுக்கிய ரூ.209 கோடியில் உருவாக்கப்பட்டுள்ளது.

**பீகாரில் பெட்ரோலியத்துறை தொடர்பான முக்கிய திட்டங்கள்**

- இந்த திட்டங்களில் துர்காபூர்-பாங்கா பிரிவு உட்பட பரதீப்-ஹால்டியா-துர்காபூர் பைப்லைன் இணைப்பு திட்டம் மற்றும் இரண்டு எல்பிஜி கேஸ் சிலிண்டர்கள் நிரப்பும் ஆலைகளும் அடங்கும். இவற்றை மத்திய

பெட்ரோலியத்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் பொதுத்துறை நிறுவனங்களான இந்தியன் ஆயில் மற்றும் எச்பிசிஎல் நிறுவனங்கள் அமைக்கின்றன.

**துர்காபூர்-பாங்கா பைப்லைன் திட்டம்**

- பரதீப்-ஹால்டியா-துர்காபூர் பைப்லைன் இணைப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக 193 கி.மீ தூரத்துக்கு துர்காபூர் பாங்கா பைப்லைன் திட்டத்தை இந்தியன் ஆயில் நிறுவனம் அமைத்துள்ளது.

**பீகார் பாங்காவில் எல்பிஜி சிலிண்டர் ஆலை:**

- இங்கு ஒரு நாளைக்கு 40 ஆயிரம் சிலிண்டர்களில் கேஸ் நிரப்ப முடியும்.

**பீகார், சம்பரானில்(ஹர்சிதி) எல்பிஜி சிலிண்டர் ஆலை**

- இதற்கு பிரதமர் கடந்த 2018ம் ஆண்டு ஏப்ரல் 10ம் தேதி அடிக்கல் நாட்டினார்.

**நவரத்னலு திட்டம்**



- ஆந்திர மாநில முதல்வர் தலைவர் ஜெகன்மோகன் ரெட்டி பதவி ஏற்றது முதல் மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து வருகிறார்.
- இதில் அவர் தேர்தலுக்கு முன்பு அறிவித்த சமூக நல திட்டங்களான 'நவரத்னலு திட்டம்' எனப்படும் 9 திட்டங்களை மக்களிடையே பெரும் வரவேற்பை பிடித்தது.

**9 நவரத்னலு திட்டங்கள் விவரம்:**

1. ஒய்.எஸ்.ஆர் ரைது பரோசா : ஆட்சிக்கு வந்தால் விவசாயிகளுக்கு ரூ 50,000 நிதி உதவி அளிக்கப்படும் என உறுதியளித்திருந்தார்.

2. பொறியியல் படிப்பவர்களுக்கு கல்வி கட்டணம் இலவசம் : முழு கட்டணத்தையும் திருப்பி அளிப்பதுடன் சேர்த்து, உணவு மற்றும் உறைவிட செலவுகளுக்கு ஆண்டுக்கு 20,000 இலவச நிதி உதவி வழங்கப்படும்.

3. ஆரோக்ய ஸ்ரீ : ஆரோக்ய ஸ்ரீ இந்த திட்டத்தின் கீழ் ஆரோக்ய ஸ்ரீ அட்டை வைத்திருக்கும் நபர்களுக்கு அரசு மருத்துவமனையாக இருந்தாலும் தனியார் மருத்துவ மனையாக இருந்தாலும் ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஏற்படும் அனைத்து மருத்துவ செலவுகளையும் அரசே ஏற்கும்

4. ஜலயாக்னம்: இந்ததிட்டத்தின்கீழ்போலாவரம் திட்டம் உள்ளிட்ட நிறைவேற்றப்படாமல் உள்ள அனைத்து நீர்ப்பாசன திட்டங்களையும் அரசு நிறைவேற்றும்.

5. மதுவுக்குத் தடை : 2024-ஆம் ஆண்டுக்குள் மாநிலத்தில் முழுமையாக மதுவிலக்கு கொண்டுவரப்படும் என அவர் வாக்குறுதி தந்தார்.

6. அம்மாவொடி : குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பும் வெள்ளை நிற ரேஷன் கார்டு வைத்திருக்கும் தாய்மார்களுக்கு ஆண்டுக்கு சுமார் 15 ஆயிரம் நிதி உதவி வழங்கப்படும்.

7. ஒய்.எஸ்.ஆர் அசரா: பெண்கள் கூட்டுறவு சங்கத்தில் பெற்ற கடன்கள் தள்ளுபடி செய்யப்படும். மேலும் 0% வட்டியில் கடன்கள் தரப்படும். 50,000 ரூபாய் வரை கடனுக்கான வட்டித் தொகை அரசாங்கத்தால் ஏற்கப்படும்.

8. ஏழைகளுக்கு வீடு : அடுத்த ஐந்து ஆண்டுகளில் 25 லட்சம் பேருக்கு வீடுகள் கட்டித்தர ஒய் எஸ் ஆர் சி பி கட்சி உறுதியளித்தது. இந்த வீடுகள் பெண்களின் பேரில் பதிவு செய்யப்படும். அரசு 25 பைசா வட்டியில் அவர்களுக்கு கடன் வழங்குவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படும்.

9. ஓய்வூதியம் : ஓய்வூதியம் பெறுவதற்கான வயதுத் தகுதி 65-லிருந்து 60-ஆக குறைக்கப்படும். 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு 2 ஆயிரம் ஓய்வூதியம் வழங்கப்படும். மாற்றுத்திறனாளிகளுக்கு

மூவாயிரம் ஓய்வூதியம் வழங்கப்படும் என உறுதியளித்திருந்தார்.

### கரிமா நலத்திட்டம்

- ஒடிசா மாநில அரசு மாநிலம் முழுவதும் துப்புரவு தொழிலாளர்கள் அவர்களின் கண்ணியம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய கரிமா நலத்திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.
- மேலும் துப்புரவுத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு சமூக பாதுகாப்பு மற்றும் நிதி சலுகைகள் வழங்குவதை "கரிமா" திட்டம் உறுதி செய்யும்.

### பீகாரில் தேசிய நெடுஞ்சாலைக்கு திரு கட்கரி ஒப்புதல் அளித்தார்

- மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு நிதின் கட்கரி, பீகாரில் ரூபாய் 971 கோடி மதிப்புடைய முங்கர்-பாகல்பூர்

**தேசிய நெடுஞ்சாலைக்கு ஒப்புதல் அளித்துள்ளார்.**

- 120 கிலோ மீட்டர் நீளத்தில் அமையப்போகும் இந்த கான்கிரீட் சாலை, இரண்டு வழிகளை கொண்டதாக இருக்கும்.

### ஸ்டார்ட் அப் இந்தியா தரவரிசைப் பட்டியல்

- இந்தியாவில் ஸ்டார்ட் அப் தொழில்களை ஊக்குவித்து சிறந்து விளங்கும் மாநிலங்களின் தரவரிசை பட்டியலில் கர்நாடகா, கேரளா முதலிடத்தில் உள்ளதாக மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் தெரிவித்தார்.
- இந்தப் பட்டியல் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறையால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுகிறது.
- ஸ்டார்ட்-அப் ஈகோ சிஸ்டம் எனப்படும் புது நிறுவனங்களை தொடங்குவதற்கான சூழலுக்கு ஆதரவளிக்கும் பல்வேறு காரணிகளை அடிப்படையாக கொண்டு, மாநிலங்களின் இந்த தரவரிசைப் பட்டியலை மத்திய அரசு ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது.
- 2019 ஆம் ஆண்டுக்கான பட்டியலை மத்திய வர்த்தகம், தொழில்கள் மற்றும் ரயில்வே துறை அமைச்சர் பியூஷ் கோயல் வெளியிட்டார்.
- புதிய தொழில் தொடங்குவதற்கான சிறந்த தலைமைகளை கொண்ட மாநிலங்களின் பட்டியலில் மகாராஷ்டிரா, பீஹார், ஒடிசா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் இடம்பெற்றுள்ளன.
- ஸ்டார்ட் - அப் ஈகோ சிஸ்டத்தில் வளர்ந்துவரும் மாநிலங்களின் பட்டியலில் தமிழகம், ஆந்திர பிரதேசம், அசாம், சத்தீஸ்கர், டில்லி, உத்தரப் பிரதேசம், மத்திய பிரதேசம், இமாசலப் பிரதேசம் ஆகியவையும் இடம்பெற்றுள்ளன.

### 21-ம் நூற்றாண்டில் பள்ளி கல்வி குறித்த மாநாடு

- புதிய கல்விக் கொள்கை தொடர்பான நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார்.
- நாட்டின் கல்வி முறையில் பல்வேறு சீர்திருத்தங்களுடன், 34 ஆண்டுகளுக்குப் பிறகு புதிய தேசியக் கல்விக் கெள்கையை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது.
- இதற்கிடையே, புதிய கல்விக் கொள்கை குறித்த கவர்னர்கள் மாநாடு கடந்த 3-ம் தேதி நடைபெற்றது. "உயர்கல்வியை மாற்றியமைப்பதில் தேசிய கல்விக் கொள்கையின் பங்கு" என்ற தலைப்பிலான இம்மாநாட்டை மத்திய கல்வி அமைச்சகம் ஏற்பாடு செய்தது.

### கிரகப்பிரவேசம் நிகழ்ச்சியில் பிரதமர் உரை

- மத்தியப் பிரதேச மாநிலத்தில் `கிரகப்பிரவேசம்' நிகழ்வில் காணொலி மூலம் பிரதமர் திரு. நரேந்திர மோடி உரையாற்றினார்.
- பிரதமரின் கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் அங்கு 1.75 லட்சம் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டி ஒப்படைக்கப்பட்டுள்ளன.

### பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா

- வரும் 2022ம் ஆண்டுக்குள் "இந்தியாவில் உள்ள அனைவருக்கும் சொந்த வீடு" என்ற இலக்குடன் மத்திய அரசால் தொடங்கப்பட்ட திட்டம் தான் "பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா" என்பதாகும். இந்தத் திட்டத்தை 2015 ஜுலை 25-ல் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.
- பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினர், குடிசைவாசிகள், பட்டியல் இனத்தவர் உள்ளிட்டோருக்கு சொந்தவீட்டை உறுதி செய்வதைக் கருத்தில் கொண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டது.

### என் குடும்பம் – என் பொறுப்பு மகாராஷ்டிரத்தில் புதிய அறிவிப்பு

- மகாராஷ்டிரத்தில் கரோனா பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில், என் குடும்பம்-என் பொறுப்பு எனும் புதிய பிரசாரத்தை அந்த மாநில முதல்வர் உத்தவ் தாக்கரே அறிவித்துள்ளார்.
- "கரோனா இல்லாத மும்பையை உருவாக்க, தனிப்பட்ட முறையிலும், குடும்பமாகவும் மற்றும் சமூகத்தின் படிநிலையாகவும் அனைவரும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவோம்." என்பது இதன் இலக்கு.

1. "குறைந்தபட்சம் 2 மீட்டர் சமூக இடைவெளி கடைப்பிடிக்க வேண்டும்
2. தவறாமல், முறையாக முகக் கவசம் அணிய வேண்டும்.
3. அடிக்கடி கைகளைக் கழுவ வேண்டும் மற்றும் கைகளை சுத்தப்படுத்தும் திரவத்தை முறையாகப் பயன்படுத்த வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தற்சார்பு இந்தியா: புதிய உர உற்பத்தி ஆலைகள்

- தற்சார்பு இந்தியா திட்டத்தின் கீழ் ரூபாய் 40 ஆயிரம் கோடியில் புதிய உர உற்பத்தி ஆலைகள் நிறுவப்பட்டு கொண்டிருப்பதால், 2023-க்குள் உரங்கள் உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு அடையும் என்று மத்திய ரசாயனம் மற்றும் உரங்கள் அமைச்சர் சதானந்த கவுடா கூறினார்.
- கர்நாடக விவசாயிகளுக்காக இஃப்கோவால் ஏற்பாடு செய்யப்பட்ட 'தற்சார்பு இந்தியா மற்றும் நிலையான விவசாயம்' என்னும் இணைய வழியிலான கருத்தரங்கில் பேசும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.
- "நாட்டில் உள்ள நான்கு உர நிறுவனங்களுக்கு (ராமகுண்டம், சிந்திரி, பரவுணி மற்றும் கோரக்பூர்) சமீபத்தில் புத்தாக்கம் அளிக்கப்பட்டது.

### அசாம் பக்ஜான் எண்ணெய் கிணற்றில் தீ விபத்து

- அசாமின் டின்சுகியாவில் உள்ள பக்ஜான் எண்ணெய் கிணற்றில் தீ விபத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து அருகிலுள்ள பகுதிகளில் வெப்பமும் உணரப்பட்டது.

### 'கொல்லைப்புற தோட்டக்கலை' "Back-yard Horticulture"

- ஜம்மு-காஷ்மீர் தோட்டக்கலைத்துறை 'கொல்லைப்புற தோட்டக்கலை" திட்டத்தை மூலதன செலவு (Capital Expenditure) கீழ் மார்க்பிளாக் என்ற இடத்தில் தொடங்கி உள்ளது.
- வீட்டிற்கு தேவையான அனைத்து பழங்களை இயற்கை முறையில் உற்பத்தி செய்து கொள்ள வேண்டும் என்பதே இதன் இலக்கு.

### முகலாய அருங்காட்சியகத்திற்கு சத்ரபதி சிவாஜி பெயர்



- உத்தரப்பிரதேச மாநிலம் ஆக்ராவில் கட்டப்பட்டு வரும் முகலாய அருங்காட்சியகத்திற்கு மராட்டிய மன்னர்

சிவாஜியின் பெயர் சூட்டப்படும் என மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் அறிவித்துள்ளார்.
- உத்தரப்பிரதேசமாநிலம்ஆக்ராவில்முகலாயக் கலைப்பொருள்களை காட்சிப்படுத்த முகலாய அருங்காட்சியகம் அமைக்கும் பணி 2016ஆம் ஆண்டு தொடங்கியது.

### 'கட்டமைப்பில் 59,810 மெகா வாட் அனல் மின் நிலைய திட்டங்கள்'

- நாட்டில் 59,810 மெகா வாட் மின்சாரத்தைத் தயாரிக்கும் அனல்மின் நிலைய திட்டங்கள் கட்டமைக்கப்பட்டு வருவதாக மத்திய மின்துறை அமைச்சர் ஆர்.கே. சிங் தெரிவித்தார்.
- 'மத்திய அரசு திட்டங்களின் கீழ் 18,320 மெகா வாட் திட்டங்களும், மாநில அரசுகளின் கீழ் 17,760 மெகா வாட் திட்டங்களும் தனியார் திட்டங்களும் சேர்த்து என மொத்தம் 59,810 மெகா வாட் மின்சாரத்தைத் தயாரிக்கும் அனல்மின் நிலைய திட்டங்கள் கட்டமைக்கப்பட்டு வருகின்றன.

### சேஹத் எவம் போஷான் சாதின்வாஸ்

- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து உணவு கிடைப்பதை உறுதி செய்ய டெல்லி குழந்தைகள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஆணையம் உதவி எண்ணை அறிமுகம் செய்துள்ளது.
- இதற்காக 'Sehat evam Poshan Saathinwas', என்ற 24X7 மணிநேரம் இயங்கும் உதவி எண்ணை அறிமுகம் செய்துள்ளது.

### உலகளாவிய ஆயுர்வேத மாநாடு

- நான்காவது உலகளாவிய ஆயுர்வேத மாநாடு மெய்நிகர் காட்சி மூலம் நடைபெற்றது. இந்திய துணை ஜனாதிபதி வெங்கய்யா நாயுடு தொடங்கி வைத்தார்.
- "Emerging Opportunities for Ayurveda during Pandemic" என்ற பெயரில் நடைபெற்றது.
- இந்திய தொழில்துறை கூட்டமைப்பு (CII) இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தது.
- ஆயுர்வேத அமைச்சகம், ஆயுர்வேத மருத்துவ சங்கம், ஆயுர்வேத மருந்து உற்பத்தி அமைப்பு ஆகியவை கூட்டிணைந்து நடத்தியது.

### போஷான் சர்கார்

- மத்திய பிரதேச மாநில முதலமைச்சர் போஷான் சர்கார் என்ற திட்டத்தை அறிமுகம் செய்துள்ளார்.
- இதன் கீழ் கிராமப்புற பஞ்சாயத்து மற்றும் நகர்ப்புறங்களில் ஊட்டச்சத்தான உணவு வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக தொடங்கப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் முழுவதும் இந்தியாவில் ஊட்டச்சத்து மாதமாக கொண்டாடப்படுகிறது.

### பூர்வோதயா திட்டம்

- மத்திய எஃகு அமைச்சகம், ஒடிசா, ஜார்கண்ட், சட்டீஸ்கர், மேற்கு வங்கம் மற்றும் ஆந்திராவில் ஒருங்கிணைந்த எஃகு மையங்களின் வளர்ச்சியை உள்ளடக்கிய 'பூர்வோதயா' என்ற திட்டத்தை தொடங்கியுள்ளது. இதன் நோக்கம், எஃகு ஆலைகளின் திறன் மேம்படுத்துவது, மற்றும் எஃகு ஆலைகளுக்கு அருகிலேயே எஃகு தொகுப்புகளை அமைப்பது மற்றும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது ஆகும்.
- 2030-31-ம் ஆண்டுக்குள் எஃகு உற்பத்தித் திறனை ஆண்டுக்கு 300 மெட்ரிக் டன்னாக உயர்த்த தேசிய எஃகு கொள்கை இலக்கு நிர்ணயித்துள்ளது.

### மனித மூலதன குறியீடு பட்டியலில் 116வது இடத்தை பிடித்த இந்தியா!

- உலக வங்கி ஒவ்வொரு ஆண்டும் மனித மூலதன குறியீடு பட்டியலை வெளியிட்டு வருகிறது.
- உலகம் முழுவதும் 174 நாடுகளில் கல்வி அறிவு பெற்ற குழந்தைகள் மற்றும் அவர்களது ஆரோக்கிய நிலையை வைத்து, உலக

வங்கியின் மனித மூலதன குறியீடு பட்டியல் தயாரிக்கப்படும்.

- அந்த வகையில் 2020-ம் ஆண்டு உலக வங்கி வெளியிட்டுள்ள மனித மூலதன குறியீட்டுப் பட்டியலில் இந்தியா 116வது இடத்தை பிடித்துள்ளது.
- மனித மூலதன மேம்பாட்டில் இந்தியாவின் பங்கு இந்த ஆண்டு 0.49 சதவீதமாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் பங்கு 0.41%, வங்க தேசம் பங்கு 0.46% ஆக உள்ளது.

| Rank | Country | Score |
|---|---|---|
| 116 | India | 0.49 |
| 1 | Singapore | 0.88 |
| 2 | Hongkong and China | 0.81 |
| 3 | Japan | 0.80 |

### இந்தியாவின் முதல் மின் அலுவலகம்

- போபாலில் உள்ள மத்திய ஷேத்ரா வித்யுத் வித்ரான் கம்பெனி இந்தியாவின் முதல் மின் விநியோக நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் கூட்டுறவு அலுவலகம் முதல் உள்ளூர் அலுவலகம் வரையிலான அனைத்து அலுவலகங்களும் இணையதளம் மூலம் இயக்கப்படுகிறது.
- இது தேசிய தகவல் மையம் மூலம் அனைத்து மின்-அலுவலகங்களும் மின்-கோப்பு மற்றும் மின்-நிருபர் முறையை செயலாற்றுகிறது.

### உலகின் முதல் சி.என்.ஜி முனையம்

- பாவ்நகர் துறைமுகத்தில் உலகின் முதல் சி.என்ஜி முனையத்திற்கு குஜராத் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- ஐக்கிய இராச்சியத்தை தளமாகக் கொண்ட தொலைநோக்கு குழுமம் மற்றும் மும்பையைச் சேர்ந்த பத்மநாப் மபத்லால் குழுமத்தின் கூட்டு நிறுவனம் பாவ்நகர் துறைமுகத்தில் சிஎன்ஜி முனையம் அமைக்க 1,900 கோடி ரூபாய் முதலீடு செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
- தற்போது பாவ்நகர் துறைமுகம் குஜராத் கடல் வாரியத்தால் இயக்கப்படுகிறது.

### சிக்ஷாக்பர்வ் முன்முயற்சியின் கீழ் வெபினார் நிகழ்ச்சி

- மத்திய கல்வி அமைச்சகம், சிக்ஷாக்பர்வ் முன்முயற்சியின் கீழ் ''தகுதி அடிப்படையிலான கல்வி மற்றும் கற்றல் முடிவுகள்'' என்பது குறித்த வெபினாருக்கு ஏற்பாடு செய்திருந்தது.
- புதிய கல்வி கொள்கை 2020-ஐ முன்னெடுக்கவும், ஆசிரியர்களைக் கவுரவிக்கவும் சிக்ஷாக்பர்வ், 2020 செப்டம்பர் 8 முதல் 25 வரை கொண்டாடப்பட்டு வருகிறது.

### சர்வதேச விமான நிலையத்தில் தனியார் ஜெட் முனையம் அறிமுகம்

- டெல்லியின் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் தனியார் ஜெட் முனையம் தொடங்கப்பட்டவுள்ளது . புதிய ஜெட் முனையத்தில் ஒரு மணி நேரத்திற்கு 50 பயணிகளை கொண்டு இயக்கபடுகிறது.
- வர்த்தக ஜெட் விமானங்களை விமான ஆம்புலன்ஸாகவும் பயன்படுத்தலாம் என்றும் தொலைதூர பகுதிகளுக்கு எளிதாக பறக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இந்தியா மகிழ்ச்சி அறிக்கை 2020

- இந்தியா மகிழ்ச்சி அறிக்கை 2020 (India Happiness Report 2020): இந்த கொரோனா (Corona) காலத்தில் நாடு முழுவதிலும் உள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், மகிழ்ச்சியாக உள்ள மாநிலம் எது என கண்டறிய ஆய்வு நடத்தப்பட்டது.

**அதிக மகிழ்ச்சியுடன் உள்ள மாநிலங்கள்**

- மிசோரம்,
- பஞ்சாப்,

**கடைசியாக உள்ள மாநிலங்கள்**

- மகாராஷ்டிரா,
- டெல்லி

***பெரிய மாநிலங்கள் (முதல் மூன்று)***

- பஞ்சாப்,
- குஜராத்,
- தெலுங்கானா

***சிறிய மாநிலங்கள் (முதல் மூன்று)***

- மிசோரம்,
- சிக்கிம்,
- அருணாச்சல பிரதேசம்

***மற்றும் யூனியன் பிரதேசங்கள் (முதல் மூன்று இடங்களில்)***

- அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள்
- புதுச்சேரி,
- லட்சத்தீவு

- நாடு முழுவதும் மகிழ்ச்சியை அளவிடும் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை உள்ளடக்கிய முதல் அகில இந்திய மகிழ்ச்சி அறிக்கை ஆகும்.
- பேராசிரியர் ராஜேஷ் கே பில்லனியா 2020 மார்ச் முதல் ஜூலை வரை 16,950 பேரை உள்ளடக்கிய நாடு தழுவிய கணக்கெடுப்பின் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- மகாராஷ்டிரா, டெல்லி மற்றும் ஹரியானா ஆகியவை COVID-19 மக்கள் மனதில் மிக மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன,
- அதேசமயம் புதுச்சேரி மற்றும் ஜம்மு-காஷ்மீர் நடுநிலையான மனநிலையில் உள்ளன. மணிப்பூர், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் மற்றும் லட்சத்தீவு ஆகியவை COVID-19 மக்களின் மகிழ்ச்சியில் எந்த வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

### கோசி ஆற்றின் குறுக்கே பிரம்மாண்ட ரயி பாலம்: நாட்டுக்கு அர்ப்பணித்தார் மோடி

- கோசி ஆற்றின் குறுக்கே ரூ.518 கோடியில் கட்டப்பட்ட பிரம்மாண்ட ரயில்வே பாலத்தை நாட்டுக்கு அர்ப்பணித்தார் பிரதமர் நரேந்திர மோடி.
- வடகிழக்கு மாநிலங்களை இணைக்கும் வகையில் 1.9 கி.மீ தொலைவுக்கு கட்டப்பட்டுள்ள ரயில்வே பாலத்தை பிரதமர் நரேந்திர மோடி காணொலி காட்சி வாயிலாக நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- இந்நிகழ்ச்சியில், பிகாரில் செயல்படுத்தப்பட்ட உள்ள 12 ரயில் திட்டங்களையும் பிரதமர் மோடி தொடக்கி வைத்தார்.

### ‘தூய்மை சிற்றுண்டியகம்’

- இமாச்சல பிரதேச மாநில முதலமைச்சர், பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்த நாள் முன்னிட்டு “Swachhata Cafe” தூய்மை சிற்றுண்டியகம் காணொலி காட்சி மூலம் தொடங்கி வைத்தார்.
- இந்த உணவகம் சுய உதவிக் குழுக்கள் சேர்ந்த பெண்களால் நிர்வகிக்கப்படும் இமாச்சல பிரதேசம் சோன் மாவட்டத்தில் நாலாகாரக்கில் தொடங்கப்பட்ட உணவகத்தை லக்ஷ்மி மற்றும் துர்கா என்ற பெண்களால் நிர்வகிக்கப்படுகிறது.
- பாரம்பரிய உணவுகள் இந்த உணவகத்தில் தயாரிக்கப்படும். மேலும் சிம்லா மாவட்டத்தில் குப்ரி என்ற இடத்திலும் தொடங்கப்பட்டுள்ளது.

### பிகாரில் ரூ.6.99 கோடி மதிப்பிலான திட்டங்கள் தொடக்கம்

- பிகாரின் போஜ்பூர் மாவட்டத்தில் பர்ஹாரா என்ற இடத்தில், ஊரக மின்மயமாக்கல் நிறுவனம் (ஆர்இசி) ரூ.6.99 கோடி மதிப்பில் மேற்கொண்ட திட்டங்களை மத்திய மின்துறை மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை இணையமைச்சர் (தனிப்பொறுப்பு) திரு.ஆர். கே.சிங் காணொலிக் காட்சி மூலம் தொடங்கி வைத்தார்.
- போஜ்பூர் மாவட்டத்தின் பர்ஹாரா பகுதியில் உள்ள கிராமங்களில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதுதான் இந்த திட்டங்களின் நோக்கம்.

### நொய்டாவில் பிரம்மாண்ட திரைப்பட நகரம்

- இந்தியாவிலேயே மிக பிரம்மாண்டமான திரைப்பட நகரம் நொய்டா நகரில் அமையவுள்ளது. இதனால் உத்திரபிரதேச இளைஞர்களுக்கு அதிகளவில் வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்று யோகி ஆதித்யநாத் தெரிவித்தார்.

### வேளாண்மை துறையில் குத்தகை முறையை ஒழுங்குப்படுத்த உயர்மட்ட குழு

- வேளாண்மை துறையில் குத்தகை முறையை ஒழுங்குப்படுத்த உயர்மட்ட குழுவை மத்திய அரசு அமைத்து உள்ளது. கிராம அபிவிருத்தி அமைச்சகத்தின் கீழ் உள்ள நில வளத்துறையின் செயலாளர் ஸ்ரீ அஜய் திரிகே என்பவர் தலைமையில் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

### ஒற்றை கொம்பு காண்டாமிருகம் பாதுகாக்க தேசிய பாதுகாப்பு உத்தி

- மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் உலகளவில் ஒப்பிடுகையில் இந்தியாவில் மிகப்பெரிய அளவில் ஒற்றை காண்டாமிருகங்கள் உத்திரபிரதேசம், அசாம், மேற்கு வங்காளம் (3000 விலங்கு) ஆகிய மாநிலங்களில் ஒற்றை கொம்பு காண்டாமிருகம் உள்ளதாக தெரிவித்தார்.
- இதற்காக சுற்றுச்சூழல் அமைச்சகம் ஒற்றைக்கொம்பு காண்டாமிருகம் பாதுகாக்க தேசிய பாதுகாப்பு உத்தியை அறிமுகம் செய்துள்ளது.
- புல்வெளி மேலாண்மை அதிகரிக்கவும், கார்பன் வெளியேற்றத்தால் காலநிலை ஏற்படும் மாற்றம் குறைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### தேசிய வேளாண் உயர் கல்வி திட்டத்தின் ‘கிரிதக்யா’ வேளாண் தொழில்நுட்ப கண்டுபிடிப்பு போட்டி

- பெண்களுக்கு உதவியாக இருக்கும் உபகரணங்களுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து, பண்ணை இயந்திரமயமாக்கலை மேம்படுத்துவதற்கு சாத்தியமான தொழில்நுட்ப தீர்வுகளை மேம்படுத்துவதற்காக, ‘‘கிரிதக்யா’’ என்ற பெயரில் வேளாண் தொழில்நுட்ப கண்டுபிடிப்பு போட்டிக்கு தேசிய வேளாண் உயர் கல்வி திட்டத்தின் கீழ் இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் திட்டமிட்டுள்ளது.
- சிறந்த பண்ணை இயந்திர கண்டுபிடிப்புக்கு முதல் பரிசாக ரூ.5 லட்சம், 2-வது பரிசாக ரூ.3 லட்சம், 3-வது பரிசாக ரூ.1லட்சம் வழங்கப்படவுள்ளது.

### அதிநவீன உள்கட்டமைப்புடன் 6 பிளாஸ்டிக் தயாரிப்பு மையங்கள்

- நாடு முழுவதும் 10 பிளாஸ்டிக் தயாரிப்பு மையங்கள் அமைக்க ரசாயணம் மற்றும் பெட்ரோ கெமிக்கல் துறை அனுமதி வழங்கியுள்ளது. இவற்றில் 6 பிளாஸ்டிக் தயாரிப்பு மையங்களை அசாம், மத்தியப் பிரதேசம், ஒடிசா, தமிழ்நாடு மற்றும் ஜார்கண்ட்டில் அமைக்க இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 4 பிளாஸ்டிக் தயாரிப்பு மையங்களை உத்தரகாண்ட, சட்டீஸ்கர் ஆகிய மாநிலங்களில் அமைப்பதற்கான மதிப்பீடுகள் நடந்து வருகின்றன.

**6 பிளாஸ்டிக் தயாரிப்பு மையங்களின் விவரம்:**

- மத்தியப் பிரதேசம் : தமோத் என்ற இடம்.
- மத்தியப் பிரதேசம் : பிலாவா என்ற இடம்.
- ஒடிசா : பாரதீப் என்ற இடம்.
- ஜார்கண்ட் : தியோகர் என்ற இடம்.
- தமிழ்நாடு : திருவள்ளூர்.
- அசாம் : தின்சுகியா என்ற இடம்.

### உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவீத இட ஒதுக்கீடு

- பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தில் உள்ள தகவல்களின் படி, 20 மாநிலங்களில் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவீத இட ஒதுக்கிடு அளிக்கப்பட்டுள்ளது.
- அவை ஆந்திரப் பிரதேசம், அசாம், பீகார்,

சத்தீஸ்கர், குஜராத், ஹிமாச்சல் பிரதேசம், ஜார்கண்ட், கர்நாடகா, கேரளா, மத்திய பிரதேச, மகாராஷ்டிரா, ஒடிசா, பஞ்சாப், ராஜஸ்தான், சிக்கிம், தமிழ்நாடு மற்றும் தெலங்கானா ஆகும்.

### உலகின் மிக நீளமான உயரமான ஷிங்குன் லா சுரங்கப் பாதை

- மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய நெடுஞ்சாலை மற்றும் கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (NHIDCL) உலகின் மிக நீளமான உயரமான ஷிங்குன் லா சுரங்கப் பாதை (13.5 கி.மீ) பணியை விரைவுபடுத்தியுள்ளது.
- இந்த சுரங்கப் பாதையுடன் இணையும் லடாக் யூனியன் பிரதேசம் மற்றும் இமாச்சலப் பிரதேசத்தின் லஹால் –ஸ்பிட்டி மாவட்ட சாலைகள் பணியும் வேகமாக நடத்துகிறது.

### கிராம மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர்களுக்கு புதிய தொழிற்சூழல்

- பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த முதலாம் தலைமுறை தொழில் முனைவோர்களுக்காக பூரி, வாரணாசி, ஹரித்துவார், கொல்லூர், பந்தர்பூர் மற்றும் புத்த கயா ஆகிய 6 கோயில் நகரங்களில் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் மற்றும் குறு, சிறு தொழில் நிறுவனங்களுக்கு வழிகாட்டும் திட்டங்களை திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகம் அமல்படுத்தியுள்ளது.
- பெண் தொழில்முனைவோர்களை ஊக்குவிக்க, திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகம், ஜெர்மனியின் “டெட்சே ஜிஸ்” என்ற நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்து “பெண் தொழில்முனைவோரின் பொருளாதார மேம்பாடு மற்றும் பெண்களால் தொடங்கப்படும் புதிய நிறுவனங்கள்“ என்ற முன்னிணி திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.
- பிரதமரின் யுவா உத்யமிதா விகாஸ் என்ற மற்றொரு முன்னணி திட்டத்தை மத்திய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம் அமல்படுத்துகிறது.
- இதன் மூலம் இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் கல்வி மற்றும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### முதல்வர் கிசான் கல்யாண் யோஜனா

- மத்திய பிரதேச மாநில முதலமைச்சர் முதல்வர் கிசான் கல்யாண் யோஜனா என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார்.
- பிரதமர் கிசான் சம்மன் நிதி திட்டத்தின் கீழ் தகுதியடைய விவசாயிகளுக்கு கூடுதல் நிதியுதவியாக ரூ.4000 வழங்க உள்ளதாக தெரிவித்தார்.
- பிரதமர் கிசான் சம்மன் நிதி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ரூ.6000 நிதியுதவி வழங்கப்படுகிறது.
- இதையடுத்து விவசாயிகள் ஆண்டுக்கு ரூ.10000 பெற்று பயனடைவர்.

### மோக்ஷா காலாஷ் யோஜனா 2020

*(‘Moksha Kalash Yojana 2020’)*

- ராஜஸ்தான் மாநில அரசு மோக்ஷா காலாஷ் யோஜனா 2020 என்ற திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து உள்ளது.
- ஹரித்துவாரில் உள்ள கங்கை நதிக்கு சுற்றுலா செல்லும் வாய்ப்பை இத்திட்டம் வழங்குகிறது.
- ஒவ்வொரு குடும்பத்தில் இருந்து இரண்டு பேருக்கு இலவசமாக சுற்றுலா அழைத்து செல்ல இத்திட்டம் வழிவகுக்கிறது. மேலும் இலவச பேருந்து வசதியும் வழங்கப்படுகிறது.

### முதல்வர் கிராமிய பரிபஹன் அக்ஹோனி திட்டம்

- அசாம் மாநில முதலமைச்சர் முதல்வர் கிராமிய பரிபஹன் என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார்.

- *இத்திட்டம் மூலம் தகுதியுடையவர்களுக்கு வாகனங்கள் வழங்கப்படுகிறது. கடந்த 2019ஆம் ஆண்டு அம்மாநில முதலமைச்சரான சர்பானந்தா சோனோவால் இத்திட்டம் பற்றி அறிவித்திருந்தார்.*
- *முதல்வர் கிராமிய பரிபஹன் அக்ஹோனி திட்டம் என்பது கிராமப்புற போக்குவரத்து திட்டமாகும்.*

### 51-வது இந்திய சர்வதேச திரைப்பட விழா

- *கோவாவில் நவம்பர் 20ம் தேதி முதல் 28ம் தேதி வரை நடைபெறவிருந்த, 51வது இந்திய சர்வதேச திரைப்பட விழா, 2021 ஜனவரி 16ம் தேதி முதல் 24ம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*
- *இந்த விழா மெய்நிகர் மற்றும் நேரடியான நிகழ்ச்சியாக நடத்தப்படும்.*

### செயற்கை நுண்ணறிவு குறித்த மாபெரும் மெய்நிகர்

- *ரைஸ் 2020 (RAISE 2020- 'Responsible AI for Social Empowerment 2020) என்னும் செயற்கை நுண்ணறிவு குறித்த மாபெரும் மெய்நிகர் மாநாடு மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் நிதி ஆயோக் ஆகியவை இணைந்து 2020 அக்டோபர் 5 முதல் 9 வரை நடத்துகின்றன.*
- *இம்மாநாட்டை பிரதமர் திரு நரேந்திர மோடி 2020 அக்டோபர் 5 துவக்கி வைக்கிறார். சர்வதேச செயற்கை நுண்ணறிவுத் துறையின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு விவாதங்கள் நடத்துவார்கள்.*
- *சமூக மாற்றம், உள்ளிணைப்பு மற்றும் சுகாதாரம், வேளாண்மை, கல்வி மற்றும் திறன்மிகு போக்குவரத்த உள்ளிட்ட துறைகளின் மேம்பாடு ஆகியவற்றுக்காக எவ்வாறு செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தலாம் என்பது குறித்து இவர்கள் விவாதிப்பார்கள்.*

### இந்தியாவின் முதல் கடலோர காவல்படை அகாடமி மங்களூரில் அமைக்கப்படுகிறது

- *இந்தியாவின் முதல் கடலோர காவல்படை அகாடமி மங்களூருவில் நிறுவப்படும் என்று பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் (புரோ) பெங்களூரு தெரிவித்துள்ளது.*
- *"மங்களூரில் இந்தியாவின் முதல் கடலோர காவல்படை அகாடமி. 158 ஏக்கர் KIADB நிலம் #ICGAcademy ஐ அமைப்பதற்காக கையகப்படுத்தப்பட்டுள்ளது.*

### கேரளாவில் மருத்துவ கருவிகள் தயாரிப்பு நிறுவனங்களை அமைக்கிறது மத்தியஅரசு

- *நாட்டின் முதல் மருத்துவ கருவிகள் தயாரிப்பு நிறுவனங்கள் கேரளாவில் அமையவுள்ளன.*
- *'மெட்ஸ்பார்க்' என்ற மருத்துவ சாதனங்கள் உற்பத்தி மையம் , மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்ப துறையின் தன்னாட்சி நிறுவனமான ஸ்ரீ சித்ரா திருநாள் மருத்துவ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் (SCTIMST) மற்றும் கேரள மாநில தொழில் மேம்பாட்டு கழகத்தின் கூட்டு முயற்சியில் திருவனந்தபுரத்தின் தொன்னக்கலில் உள்ள வாழ்க்கை அறிவியல் பூங்காவில் நிறுவப்பட உள்ளது.*

### தேசிய மருத்துவ ஆணையம் நடைமுறைக்கு வந்தது

- *இந்திய மருத்துவ கவுன்சிலை ஒழித்து மத்திய அரசு, தேசிய மருத்துவ ஆணையத்தையும் (என்.எம்.சி) மேலும் நான்கு தன்னாட்சி வாரியங்களையும் அமைத்துள்ளது.*
- *எம்எம்சி முதல் தலைவராக எய்ம்ஸ் நிறுவனத்தின் இஎன்டி துறையின் பேராசிரியர் டாக்டர் சுரேஷ் சந்திர சர்மா நியமிக்கப்பட்டுள்ளார். தலைவரின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் அல்லது 70 வயதை எட்டும் வரை இருக்கும்.*

#### புதிய தேசிய மருத்துவ ஆணையம்

- *2018 ஆம் ஆண்டில், எம்.சி.ஐ கலைக்கப்படும் என்றும் ஒரு புதிய அமைப்பு உருவாக்கப்படும்*

என்றும் முடிவு செய்யப்பட்டது. இதன் பிறகு தேசிய மருத்துவ ஆணைய சட்டம், 2019, 9 ஆகஸ்ட் 2019இல் நிறைவேற்றப்பட்டது.

- புதிய ஆணையத்தில் ஒரு தலைவர் 10 முன்னாள் அலுவலர்கள் மற்றும் 22 பகுதிநேர உறுப்பினர்கள் இருப்பார்கள்.
- சீர்திருத்தங்கள் நாட்டின் மருத்துவக் கல்வியை வெளிப்படையான தரமான மற்றும் பொறுப்புணர்வு முறையை நோக்கி நகர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

### முதலாவது கழுகு பாதுகாப்பு மையம்

- அழிந்து வரும் உயிரினமான கழுகுகளைப் பாதுகாப்பதற்காக உத்தரபிரதேச அரசு மகாராஜ்கஞ்ச் மாவட்டத்தின் ஃபரேண்டா பகுதியில் மாநிலத்தின் முதல் கழுகு பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்க மையத்தை அமைக்கிறது.
- ஹரியானாவின் பிஞ்சூர் கழுகு பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்க மையத்தின் அடிப்படையில் இந்த மையம் நிறுவப்பட உள்ளது.

### ஐஎஃப் எஃப்டி - ஆரஞ்சு குறும்பட மற்றும் ஆவணப்படம் திரைப்படம் போட்டி

- சர்வதேச திரைப்பட திருவிழா திரிசூர்- ஆரஞ்ச் குறும்பட மற்றும் ஆவணத்திரைப்பட போட்டியில் "Aavruthi" என்ற திரைப்படம் சிறந்த திரைப்படத்திற்கான விருது வென்றது.
- K.R.கிரண் என்பவர் 'Atom' என்ற படத்திற்காக சிறந்த எடிட்டர் (Editor) என்ற பிரிவில் விருது வென்றார்.

### அசாமில் இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் துவக்கம்

- அசாமில் இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் புதிய கிளைப்பிரிவை மத்திய வேளாண்மைத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தொடக்கிவைத்துள்ளார்.
- "அசாமில் புதிதாக வேளாண்மைத்துறை ஆராய்ச்சி நிறுவனத்தை பிரதமர் மோடி தலைமையிலான அரசு துவங்கியதன் மூலம் அருணாச்சல், மேகாலயா, மணிப்பூர், மிசோரம், நாகாலாந்து, திரிபுரா, சிக்கிம் ஆகிய மாநிலங்களில் வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சி மேம்படும்.
- 2050-ஆம் ஆண்டிற்குள் நாட்டில் மக்கள் தொகை மற்றும் சுற்றுச்சூழல் மாறுபாடு அதிகரிக்கும். இந்த சவாலை எதிர்கொள்ளும் வகையிலும், உணவுப்பற்றாக்குறை ஏற்படுவதை தவிர்க்கும் நோக்கத்திலும் அரசு செயல்பட்டு வருகிறது.

### வீடுகளுக்கு 24 மணி நேரமும் குடிநீர் விநியோகிக்கத் திட்டம்

- தில்லியில் உள்ள வீடுகளுக்கு 24 மணிநேரமும் குடிநீர் விநியோகத்தை உறுதி செய்யும் வகையில் அதனை கண்காணித்து பரிந்துரைக்க ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளதாக முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.
- மழை மற்றும் சேமிப்பு மூலம் தில்லிக்கு கிடைக்கும் நீர் ஆதாரத்தில் அனைத்து மக்களும் சராசரியாக 176 லிட்டர் தண்ணீரைப் பெற முடியும்.

### ஹைதராபாத் விமான நிலையம் பாதுகாப்பான பயணத்திற்காக ஏசிஐ அங்கீகாரம்

- பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஜி.எம்.ஆர் குழுமத்தின் தலைமையிலான ராஜீவ் காந்தி சர்வதேச விமான நிலையத்திற்கு விமான போக்குவரத்து துறையின் உலகளாவிய சங்கமான ஏ.சி.ஐ விமான நிலைய சுகாதார அங்கீகாரம் (ஏ.எச்.ஏ) வழங்கியுள்ளது.
- ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் விமான நிலைய கவுன்சில் இன்டர்நேஷனல் (ஏசிஐ) இந்த விருப்பமான அங்கீகாரத்தைப் பெற்ற முதல் விமான நிலையங்களில் இதுவும் ஒன்றாகும் என்று ஜிஎம்ஆரின் வெளியீடு தெரிவித்துள்ளது.

**மணிக்கு 180 கி.மீ வேகத்தில் செல்லும் இந்தியாவின் முதல் RRTS ரயில் அறிமுகம்**

- இந்தியாவின் முதல் RRTS ரயில் அறிமுகம், இது டெல்லி-மீரட் இடையில் இயங்க உள்ளது.
- டெல்லி-காஜியாபாத்-மீரட் இடையிலான ஓடுபாதையில் நடைபாதையில் மணிக்கு சுமார் 180 கிலோமீட்டர் வேகத்தில் செல்லக்கூடிய பிராந்திய விரைவான போக்குவரத்து அமைப்பு (RRTS) ரயிலின் முதல் தோற்றத்தை இந்த அரசு வெளியிட்டது.
- இந்த வடிவமைப்பு டெல்லியின் சின்னமான தாமரை கோயிலால் ஈர்க்கப்பட்டு பிரதமர் நரேந்திர மோடியின் ‘மேக் இன் இந்தியா’ கொள்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது.
- RRTS-ன் முழு உடல் அமைப்பு பகுதியும் குஜராத்தில் உள்ள பாம்பார்டியரின் சாவ்லி ஆலையில் தயாரிக்கப்படும், இது நிலையான மற்றும் ஆற்றல் திறன் கொண்ட பசுமை ரயில் ஆகும்.
- கதிர்வீச்சு எஃகு வெளிப்புற உடலுடன், இந்த ஏரோடைனமிக் RRTS ரயில்கள் இலகுரக மற்றும் முழுமையாக குளிரூட்டப்பட்டதாக இருக்கும்.

**குவாலியர்-மொரேனா பாலம் நாட்டுக்கு அர்ப்பணிப்பு**

- மத்தியப் பிரதேசத்தில் உள்ள மொரேனா நகரத்தில் ரூ.108 கோடியில் கட்டப்பட்ட 1.420 கிலோமீட்டர் நீளமுடைய பாலம் மத்திய வேளாண், விவசாயிகள் நலன், ஊரக வளர்ச்சி, பஞ்சாயத்து ராஜ் மற்றும் உணவுப் பதப்படுத்துதல் அமைச்சர் நரேந்திர சிங் தோமரால் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.
- ராஜஸ்தானில் உள்ள தோல்பூரையும், மத்தியப் பிரதேசத்தில் உள்ள குவாலியரையும் இணைக்கும் இந்தப் பாலம் திட்டமிட்டபடி கட்டி முடிக்கப்பட்டது.

**பரியதன் சஞ்சீவனி திட்டம்**

- சுற்றுலாத் துறையை புதுப்பிக்க தொழில்முனைவோருக்கு கடன் வழங்க அசாம் அரசு “பரியதன் சஞ்சிவனி திட்டம்” அறிமுகம் செய்து வைத்துள்ளது.
- கோவிட்-19 வைரஸ் தொற்றால் இத்துறை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதால் ரூ.1 லட்சம் முதல் ரூ.20 லட்சம் வரை தொழில் முனைவோர்க்கு கடன் வழங்க திட்டம் தொடங்கி உள்ளது.

**உலகின் நீளமான கேபிள் ஸ்டே பாலம்**



- உலகின் நீளமான கேபிள் ஸ்டே பாலம் ஹைதராபாத்தில் துர்கம் செருவு (Durgam Cheruvu ) என்ற இடத்தில் கட்டப்பட்டுள்ளது.
- தெலுங்கானா மாநிலத்தின் உள்துறை அமைச்சர் ஜி.கிருஷ்ணன் ரெட்டி (G Kishan Reddy) மற்றும் நகர மேம்பாடு மற்றும் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் KT ராமா ராவ் (KT Rama Rao) இப்பாலத்தை திறந்து வைத்தனர்.
- இப்பாலத்தை ரூ.184 கோடியில் எல் & டி நிறுவனம் கட்டி முடித்து உள்ளது.
- 435 மீ நீளம் 25.8 அகலம் மற்றும் 52 கேபிள் கொண்டது.

**கங்கையை தூய்மைப்படுத்துவதற்கான ஆறு முக்கிய திட்டங்களை உத்தரகாண்டில் பிரதமர் துவக்கி வைத்தார்**

- நமாமி கங்கே திட்டத்தின் கீழ் ஆறு மிகப்பெரிய வளர்ச்சித் திட்டங்களை உத்தரகாண்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி காணொலிக் காட்சி மூலம் துவக்கி வைத்தார்.

# 7 சர்வதேச நிகழ்வு



### ஜப்பான், ஆஸ்திரேலியா, இந்தியா இணைந்து புதிய திட்டம்

- ஜப்பான், இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவின் வர்த்தக அமைச்சர்கள் இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் விநியோகச் சங்கிலிகளை உருவாக்க பணியாற்ற ஒப்புக் கொண்டனர்.
- வர்த்தகத்தில் சீனாவின் ஆதிக்கத்தை எதிர்கொள்ள மூன்று நாடுகளும் ஒன்றிணைந்து செயல்பட இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டன.

### இந்தியா, ஜப்பான் இடையே, தரமான ஜவுளிகள் துறையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

- ஜப்பான் நாட்டு சந்தைக்கு ஏற்றவாறு இந்திய ஜவுளிகள் மற்றும் ஆடைகளின் தரத்தை மேம்படுத்துவது, மற்றும் பரிசோதிப்பதற்காக, இந்தியாவின் ஜவுளிகள் ஆணையம் மற்றும் ஜப்பானின் நிசன்கென் தர மதிப்பீடு மையம் ஆகியவற்றுக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காக, பிரதமர் திரு.நரேந்திர மோடி தலைமையில் மேற்கொண்டுள்ளது.
- இதனால், தொழில்நுட்பத் துறைக்கான ஜவுளிகள் மற்றும் துணி வகைகளை இந்தியாவில், பரிசோதிக்கும் பணிகளை, நிசன்கென் தர மதிப்பீடு மையத்தின் சார்பாக ஜவுளிகள் ஆணையம் மேற்கொள்ளும்.

### உலகின் மிகப்பெரிய கடற்படையை கொண்டுள்ள நாடு சீனா

- தற்போது உலகின் மிகப்பெரிய கடற்படையை சீனா பெற்றிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.
- அமெரிக்க ராணுவ தலைமையகமான பென்டகன், அந்நாட்டு நாடாளுமன்றத்திற்கு அளித்துள்ள விரிவான அறிக்கையில், அமெரிக்க கடற்படை 293 போர்க் கப்பல்களை பெற்றுள்ள நிலையில், சீனாவிடம் 350 போர்க் கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்கள் இருப்பதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### உலகளாவிய கண்டுபிடிப்பு குறியீடு பட்டியலில் இந்தியா முன்னேற்றம்




- உலக அறிவுசார் சொத்து நிறுவனம், கார்னெல் பல்கலைக்கழகம் மற்றும் இன்சீட் பிசினஸ் ஸ்கூலும் இணைந்து 2020-ம் ஆண்டுக்கான உலகளாவிய கண்டுபிடிப்பு குறியீடு பட்டியலை வெளியிட்டிருக்கின்றன.
- இந்தப் பட்டியலில் இந்தியா முதல் முறையாக முதல் 50 நாடுகளில் ஒன்றாக நுழைந்துள்ளது. நான்கு இடங்கள் முன்னேறி 48-ம் இடத்தைப் பிடித்துள்ளது.
- உலகிலேயே குறைந்த நடுத்தர வருமானம் ஈட்டும் நாடுகளில் கண்டுபிடிப்பு சார்ந்த குறியீட்டு பட்டியலில் 3-வது முக்கிய நாடாக இந்தியா திகழ்கிறது.
- மேலும் தகவல் மற்றும் தொலைதொடர்பு தொழில்நுட்ப சேவைகள் ஏற்றுமதி, அரசு

இணையதள சேவைகள், அறிவியல் மற்றும் பொறியியல் பட்டதாரிகள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு சார்ந்த பன்னாட்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் பட்டியலில் முதல் 15 இடங்களில் ஒன்றாக இந்தியா இருக்கிறது.

- இதற்கு டெல்லி, மும்பை ஆகிய இடங்களில் உள்ள ஐஐடி.களும், பெங்களூருவில் உள்ள ஐஐஎஸ்சி.யும் முக்கியப் பங்கு வகித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


### ஜி20 வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாடு

- ஜி-20 வெளியுறவுத் துறை அமைச்சர்கள் மாநாடு காணொலி காட்சி வாயிலாக நடைபெற்றது. இம்மாநாட்டிற்கு சவுதி அரேபியா தலைமை தாங்கியது.
- கோவிட்-19 தொற்றுக்கான சோதனைகள் தரப்படுத்தப்பட வேண்டும் என்றும், ஒரு நாட்டில் எடுக்கப்படும் சோதனை முடிவுகள் மற்றும் தனிமைப்படுத்துவதற்கான நடைமுறைகளை மற்ற நாடுகளும் அங்கீகரிக்கும் வகையில் அவை இருக்க வேண்டும் வெளியுறவுத் துறை அமைச்சர் திரு.ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

### இந்திய மருத்துவருக்கு சீனாவில் சிலை

- கடந்த 1938ல் நடந்த இரண்டாவது சீனா-ஜப்பானிய போரின் போது மருத்துவ உதவிக்காக சீனாவுக்கு அனுப்பப்பட்ட ஐந்து இந்திய மருத்துவர்களில் ஒருவர் டாக்டர் துவாரகநாத் கோட்னிஸ் ஆவார்.
- இவரை பெருமைப்படுத்தும் விதமாக சீன அரசு துவாரகநாத் கோட்னிஸ்க்கு வெண்கல சிலை திறக்க உள்ளது.
- சீனாவில் கே திஹீனா என்று அழைக்கப்படும் கோட்னிஸின் வெண்கல சிலை ஷிஜியாஜு வாங்கில் உள்ள மருத்துவ பள்ளியில் முறையாக திறக்க உள்ளது.

### வில்மிங்டன் இரண்டாம் உலகப் போரின் பாரம்பரிய நகரமாக அறிவிப்பு



- இரண்டாம் உலகப் போரின் 75வது ஆண்டு நிறைவு கொண்டாடும் விதமாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், தெற்கு அமெரிக்க மாநிலமான வட கரோலினாவில் உள்ள வில்மிங்டன் இரண்டாவது உலகப் போரின், முதல் பாரம்பரிய நகரமாக அறிவித்துள்ளார்.
- இரண்டாம் உலகப்போரின் போது வில்மிங்டன் வட கரோலினா கப்பல் கட்டும் நிறுவனத்தின் தளமாக இருந்தது அவசர கப்பல் கட்டும் திட்டத்தின் ஒரு பகுதியாக ஐந்து ஆண்டுகளில் 243 கப்பல்கள் கட்டப்பட்டது.

### மூன்றாவது இந்தியா-அமெரிக்க தலைமை உச்சி மாநாடு

- இந்திய , அமெரிக்கா இடையேயான நல்லுறவுக்கான அமைப்பான USISPF-ன் 3-வது தலைமைத்துவ உச்சி மாநாடு நடைபெற்றது.
- தற்போது கரோனா உயிர் காப்பு வசங்கள் உற்பத்தியில் இந்தியா 2-வது இடத்தில் இருக்கிறது.
- உலகின் மிகப் பெரிய வீடுகள் கட்டும் திட்டத்தையும் மரபுசாரா எரிசக்தி உற்பத்தியையும் இந்தியா முன்னெடுத்திருக்கிறது. ரயில், சாலை போக்குவரத்து மேம்படுத்தப்பட்டிருக்கிறது என்று பிரதமர் தெரிவித்தார்.

### இந்தோ பசிபிக்-உக்தி

- தற்போதைய ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவரும் மிகப்பெரிய பொருளாதார நாடுமான ஜெர்மனி இந்தியாவை முக்கியமானதாக கொண்டு இந்தோ-பசிபிக்

உக்தியை வெளியிட்டுள்ளது.

- வங்காள விரிகுடா பகுதியின் முக்கியத்துவம் மற்றும் பொருளாதார, தொழில்நுட்ப துறைகளில் ஜெர்மனியின் உதவியால் சீனாவின் அடாவடியான கொள்கைகளை இந்தியா எதிர்கொள்ள பயனுள்ளதாக இது அமையும்.

### இந்தியா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா இடையே முத்தரப்பு பேச்சுவார்த்தை

- இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்துவதற்கான முயற்சியில் சீனா ஈடுபட்டு வருகிறது. அங்கு ராணுவ மற்றும் பொருளாதார செல்வாக்கை சீனா வேகமாக விரிவுபடுத்தி வருகிறது. இதனால் இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் பதற்றமான சூழல் நீடித்து வருகிறது.
- இந்நிலையில் இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பாக இந்தியா, பிரான்ஸ் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் முதல் முறையாக முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தியது.

### முதல் உலக சூரிய தொழில்நுட்ப உச்சி மாநாடு

- முதல் உலக சூரிய தொழில்நுட்ப உச்சி மாநாடு காணொலி காட்சி மூலமாக செப்டம்பர் 9 அன்று நடைபெற்றது.
- பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். சர்வதேச சூரிய கூட்டணி (ISA), இந்திய வணிக மற்றம் தொழில்துறை (FICCI), இணைந்து இந்த மாநாட்டை ஏற்பாடு செய்தது.
- நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் அடுத்த தலைமுறை தொழில்நுட்பங்கள் குறித்த கவனத்தை ஈர்ப்பது இதன் நோக்கமாகும்.

**சர்வதேச சூரிய கூட்டணி**

- தலைமையிடம் – ஹரியானா (குருகிராம்)
- தொடக்கம் – 2015
- காலநிலை மாற்றம் தொடர்பாக பாரிஸ் கூட்டத்தின் ஒரு பகுதியாக இந்தியா மற்றும் பிரான்ஸ் அமைத்த சூரிய ஒளி நிறைந்த நாடுகளின் கூட்டணி ஆகும்.

### இந்தியா பெண்களுக்கு அதிகாரமளிக்கும் ஐ.நா-வின் முக்கியக் குழுவின் உறுப்பினராகி சாதனை

- இந்தியா இப்போது ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக கவுன்சில் (எக்கோசோக்) உறுப்பினராகிவிட்டது. இந்த செய்தியை ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி டி.எஸ். திருமூர்த்தி உறுதிப்படுத்தினார்.
- இந்தியா இப்போது ஐக்கிய நாடுகள் சபையின் சி.எஸ்.டபிள்யூ உறுப்பினராக 2021 முதல் 2025 வரை நான்கு ஆண்டுகள் உறுப்பினராக இருக்கும்.
- பெண்களின் நிலை குறித்த ஆணையம் (சிஎஸ்டபிள்யூ) ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக கவுன்சிலின் (எக்கோசோக்) செயல்பாட்டு ஆணையமாகும்.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய அமைப்புகளில் ஒன்றாகும். சி.எஸ்.டபிள்யூ பாலின சமத்துவத்தையும் பெண்களின் அதிகாரமளிப்பையும் ஊக்குவிக்கும் ஐநாவின் ஒரு பிரிவாகும்.

### 'கோவிட்-19, 5 நட்சத்திர விமான தரநிலை'

- இத்தாலியின் ரோம் நகரில் உள்ள *Fiumicino International Airport* (FCO) "கோவிட்-19, 5 நட்சத்திர விமான தரநிலை" என்ற சான்றிதழ் பெற்ற உலகின் முதல் விமான நிலையம் ஆகும்.
- இச்சான்றிதழை லண்டனை சேர்ந்த Skytrax நிறுவனம் வழங்கி உள்ளது.
- கோவிட்-19 வைரஸ் தொற்றை தடுக்க சுகாதார வசதிகள் மற்றும் பிற தடுப்பு நடவடிக்கைகள் சிறப்பான முறையில் மேற்கொண்டதால் ஃபியமிசினோ விமான நிலையத்திற்கு ஐந்து நட்சத்திர சான்றிதழ் வழங்கப்பட்டது.
- ஃபியமிசினோ விமான நிலையம் லியோனால்டோ வின்சி சர்வதேச விமான நிலையம் என்றும் அழைக்கப்படுகிறது.

**சர்வதேச ஸ்மார்ட் நகரங்கள் பட்டியலில் இந்திய நகரங்கள் பின்னடைவு**

- சர்வதேச ஸ்மார்ட் நகரங்கள் பட்டியலில் தில்லி, மும்பை, ஹைதராபாத், பெங்களூரு ஆகிய 4 நகரங்களும் பின்னடைவு சந்தித்துள்ளன. அந்த வரிசையில் சிங்கப்பூர் முதலிடத்தில் உள்ளது.
- சிங்கப்பூர் தொழில்நுட்ப பல்கலைக்கழகமும், நிர்வாக மேம்பாட்டு கல்வி நிறுவனமும் இணைந்த 2020ஆம் ஆண்டுக்கான சர்வதேச ஸ்மார்ட் நிர்வாக நகரங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளன.
- தொழில்நுட்ப பயன்பாடு, காற்று மாசு, சுகாதாரம், அடிப்படை வசதிகள், சாலை வசதி உள்ளிட்ட 15 அம்சங்களின் அடிப்படையில் நகரங்கள் வரிசைப்படுத்தப்பட்டன.
- ஹைதராபாத் 85-ஆவது இடம், தில்லி 86-ஆவது இடம், மும்பை 93ஆவது இடம், பெங்களூரு 95-ஆவது இடம்.

**'இந்தியா-ஜப்பான்:புதிய வாய்ப்புகள்'**

- இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் இந்தியா-ஜப்பான் நாடுகளுக்கு இடையேயான புதிய வாய்ப்புகளை பயன்படுத்தி கொள்ள புதிய அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இரு நாடுகளுக்கும் இடையே வாய்ப்புகளை அதிகரிக்க, இந்திய வணிக மற்றும் தொழில்துறை கூட்டமைப்பு – ஷாரூல் அமர்சென்ட் மங்கலாடஷ் என்ற புதிய வாய்ப்பை அறிமுகம் செய்துள்ளது.
- மேலும் இந்தியாவில் அந்நிய நேரடி முதலீட்டை அதிகரிக்க ஜப்பானுக்கு இந்தியா அழைப்பு விடுத்து உள்ளது.

**கொச்சியில் இருந்து இந்தியா - மாலத்தீவு இடையே படகு போக்குவரத்து**

- இந்தியா-மாலத்தீவு இடையே படகு போக்குவரத்து தொடங்குவது தொடர்பாக இரு நாடுகளுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த ஜூன் மாதம் கையெழுத்தானது.
- இந்திய பெருங்கடல் வழியாக கேரள மாநிலம் கொச்சியில் இருந்து 700 கி.மீ. தொலைவில் அமைந்திருக்கும் இந்த நாட்டுக்கு படகு போக்குவரத்து தொடங்கியது.
- இந்த திட்டத்தின்படி கொச்சியில் இருந்து குல்குதுபசி வழியாக தினந்தோறும் படகு மூலம் பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து நடத்தப்படும்.
- இந்திய ஷிப்பிங் கார்ப்பரேஷன் (எஸ்.சி.ஐ) ஆல் இயக்கப்படும் கார்கோ ஃபெர்ரி வெசல் எம்.சி.பி லின்ஸ் இந்தியாவின் தூத்துக்குடி மற்றும் கொச்சின் துறைமுகங்களை மாலத்தீவில் உள்ள குல்ஹுதுஃபுஷி மற்றும் மென் துறைமுகங்களுடன் இணைக்கும்.

**உலகளாவிய காலநிலை மாநாடு**

- 2015 ஆண்டு பாரிஸ் ஒப்பந்தத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு டிசம்பர் 12ம் தேதி உலக காலநிலை உச்சி மாநாட்டை ஐக்கிய நாடுகள் சபையும் பிரிட்டனும் இணைந்து நடத்த உள்ளன.
- இந்நிகழ்ச்சியை ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் மற்றும் இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் ஆகியோர் இணைந்து நடத்த உள்ளனர்.
- பல நாட்டு தலைவர்கள், தனியார் துறை, சிவில் சமூகம் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.
- நவம்பர் 2021இல் கிளாஸ் கோவ்வில் நடைபெற உள்ள ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாட்டிற்கு (COP 26) முன்னதாக இந்த உலக காலநிலை உச்சி மாநாடு நடைபெற உள்ளது.

**உலக ஆபத்து அறிக்கை 2020**

***(World Risk Report 2020)***

- உலக ஆபத்து அறிக்கை 2020-ல் இந்தியா 89வது தரவரிசையில் உள்ளது. உலகளவில் 181 நாடுகள் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.
- இதில் நிலநடுக்கம், வெள்ளம், கடல் மட்டம்

உயர்வு, ஆட்சி, புயல் போன்ற பேரழிவுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

**குறைந்த ஆபத்து உள்ள நாடுகள்**

- *கதார் – 0.31*
- *மால்டா – 0.66*
- *சென்.வின்செண்ட் – 0.81*
- *கிரெனடிடைனல் – 0.81*

| ***Rank*** | ***Country*** | ***World Risk Index*** | ***Category (Based on Risk)*** |
|---|---|---|---|
| *89* | *India* | *6.62* | *Medium Risk* |
| *1* | *Vanuatu* | *49.74* | *Very High Risk* |
| *2* | *Tonga* | *29.72* | *Very High Risk* |
| *181* | *Qatar* | *0.31* | *Very Low Risk* |
| *180* | *Malta* | *0.66* | *Very Low Risk* |

## இந்தியா-ஜப்பான் போர்க்கப்பல்கள் கூட்டு பயிற்சி



- வட அரபுக் கடல்பகுதியில் இந்தியா – ஜப்பான் கடற்படை கூட்டு பயிற்சியில் ஈடுபட்டன. இப்பயிற்சி *"JIMEX"* என்ற பெயரில் நடைபெற்றது.
- இரு நாடுகளுக்கும் இடையேயான பயிற்சி கடந்த *2012*ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. கடந்த *2018* விசாகப்பட்டினத்தில் இப்பயிற்சி நடைபெற்றது.
- இரு நாடுகளுக்கும் இடையே பல ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## இந்தியா-டென்மார்க் பசுமை முக்கியத்துவ பங்களிப்பு குறித்த கூட்டறிக்கை

- இந்தியா மற்றும் டென்மார்க் நாடுகளின் மெய்நிகர் உச்சி மாநாடு *2020* செப்டம்பர் *28* ஆம் தேதி நடைபெற்றது. டென்மார்க் நாட்டு பிரதமர் மெட்டே பிரடெரிக்சென், இந்தியப் பிரதமர் மாண்புமிகு திரு. நரேந்திர மோடி ஆகியோர் இதில் பங்கேற்றனர்.

# 8 தமிழ்நாடு



### 108 ஆம்புலன்ஸ்-ன் முதல் பெண் ஓட்டுநர்

- "108 ஆம்புலன்ஸ் சேவை"-ன் முதல் பெண் ஓட்டுனரை நியமித்துள்ளது தமிழக அரசு. இது நாட்டிலேயே முதல் என்றும், மாநிலத்தின் அவசர நிலையைக் கருத்தில் கொண்டு 118 புதிய ஆம்புலன்ஸ் வாகனங்களை தொடக்கி வைத்தார் தமிழக முதலமைச்சர்.
- எம்.வீரலட்சுமி, "108 ஆம்புலன்ஸ்"-ன் முதல் பெண் ஓட்டுநராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். தேனி மாவட்டம், போடி நாயக்கனூரைச் சேர்ந்தவர் வீரலட்சுமி.

### பட்டாபிராமில் புரிய டைடல் பார்க்

- கோவை, சென்னை - தரமணிக்கு அடுத்ததாக, ஆவடி - பட்டாபிராமில், மூன்றாவதாக, 'டைடல் பார்க்' எனும் தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைய உள்ளது. அதற்கான கட்டுமான பணிகள், 230 கோடி ரூபாய் செலவில் நடந்து வருகின்றன. இந்தியாவின் முதல் 'ஸ்மார்ட் டைடல் பார்க்'கை, 21 அடுக்குமாடி கட்டடமாக கட்டப்பட்டு வருகிறது.

### முழுவதும் டிஜிட்டல் பொருளாதார மாவட்டம்



- தமிழ்நாட்டில் விருதுநகர் மாவட்டம் ஏராளமான சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை கொண்டுள்ளது. குறிப்பாக பட்டாசு மற்றும் அதனுடன் தொடர்படைய துறைகளில் டிஜிட்டல் முறையில் தொழில்கள் நடத்தும் மாவட்டங்களில் முதல் முழு டிஜிட்டல் பொருளாதார மாவட்டமாக விருதுநகர் மத்திய அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- மாவட்டத்தில் உள்ள அனைத்து தொழில்துறை பிரிவுகளும் வணிக நிறுவனங்களும் பணமில்லா பரிவர்த்தனைகளை மேற்கொண்டு வருகிறது.

### தமிழகத்தில் வன்பொருள் உற்பத்தியை 25 சதவீதமாக உயர்த்த தனி கொள்கை

- தமிழகத்தில் வன்பொருள் உற்பத்தியை 16 சதவீதத்தில் இருந்து 25 சதவீதமாக உயர்த்த வகை செய்திட தனித்த கொள்கை வகுக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் மொத்த மின்னணு உற்பத்தியில் தமிழகத்தின் பங்களிப்பு 16 சதவீதமாகும். இதில், தமிழகத்தின் பங்களிப்பு 25 சதவீதமாக உயர்த்தப்படும்.
- 2025-ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தில் மின்னணு துறையின் உற்பத்தி 100 பில்லியன் அமெரிக்கா டாலர்களாக உயர்த்தப்படும்.

### சென்னை ஐஐடி-யில் முதல் முறையாக இணையவழியில் "இண்டர்ன்ஷிப்" தேர்வு

- கல்லூரி வரலாற்றில் முதல்முறையாக, சென்னை ஐஐடியில் பயிற்சி வேலைவாய்ப்புக்கான தேர்வு (இன்டர்ன்ஷிப்) முழுவதும் இணைய வழியிலேயே நடைபெற்றது.
- ஐஐடி வேலைவாய்ப்புக் குழு, 'இன்டர்ன்ஷிப்'

மாணவர்கள் குழு ஆகிய இரண்டும் இணைந்து பல்வேறு சமூக வலைதளங்களுடன் இணைந்து இணையவழி தேர்வுகளை நடத்தின.

### சாதாரண காய்ச்சல், இதர நோய்களுக்கு சிகிச்சை அளிக்க தமிழகம் முழுவதும் 2,000 மினி கிளினிக்

- பொதுமக்களுக்கு வழக்கமாக ஏற்படும் சாதாரண காய்ச்சல் மற்றும் இதர நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில், தமிழகம் முழுவதும் 2,000 மினி கிளினிக் ஏற்படுத்தப்படும் என்று முதல்வர் பழனிசாமி தெரிவித்தார்.
- மாநகராட்சி, நகராட்சி, பெரிய கிராமங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லாத இடங்கள் அடங்கும். அங்கு தேவையான மருத்துவ உபகரணங்கள், மருந்துகளுடன் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு உதவியாளர் இடம்பெறுவர். காய்ச்சல், தலைவலி போன்ற சாதாரண நோய்களுக்கு அங்கு மருந்துகள் வழங்கப்படும்.

### தேசிய கல்வி கொள்கை குறித்து ஆராய 13 பேர் கொண்ட குழு அமைப்பு

- தேசிய கல்வி கொள்கை குறித்து ஆராய்வதற்கு பள்ளிக்கல்வித்துறை செயலர் தலைமையில் 13 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.
- தேசிய கல்விக் கொள்கை குறித்து ஆராய பள்ளிக்கல்வி செயலர் தலைமையில் நிபுணர்கள் குழு அமைக்கப்படுகிறது. குழுவின் உறுப்பினர் செயலராக பள்ளிக் கல்வி ஆணையர் சிஜி தாமஸ் வைத்யன் நியமிக்கப்பட்டுள்ளார்.

### பிரெஞ்சு, ஜெர்மனியில் மொழிபெயர்க்கப்பட்ட பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் வெளியீடு

- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் தேர்வு செய்யப்பட்ட நூல்கள், பிரெஞ்சு மற்றும் ஜெர்மனியில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்த நூல்களை முதல்வர் பழனிசாமி வெளியிட்டார்.

### செயற்கை நுண்ணறிவு மையம் திருச்சியில் திறப்பு

- தேசிய தகவல் தொழில்நுட்ப மையத்தின் சிறப்பு மையமான செயற்கை நுண்ணறிவு மையம் திருச்சியில் தொடங்கி வைக்கப்பட்டது. தேசிய தகவல் தொழல்நுட்ப மையத்தின் இயக்குநர் Dr.மினிஷாஜி தாமஸ் திறந்து வைத்தார்.
- பல்வேறு கல்வி தொழில்நுட்ப வசதிகளுடன் ரூ.1.18 கோடி செலவில் இந்த மையம் அமைக்கப்பட்டது. இந்நிதி உயர்கல்வி நிதி நிறுவனத்தால் வழங்கப்பட்டது.
- இந்த மையம் இஸ்ரோ, டிஆர்டிஓ கப்பற்படை ஆராய்ச்சி வாரியம் உள்ளிட்ட பல்வேறு மத்திய நிறுவனங்களில் இருந்து ரூ.1.27 கோடி மதிப்புள்ள திட்டங்களை பெற்றுள்ளது.

### வேளாண் கல்லூரிகளுக்கான கல்விக் கட்டணம் நிர்ணய குழு அறிக்கை

- வேளாண்மைக் கல்லூரிகளுக்கான கல்விக் கட்டணத்தை நிர்ணயிக்க அமைக்கப்பட்ட நீதிபதி சந்துரு தலைமையிலான குழு தனது அறிக்கையை அளித்தது.
- தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் இணைப்பு தனியார் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் கல்விக் கட்டணத்தை நிர்ணயம் செய்ய, ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி கே.சந்துரு தலைமையில் கல்விக் கட்டணக் குழுவை அரசு நியமித்தது.

### அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பில் 7.5% உள்ஒதுக்கீடு

- அரசுப் பள்ளி மாணவர்களில் நீட் தேர்வில் தேர்ச்சி பெறுவோருக்கு மருத்துவப் படிப்புகளில் 7.5 சதவீதம் உள்ஒதுக்கீடு வழங்க வகை செய்யும் சட்ட மசோதா குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேறியது.

### சென்னையில் 'யூ' வடிவ மேம்பாலம்

- சென்னையில் அமைய உள்ள இரண்டு யூ வடிவ மேம்பாலங்களுக்கு தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி அடிக்கல் நாட்டினார்.

### 3,501 நகரும் நியாய விலைக் கடைகளை தொடங்கி வைத்தார் முதல்வர் பழனிசாமி

- தமிழகத்தில் 3,501 நகரும் நியாய விலைக் கடைகளை முதல்வர் எடப்பாடி பழனிசாமி தொடங்கி வைத்துள்ளார்.
- இந்த திட்டத்தின்படி வாகனங்கள் மூலம் குடியிருப்பு பகுதிகளுக்கே சென்று அத்தியாவசிய பொருட்கள் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- அண்மையில் முதல்வர் எடப்பாடி பழனிசாமி குடியிருப்புகளுக்கு அருகிலேயே அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் பொருட்டு, மாநிலம் முழுவதும் ரூ.9.66 கோடி மதிப்பீட்டில் 3,501 அம்மா நகரும் நியாயவிலைக் கடைகள் தொடங்கப்படும் என அறிவித்திருந்தார்.

### ஊட்டச்சத்து தோட்டம்

- ராசிபுரத்தை அடுத்துள்ள சந்திரசேகரபுரத்தில் ஊட்டச்சத்து தோட்டம் அமைக்கப்பட உள்ளது.
- தமிழக சத்துணவு திட்டத்துக்குப் பயன்படுத்தும் வகையில், சத்துணவு கூடங்கள் சார்பில், காய்கறித் தோட்டங்கள் பராமரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### தமிழகத்தில் சூரிய சக்தி ஆட்டோக்கள்



- தமிழகத்தில் சூரிய சக்தியில் இயங்கும் ஆட்டோக்களை முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி துவக்கி வைத்தார்.
- வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் வகையில், அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளுக்கு முதல்வர் பழனிசாமி அண்மையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது, ரூ.100 கோடி முதலீட்டில் மின்சார ஆட்டோக்களாக மாற்றும் திட்டத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, எம் ஆட்டோ நிறுவனம் ரூ.140 கோடி முதலீட்டில் மின்சாரம் மற்றும் சூரியசக்தி மூலம் இயங்கும் 13 வடிவங்களில் புதிய ஆட்டோக்களை உருவாக்கியுள்ளது.

### இணைய பாதுகாப்பு கொள்கை வெளியீடு

- தமிழக அரசு மற்றும் இந்திய தொழில் கூட்டமைப்பு சார்பில், 'வீடியோ கான்பரன்ஸ்' வழியே, 'கனெக்ட் - 2020' மாநாடு, நடந்தது.
- மாநாட்டில், 'தமிழ்நாடு இணைய பாதுகாப்பு கொள்கை - 2020, தமிழ்நாடு நம்பிக்கை இணைய கொள்கை -2020, தமிழ்நாடு பாதுகாப்பு மற்றும் நெறிமுறை சார்ந்த செயற்கை நுண்ணறிவு கொள்கை - 2020' ஆகியவற்றை, முதல்வர் வெளியிட்டார்.
- தகவல் தொழில்நுட்ப துறையில், தமிழகம் முன்னணியில் உள்ளது. தமிழகத்தை, 'கண்டுபிடிப்பு மையம் மற்றும் அறிவு திறன் தலைநகர்' ஆக மாற்ற, அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

## ரூ.14,000 கோடியில் காவிரி-குண்டாறு இணைப்புத் திட்டம்

- *ராமநாதபுரம், கரூர், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, விருதுநகர் ஆகிய மாவட்டங்கள் பயனடையும் வகையில் ரூ.14 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் காவிரி-குண்டாறு இணைப்புத் திட்டம் வரும் 2021 ஜனவரியில் தொடங்கி நிறைவேற்றப்படும் என தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி கூறினார்.*
- *திட்டத்தின் முதல் கட்டமாக காவிரி முதல் குண்டாறு வரை 259 கி.மீ. நீளமுள்ள கால்வாய் வெட்டப்படவுள்ளது.*

## ஆக்ஸ்போர்டு தடுப்பு மருந்து பரிசோதனை சென்னையில் தொடக்கம்

- *ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் கோவிஷீல்ட் தடுப்பு மருந்தை மனிதர்களுக்கு செலுத்தி பரிசோதிக்கும் நடவடிக்கைகள் சென்னையில் தொடங்கியுள்ளன.*
- *கரோனா தொற்றைத் தடுக்கும் பொருட்டு பிரிட்டனின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகமும், ஒடிஸா மாநிலம், புவனேசுவரத்தைச் சேர்ந்த சீரம் நிறுவனமும் இணைந்து உருவாக்கி உள்ள, 'கோவிஷீல்ட்' என்ற தடுப்பு மருந்தின் பரிசோதனை, இந்தியாவில் தொடங்கப்பட்டுள்ளது.*